



புலோப்பளையூர்

# மயில்வாகனம் விணாசித்தம்பி

அவர்களின் நினைவான

நினைந்துருகல் நினைவேடு

## “விணாசிகம்”

11.08.2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அல்லிப்பளையை பிறப்பிடமாகவும் புலோப்பளையை வாழ்விடமாகவும் பளைநகரின் பிரபல வர்த்தகரும் குகன் ஸ்ரோர்ஸ் உரிமையாளருமான

## அமரர் மயில்வாகனம் வினாசித்தம்பி


அவர்களின் நினைவு சுமந்து வெளிவரும்

# நினைந்துருகல் நினைவேடு

# வினாசிகம்

12.08.2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அர்ப்பணம்!

வினாசித்தம்பி என்ற விற்பன்னர்
விழுதெறிந்து கிளை பரப்பிய
பெருவிருட்சம்
அலுப்பறியா உழைப்பாளி
யாருக்கும் தீங்கின்றி
யாதுமூராய் வாழ்ந்த
பெரும் செல்வன்
நீதிக்கும் அன்புக்கும்
நிதம் பணிந்த பண்பாளன்
பாதமலர் சமர்பித்தோம்
பணிகண்டோம்.

**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிறப்பு
03.07.1944

இறப்பு
12.07.2022

அமரர் மயில்வாகனம்
# வினாசித்தம்பி

திதி நிர்ணய வெண்பா

ஆண்டு சுபகிருது ஆனித்திங்கள் பன்னிரண்டாம் நாளின்
பூண்ட சதுர்த்தசி வளர்பிறையில்
நீண்ட வளர்மதியாய் நிலைத்திருந்த வினாசித்தம்பி
விண்ணுலகம் சென்ற திதி காண்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# தோத்திரப்பாடல்கள்


திருச்சிற்றம்பலம்

## ஐங்கரன் காப்பு

திகட சக்கரச் செம்முகம் ஐந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர வின்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்

## விநாயகர் துதி

வானுலகும் மண்ணுலகும் வாழ மறைவாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத வைந்துகர மூன்றுவிழி நால்வாய்
யானைமுக னைப்பரவி யஞ்சலிசெய் கிற்பாம்



ஏகாம்பரேஸ்வரர் கோவில்.

இத்தகைய தெய்வமணம் கமழும் இப்பதியின் வெளிப் பிராகாரத்தில் ஆயிரங்கால் மண்டபத்தில் விகடசக்கர விநாயகர் எழுந்தருளியுள்ளார்.

திகழ்+தசம் +கரம்

=திகடச்சக்கரம்

பத்து திருக்கரங்கள் மற்றும் செம்முகம் ஐந்துளான். செம்மை பொருந்திய அழகிய ஐந்து முகங்களையும், பத்து திருக்கரங்களையும் கொண்டவர் சிவபெருமான். விநாயகரும் பத்து திருக் கரங்களையும், ஐந்து திரு முகங்களையும் கொண்டவர் என விநாயக புராணம் எடுத்துரைக்கிறது. கச்சியப்ப சுவாமிகள் காஞ்சியில் விகடச் சக்கர விநாயகரை வழிபட்ட பின்னரே தான் கந்தபுராணத்தை இயற்றினார் என்பது வரலாறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சபுராண

# தோத்திரப் பாடல்கள்

## தேவாரம்

முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி யவனிருக்கும் வண்ணங் கேட்டாள்
பின்னை யவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி யானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசா ரத்தைத்
தன்னை மறந்தாள்தன் நாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே

## திருவாசகம்

பாரொடு விண்ணாய்ப் பரந்தஎம் பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஆரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்
ஆண்டநீ அருளிலை ஆனால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே.

## உ

நம் நாட்டில் சமயப் பயிற்சி விநாயக வணக்கத்தை அடிநிலையாகக் கொண்டுள்ளது. தெய்வ வழிபாடு கணபதியிலிருந்தே தொடங்கின்றது. எடுத்த காரியம் எளிதில் இன்பமாக நிறை வேண்டும் என்ற விருப்பம் அனைவர்க்கும் உண்டு. அதற்கு ஓங்கார வடிவமான விநாயகரின் அருட்டுணை இன்றியமையாதது.

ஓங்காரம் பரம்பொருளை உணர்த்துவது. பிரணவமே வேதமூலம் அதுவே எல்லா ஒலிகளுக்கும் மூலகாரணம் எல்லா தேவர்களுக்கும் பிறப்பிடம். குண்டலினி என்னும் மூலநாடியும் அதன் வடிவே.

பிரணவம் என்பது அகரமாகிய சிவமும், உகரமாகிய சக்தியும், மகரமாகிய மலமும் நாதமாகிய மாயையும், பிந்துவாகிய உயிரும் சேர்ந்த ஐந்தன் கூட்டு என்பர். இவற்றில் அகர உகர வடிவமாக விளங்குவது "உ" – பிள்ளையார் சுழி எனப்படும் – இது சிவ சக்திகளின் சேர்க்கை. அது உயிரும் இறையும், சிவமும் சக்தியும் ஒன்று கலந்த உன்னத நிலையின் நல்லடையாளம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக்கண் உடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடைஎம் அற்புதக் கூத்தா
அம்பொன்செய் அம்பலத் தரசே
ஏறணி கொடிஎம் ஈசனே உன்னைத்
தொண்டனேன் இசையுமா றிசைய

## திருப்பல்லாண்டு

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில்
அணியுடை ஆதிரைநாள்
நாரா யணனொடு நான்முகன் அங்கி
இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள்
திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும்
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

ஆதியாய் நடுவு மாகி
அளவிலா அளவும் ஆகிச்
சோதியா யுணர்வு மாகித்
தோன்றிய பொருளு மாகிப்
பேதியா ஏக மாகிப்
பெண்ணுமாய் ஆணு மாகிப்
போதியா நிற்குந் தில்லைப்
பொதுநடம் போற்றி போற்றி



உலகில் நாம் காணும் எப்பொருளுக்கும் தொடக்கம் என்பது ஒன்று உண்டு' அதேபோல் முடிவு என்பதும் ஒன்று உண்டு. தோற்றம் பெற்ற எப்பொருளும் இறுதி நிலைக்கு உட்பட்டதே. ஆனால் உலகில் உள்ள எண்ணற்ற கோடி உயிர்களைப் படைத்திருக்கும் இறைவனுக்குத் தொடக்கமும் இல்லை' முடிவும் இல்லை. அவனை அப்பரம்பொருளைச் சிவன் எனக் கண்டனர் நம் முன்னோர். 'சிவனெனும் நாமம் தனக்கேயுடைய செம்மேனி எம்மான்' என்று அப்பேரருட் பெரும் பிழம்பைப் போற்றினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"முருகு" என்ற சொல்லிற்கு அழகு, இளமை என்று பொருள்படும். ஆகவே முருகன் என்றால் அழகன் என்பதாகும்.

முருகனின் பன்னிரு கரங்களில் இருகரங்கள் தேவர்களையும், முனிவர்களையும் காக்கின்றன. மூன்றாவது கை அங்குசத்தினைச் செலுத்துகிறது. மற்றொரு கை ஆடை உடுத்திய தொடையில் பதிந்திருக்கிறது. ஐந்து மற்றும் ஆறாவது கைகள் வேலைச் சுழற்றுகின்றன. ஏழாவது கை முனிவர்களுக்கு அரும் பொருளை உணர்த்துகிறது. எட்டாவது கை மார்பில் உள்ள மாலையோடு விளங்குகிறது. ஒன்பதாவது கை வளைகளோடு சுழன்று வேள்வியை ஏற்கிறது. பத்தாவது கை மணியை ஒலிக்கிறது. பதினோராவது கை மழையை அருள்கிறது. பன்னிரண்டாவது கை மணமாலை சூட்டுகிறது

# திருப்புராணம்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணநேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் தினிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமானே.

# வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வாங்கு வாழ்ந்து

நிறைவுபெற்ற அமரர் வினாசித்தம்பி அவர்களின்

# வாழ்க்கைச் சரிதம்

பச்சிலைப்பள்ளி என்பது வடமாகாணத்தின் புராண பண்பாட்டு கிராமங்களில் ஒன்றாகும். பச்சிலையில் பள்ளிகொண்ட பரந்தாமன் வழிபடும் தொன்மைமிக்க மல்வில் கிருஸ்ணர் ஆலயத்தில் சீதையை மீட்க வந்த இராமன் வழிபட்டு ஆறிச்சென்ற இடம் என்றும் அதனால்தான் இது பச்சிலைப்பள்ளி என பெயர் பெற்றது எனவும், இலங்கையின் ஆதிக்குடிகளான இயக்கர்களும், நாகர்களும் வாழ்ந்ததால் நாகர்கோவில், இயக்கச்சி போன்ற காரண இடுகுறி பெயர்கள் வழக்குக்கு வந்தன என்றும் இப்பிரதேசம் பற்றிய தொன்மை வரலாற்றில் குறிப்பிடப்படுகிறது. இந்த தொன்மைமிகு கிராமத்தில் அல்லிப்பளையெனும் சிற்றூரில் சைவ வேளாளர் குலத்தினை சார்ந்த மயில்வாகனம் வள்ளிப்பிள்ளை தம்பதியினருக்கு ஆறாவது பிள்ளையாக செல்லக்கடைக்குட்டியாக பிறந்தவரே அமரர் வினாசித்தம்பி அவர்கள் ஆவார். ஆரம்ப கல்விக்காக அல்லிப்பளை சீ.சீ.த.க. பாடசாலையில் கல்வி பயின்றவர். அக்கால வறுமை குடும்பங்களின் வழக்காறுக்கமைய இடை விலகலுக்கு உட்பட்டு தந்தையாருக்கு உதவிய தொழிலை கொண்டு செல்ல மிக சிறிய வயதிலேயே ஈடுபட்டார். தனது உடன் பிறப்புக்களான கனகசபை, துரைராசா, தெய்வானைப்பிள்ளை, தம்பித்துரை, செல்லையா ஆகிய சகோதரர்களை பெற்று கிடைசிப் பிள்ளையாக செல்ல வாழ்க்கை வாழ்ந்தார். திருமண வயதினை அடைந்தபோது அருகில் உள்ள



பிள்ளைகளின் ஆசையை நிறைவேற்றுவது ஒரு புறம் இருந்தாலும், தான் அனுபவித்த கஷ்டங்களை தனது பிள்ளைகள் ஒருபோதும் அனுபவிக்கக் கூடாது என்று நினைப்பது தான் அப்பாவின் இதயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலோப்பளையின் புகழ் பூத்த குடும்பங்களில் ஒன்றான சின்னத்தம்பி அன்னம்மா மணஇணையரின் மகளான தெய்வானை அவர்களை தானே தெரிவு செய்து மணம் புரிந்தார். திருமணம் காரணமாக சிதம்பரப்பிள்ளையை தனது மைத்துனராகவும் பெற்றுக் கொண்டார்.

தனது இல்லறவாழ்வின் இன்பப் பயனால் குசேலா, குகதாஸ், பிறேமதாஸ், கோகிலதாஸ் ஆகிய நான்கு பிள்ளைச் செல்வங்களைப் பெற்று மகிழ்ச்சியடைந்தார். இவரது தொழில் பயணம் நாள்கூலி என்பதிலிருந்தே ஆரம்பித்தது வெறும் **90** ரூபா மாத சம்பளத்துக்கு பணி புரிந்தார். தனது மனையாளின் உதவியோடு இருவரும் இணைந்த சிந்தனையின் மூலம் வணிகமே தமது வாழ்வாதாரத்தை உயர்த்த சிறந்த வழி என கண்டறிந்தனர். நெல்லை அரிசியாக்கி அதனை சந்தையிலே விற்பவர்களுக்கு வழங்கும் உற்பத்தி தொழில் முயற்சியை தமக்குரிய தொழிலாக தேர்வு செய்தனர். இதன் பெருவளர்ச்சி காரணமாக "அரிசிக்கார வினாசித்தம்பி" என்ற அடைமொழி இடுகுறியை தன் பேருடன் சேர்த்துக் கொண்டனர். காலங்கள் ஓடிய வேகத்தில் சிந்தனைகளையும் வளர்த்துக்கொண்டார். ஒரு தொழிலதிபர் நிலைக்கு எவ்வாறு உயர்வது எனச் சிந்தித்தார். அரிசி உற்பத்தியோடு விவசாயத்தையும் தென்னை வளர்ப்பையும் கையிலெடுத்துக் கொண்டார்.



இவற்றின் மூலம் சேகரித்த பணத்தை எப்படி வேறு வழியில் முதலீடு செய்யலாம் என்று சிந்தித்தார்கள். அச்சிந்தனையின் வழியாக பல்பொருள் வாணிப நிலையம் ஒன்றை அமைக்க திட்டமிட்டு அதன் பெறுபேறாக "குகன் ஸ்ரோர்ஸ்" என்கின்ற வியாபாரத் தலம் வெறும் அரிசிக் கடையாக கருக்கொண்டது. பின்னார் அதன் பெருவளர்ச்சி காரணமாக பச்சிலைப்பள்ளிக்கும்,

உன் தேவைகளை நீ கேட்கும்முன் செய்த உன் தந்தைக்கு, அவரின் முதுமை காலத்தில் அவர் கேட்காமல் நீ செய்வதுதான் நல்ல பிள்ளைக்கு அடையாளம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமராட்சிக் கிழக்கிற்கும் பொருட்களை விநியோகிக்கும் வணிக முகவர் நிலையமாக அது பரிணமித்தது. இது அவரின் புகழை உச்சத்துக்கு கொண்டு சென்றது. அவரது உடன்பிறப்பான செல்லையா அவர்களின் மோகன் கூல்பார், மைத்துனராக சுப்பிரமணியத்தின் மணியம் கூல்பார் என்பவற்றுடன் பளை மைய நகரம் இக்குடும்பத்தின் கட்டுப்பாட்டிலேயே இருந்தது. குகன் ஸ்ரோர்ஸின் மற்றொரு பகுதி வியாபாரமாக இளமாறன் பான்சி பலஸ் என்கின்ற துணை நிறுவனமும் இவரால் தொடங்கப்பட்டது.

வாழ்க்கையின் வளர்ச்சிக்கு ஏற்ப தன் பிள்ளைகள் நால்வரையும் கற்றலில் ஈடுபடுத்தியதுடன் அவர்களின் வாழ்க்கையை நிலைப்படுத்துவதற்கான கடமைகளை உரிய பருவத்தில் மேற்கொண்டார். தனது மூத்த மகளான குலேசாவுக்கு மருதங்கேணியை சேர்ந்த விற்பனை திணைக்களத்தின் காசாளராக பணிபுரிந்த சின்னத்தம்பி குணரட்ணம் அவர்களை மணம்முடித்து வைத்ததுடன் இளமாறன் என்ற பேரனையும் இந்துஜா என்ற பேத்தியையும் கண்டு மகிழ்ந்தார். இளமாறன் இங்கிலாந்தில் பொறியியல் துறையில் பட்டதாரியாகவும் பட்ட மேற்படிப்பையும் நிறைவு செய்து இங்கிலாந்தில் பொறியியலாளராக பணிபுரிந்து வருகின்றார். இவர் ஜனனிதா என்ற ஆங்கில பட்டதாரி ஆசிரியரை மணம் முடித்து அவர்கள் மூலம் அபிநயா, அஞ்சலிக்கா என்ற இரு பூட்டப்பிள்ளைகளையும் கண்டு மகிழ்ந்தார். பேத்தி இந்துஜா இலங்கிலாந்து நாட்டில் மருத்தவ சத்திரசிகிச்சைமாணி பட்டத்தை பெற்று மருத்துவராக பணியாற்றி வருவதுடன் மருத்துவத்துறையில் பட்டமேற்படிப்பினையும் பூர்த்தி செய்து இங்கிலாந்தில் பணிபுரிவதுடன் சுஜாகன் என்கின்ற வியாபார முகாமைத்துவத்தில் பட்டத்தையும் மேற்பட்டத்தையும் பூர்த்திசெய்து வங்கிப் பணிப்பாளராக பணிபுரிபவரை



உழைத்து உழைத்து தன் உடல்நிலையை கூட மறந்து குடும்பம் குடும்பம் என ஓடாய் தேய்ந்து இன்றும் என்றும் தன் குடும்பத்திற்காக மட்டும் வாழும் தெய்வம் அப்பா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கை துணையாக இணைத்துக் கொள்ளவுள்ளார். மகனின் நிறைவாக வாழ்வும் பேரப்பிள்ளைகளின் கல்வி உயர்வும் பூட்டப்பிள்ளைகளின் வரவும் அமரரை அதிகம் மகிழ்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. அன்னாரின் மூத்தமகன் குகதாஸ் அவர்கள் யாழ்ப்பாணம் கொழும்புத்துறையை சேர்ந்த பிரபல வர்த்தகர் பீற்றர் அவர்களின் மகள் லதா அவர்களை கரம்பிடிக்கவைத்து மகிழ்ச்சியடைந்தார். காதலின் விருப்பமாய் மலர்ந்த இணைப்பை பெருவிருப்போடு நிறைவேற்றி கஸ்தூரி, மகிழ்ராஜ் ஆகிய பேரர்களை பெற்றுக் கொண்டார்.

நாட்டின் நெருக்கடி காரணமாக இந்தியாவில் குடியேறிய மகனின் குடும்பத்தினரில் கஸ்தூரி கணனி விஞ்ஞான கற்கை நெறியில் தேறி கணனி பொறியியலாளராக பட்டம் பெற்று அதே துறையில் மேற்படிப்பினையும் பூர்த்தி செய்து சிரேஷ்ட ஆலோசகராக நிறுவனத்தில் பணிபுரிகின்றார். இவர் பொருளாதாரத்தில் பட்டம் பெற்று கணக்கியல் முகாமையாளராக பணி செய்யும் பிரகாசன் என்பவரை மணம்முடித்து ஆரியன் என்ற பூட்டக்குழந்தையை பெற்றுக் கொடுத்துள்ளார். பேரன் மகிழ்ராஜ் இந்தியாவின் சென்னை நகரில் பல வியாபார நிலையங்களின் உரிமையாளராக அமரரின் வழியில் பயணித்து பல வியாபார நிலையங்களை கொண்ட தொழிலதிபராக விளங்குகின்றார்.



அன்னாரின் இரண்டாவது மகன் பிரேமதாஸ் அவர்கள் இங்கிலாந்தில் தனது பொறியியல் பட்டத்தை பெற்றுக் கொண்டவர் தற்போது லண்டனில் பிரபல தொழிலதிபராகவும், தபாலதிபராகவும் கடமையாற்றுகின்றார். இவர் அல்லிப்பளையைச் சேர்ந்த சின்னத்துரை அவர்களின் புத்திரி டயாதேவி அவர்களை கைபிடித்து இல்வாழ்க்கையில் சீரோடும் சிறப்போடும் வாழ்ந்து வருகின்றனர். இல்லற இணைவின் பலனான பிரதுஜா, பிரதோஸ் ஆகிய இரு

உன்னை எதிர்பார்த்து பெற்றெடுப்பாள் அன்னை...
உன் எதிர்காலத்தை பெற்றுத் தருவான் தந்தை...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வங்களை பேரப்பிள்ளைகளாக பெற்று மகிழ்ந்தார். பிரதுஜா இங்கிலாந்தில் மருத்துவ கல்லூரி மாணவராகவும் பிரதோஸ் கல்லூரி மாணவராகவும் கல்வி பயின்று வருகின்றனர்.

மூன்றாவது மகன் கோகிலதாஸ் அவர்கள் இங்கிலாந்தில் பொறியியலாளர் பட்டத்தை பெற்றுக் கொண்டவர் தற்போது இலண்டனில் கணித விரிவுரையாளராக கடமையாற்றுகின்றார். இவருக்கு பெரிய பளையைச் சேர்ந்த பஞ்சாட்சரம் அவர்களின் மகள் காந்தரூபி அவர்களை உரிய காலத்தில் மணம் முடித்து வைத்ததன் மூலம் பிரித்திகா, நிதுரசன் ஆகிய இரு பேரப்பிள்ளைகளை பெற்றுக் கொண்டார். பிரித்திகா இங்கிலாந்தில் மருத்துவக் கல்லூரி மாணவியாகவும் நிதுரசன் கல்லூரி மாணவனாகவும் கல்வி பயின்று வருகின்றனர்.

இல்லறவாழ்வில் தனது நாலு பிள்ளைகளையும் உரியவாறு முன்னேற்றிய திருப்பதியின் காரணமாக 8 பேரப்பிள்ளைகளையும் 3 பூட்டப்பிள்ளைகளையும் பெற்று பல நாடுகளுக்கும் சென்று தனது குடும்பத்தினரை பார்த்து மீண்டும் பளைக்கே வந்து குடியிருந்தார். அவரது முயற்சியில் கொள்வனவு செய்யப்பட்ட பல தென்னந் தோட்டங்கள் மூலம் ஓய்வு ஒழிசலற்ற ஒருவராக இவர் இறுதிவரை உற்சாகமாக செயல்பட்டார். நேர்மையும் கண்ணியமும் கட்டுக்கோப்பும் கொண்ட ஒரு மனிதராக இறுதிவரை வாழ்ந்தார். இவரால் பல சிறிய வியாபாரிகள் உருவாக்கப்பட்டனர். பலர் வெளிநாடு செல்வதற்கும் நிதி அளித்தார். பளையின் சிறப்பை சித்தரிக்கும் ஒரு முயற்சியாளராக ஓடி ஓடி உழைத்து செல்வம் சேர்ந்ததகைக்கும் மற்றோருக்கும் பயன் பெற வாழ்ந்த வினாசித்தம்பியரின் வாழ்வும் செயல்களும் என்னென்றும் என் நினைவிடை வாழும்.



ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி

யாருக்கும் தெரியாமல் அழுகின்ற தந்தையின் பாசம் பல நேரங்களில் பிள்ளைகளால் உணரப்படாமலேயே போய்விடுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புத் துணைவியார் புலம்பல்

தொட்டுவிட்ட நாள் முதலாய்
தோளில் இட்டு பார்த்தவரே
விட்டு விட்டுப் போக
விடை கொடுத்த பாவியானேன்
நட்டு விட்டு போன
நற்குடும்பம் விழதெறிந்து
தொட்டு நிற்கிதையா உச்சத்தை
கண்டு மகிழ்ச்சியுற்ற காலங்கள்
இனி - இல்லை யென்று
கண்ணீராய் கதறுகிறேன்
உத்தமரே உங்கள்
உழைப்புக்கு நிகரேது
அத்தனையும் ஓர் நாள்
அஸ்தமித்து போச்சுதய்யா
யார் தருவார் ஆறுதலை
நான் அறியேன் - எந்தையரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடும்ப மகிழ்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைவியுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மனைவி, பிள்ளைகள், பூட்ப்பிள்ளைகள் மற்றும் உற்றார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புப் பிள்ளைகள் புலம்பல்

அப்பாவே எங்கள்

அருமை பெரியவரே

ஆவி பிரியும் வரை

அனுதினமும் காத்தவரே

உச்சத்தை தொட்டு

உலகம் முழுவதிலும்

அச்சத்தை விட்டு நாம்

அகிலம் பவனி வர

உற்சாகத்தோடு உறுதிபகிர்தவரே

கைபிடித்து எம்மை

பள்ளியிலே கால் பதித்த காலம் முதல்

பட்டங்களால் நாம் பரவி பெருமைபெற

உயிர் உருக்கி ஊன் அழித்து

உயர்த்திவிட்ட ஏணியரே

எல்லாம் நிறைவாக இருந்த ஒரு காலத்தில்

பொல்லாத நோய் வந்து

பொழுதில் பிரித்த தயர்

இல்லாதிருந்தால் எப்படி நாம்

மகிழ்வுறுவோம்

நீவிர் வளர்த்த மரம்

நிலைக்கும் விழு தெறியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரப்பிள்ளைகள் புலம்பல்

தாத்தாவே எங்கள் மூத்தவரே
தருணம் அறிந்தெம்மை காத்தவரே
பார்த்த இடமெங்கும் உம் பெயரை
உச்சரிக்கும் போது
உச்சத்தை தொட்டுவைத்த
உத்தமரே
வணிகத்தை விரித்து கொண்டு
வாழப் பழக்கிவிட்டீர்
உலகத்தை சுற்றி வர
உழைப்பை திரட்டி வைத்தீர்
பட்டங்கள் நாம் பெற்று
பார்போற்ற வாழயிலே
தொட்டணைக்க இல்லாமல்
தொலைதூரம் சென்றீரே
தாத்தாவே எங்கள்
தலைமகனே

## பூட்டப்பிள்ளைகள் புலம்பல்

பார்க்கவில்லை உங்கள்
பவள முகமதனை
கேட்கவில்லை உங்கள்
கிளி மொழியை
நாங்கள் முளைப்பதற்குள்
நீங்கள் பறந்த தெங்கே
பூட்டனார் இல்லையென்றே
போகாத காலம் இதில்
நீவிர் இளைப்பாறி
நிம்மதியாய் தூங்குங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகோதரர்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவுகளின் புலம்பல்

உழவுக்கு வந்தனம் தந்த
உயிரொன்றுறங்கியதோ?
நிலமெல்லாம் நிலவாக
நினைத்தபடி முதலாளியாய்
வழமான விவசாயம் வழங்கிட்ட
வள்லாம் விநாசித்தம்பியவர்
வாழ்ந்த விடம் விட்டகன்று வானுலகம் எய்தியதேன்?

அன்னமே அடிவயிற்றின் சின்னமென
அரிசிதனை மூலப் பொருளாக்கி
அளந்ததனைச் சந்தையிலே விற்றதனால்
பொன்மகனார்க்குப் பொறித்த பெயர்
அரிசிக்கார விநாசித்தம்பியன்றோ!

அறத்தியம்மன் பொங்கலிலே
அன்னதானம் செய்வதிலும்
அடியவரின் பங்குண்டு
அகிலம் விட்டகல அறத்தியம்மன் விழித்து நிற்க
அன்னம் உண்ட மக்கள் கூட்டம்
அலறி ஓசை எழுப்பி நிற்க
மண்ணுலக வாழ்வு விட்டு
மறைந்தோடி மாயமென்ன?

முழு நிலவாய் ஓர் மகளும்
முத்தாய் மூ நன் மணிகளும்
முழுமை வாழ்வில் மூழ்கிடவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செமுமை நாடாம் இங்கிலாந்தில்
செழிப்புறு வாழ்வில் மகளுடன ஈர் புத்திரர்
இல்லறவாழ்வுடன் இன்புற
வல்லவன் வகுத்த மூத்த மகனார்
இரண்டாவது பிள்ளையாய்
வாழ்வியல் தன்னை உயிர் மொழி
தமிழை உரைத்திடும்
தென்னாடுடையவன் திருப்பாதம் கண்ட
நன்நாடாம் இந்தியாவின்
தமிழ்நாட்டில் வாழ வைத்தே
மகிழ்வுடன் வாழ வழி செய்த பின்னே
மண்ணுல வாழ்வு
காணும் என்றோ குடிவாழ்
வீடகன்று ஊரகன்று உலகன்று
விண்வாழ் குலதெய்வப் பாதம் சென்றீரோ?
காணிக்கை கண்ணீரான் ஆக்கியதுமேனோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறப்பிலிருந்து...

கவியரசு வைரமுத்து

ஜென்மம் நிறைந்தது சென்றவர் வாழ்க
சிந்தை கலங்கிட வந்தவர் வாழ்க
நீரில் மிதந்திடும் கண்களும் காய்க
நிம்மதி நிம்மதி இவ்விடம் சூழ்க!

ஜனனமும் பூமியில் புதியது இல்லை
மரணத்தைப் போல் ஒரு பழையதும் இல்லை
இரண்டுமில்லாவிடில் இயற்கையும் இல்லை
இயற்கையின் ஆணைதான் ஞானத்தின் எல்லை

பாசம் உலாவிய கண்களும் எங்கே?
பாய்ந்து துழாவிய கைகளும் எங்கே?
தேசம் அளாவிய கால்களும் எங்கே?
தீ உண்டதென்றது சாம்பலும் இங்கே

கண்ணில் தெரிந்தது காற்றுடன் போக
மண்ணில் பிறந்தது மண்ணுடன் சேர்க
எலும்பு சதை கொண்ட உருவங்கள் போக
எச்சங்களால் அந்த இன்னுயிர் வாழ்க

பிறப்பு இல்லாமலே நாளொன்று இல்லை
இறப்பு இல்லாமலும் நாளொன்று இல்லை
நேசத்தினால் வரும் நினைவுகள் தொல்லை
மறதியைப் போல் ஒரு மாமருந்தில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடல் தொடு ஆறுகள் கலங்குவதில்லை
தரை தொடும் தாரைகள் அழுவதும் இல்லை
நதி மழை போன்றதே விதியென்று கண்டும்
மதி கொண்ட மானுடர் மயங்குவதேன்ன !

மரணத்தினால் சில கோபங்கள் தீரும்
மரணத்தினால் சில சாபங்கள் தீரும்
வேதம் சொல்லாததை மரணங்கள் கூறும்
விதை ஒன்று வீழ்ந்திட செடிவந்து சேரும்

பூமிக்கு நாம் ஒரு யாத்திரை வந்தோம்
யாத்திரை தீரும் முன் நித்திரை கொண்டோம்
நித்திரை போவது நியதி என்றாலும்
யாத்திரை என்பது தொடர்கதையாகும்

தென்றலின் பூங்கரம் தீண்டிடும் போதும்
சூரியக் கீற்றொளி தோன்றிடும் போதும்
மழலையின் தேன்மொழி செவியுறும் போதும்
மாண்டவர் எம்முடன் வாழ்ந்திட கூடும்

மாண்டவர் சுவாசங்கள் காற்றுடன் சேர்க !
தூயவர் கண்ணொளி சூரியன் சேர்க !
பூதங்கள் ஐந்திலும் பொன்னுடல் சேர்க!
போனவர் புண்ணியம் எம்முடன் சேர்க !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரிழிவு நோயைத் தடுப்பது எப்படி?

நீரிழிவு நோய் உலகையே அச்சுறுத்தும் வகையில் ஒரு பெரும் பிரச்சினையாக உருவெடுத்து நிற்பது யாவரும் அறிந்ததே. உலகளாவிய அளவில் ஏறத்தாழ 400 மில்லியன் மக்கள் இதனால் பாதிக்கப்படுகின்றார்கள். இன்னும் 15 ஆண்டுகள் செல்ல இத்தொகை 600 மில்லியன்களைத் தாண்டும் என்று எதிர்வுகூறப்படுகிறது.

இந்த நிலையில் நீரிழிவு நோயை வராமல் தடுக்கலாமா? இது நடைமுறைச் சாத்தியமா? அல்லது வெறும் கனவுதானா? இதனை எவ்வாறு நடைமுறைப்படுத்தலாம்? போன்ற வினாக்கள் எம்முன்னே எழுந்துகொண்டிருக்கின்றன. அன்று கண்ட கனவுகள் சில இன்று நிஜமாவது நிச்சயம். நீரிழிவு நோய்த் தடுப்புத் தொடர்பான கனவுகளும் அது போன்றதே.

அன்று சுகபோக வாழ்வு வாழ்ந்த வசதியடைந்த குடும்பங்களிடையே மட்டும் அதிகம் பரவியிருந்த இந்த நோய்கள் இன்று அனைவரையும் அசுர வேகத்தில் தாக்க ஆரம்பித்திருப்பதன் காரணம் என்ன? இது குடும்பங்களின் பொருளாதாரத்திலும் வாழ்வாதாரத்திலும் ஏற்படுத்தும் தாக்கங்களைத் தடுத்து நிறுத்துவது எப்படி? நீரிழிவு நோய் வரும்வரை காத்திருந்து அந்த நோயின் கட்டுப்பாட்டிலும் கவனிப்பிலும் கூடிய கவனம் செலுத்தப்போகின்றோமா? என்று சிந்திக்க வேண்டிய தேவை இருக்கிறது.

இந்த நோய் வேகமாக அதிகரித்து வருவதற்கான அடிப்படைக் காரணங்களாக பின்வருவன அடையாளப்படுத்தப்பட்டிருக்கின்றன:

- ஆரோக்கியமற்ற உணவுப் பழக்கங்களுக்கு நாம் அடிமையாயிருத்தல்
- உடல் களைக்க வேலை செய்யாமலிருப்பதுடன் ஒழுங்கான உடற்பயிற்சி செய்வதில் ஆர்வமற்றவர்களாக இருத்தல்
- உடல் நிறை சரியான அளவில் பேணப்படாமை. எமது உடல் நிறையை எவ்வளவாகப் பேணவேண்டும் என்பதும்கூடத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியாமல் இருத்தல். சிறிதளவு உண்டும் உடல் நிறை தானாகக் கூடியிருக்கிறது என்று கூறித் திருப்தி அடைந்து கொள்ளும் நிலையில் இருத்தல்.

- இரசாயனப் பதார்த்தங்களும் சீனியும் சேர்க்கப்பட்டு போத்தல்களில் அடைத்து விற்பனையாகும் பானங்களை அதிகம் அருந்துதல். தாகம் எடுக்கும்போது சோடா குடித்தல், தேநீருக்கு சீனி சேர்த்தல்.
- மக்களிடையே ஆரோக்கியம் பேணுவது சம்பந்தமான அறிவும், வழிப்புணர்வும் போதாமலிருத்தல். நோய்வாய்ப்பட்டவர்களுக்குத் தான் உணவுக் கட்டுப்பாடும், உடற்பயிற்சியும், நமக்கல்ல என்ற தப்பான அபிப்பிராயம். சிறுவயதில் எதனையும் உண்ண முடியும் என்ற தவறான சிந்தனை.
- நீரிழிவு நோயை ஏற்படுத்தவல்ல சில சுகாதாரப் பிரச்சினைகளை ஆரம்ப நிலையில் கண்டறிந்து ஏற்ற நடவடிக்கைகளை எடுப்பதில் ஆர்வம் அற்றவர்களாக இருத்தல்.

இந்த அடிப்படைப் பிரச்சினைகள் சரியான முறையில் அணுகப்படுமாயின் நீரிழிவு நோய் ஏற்படுவதைத் தடுக்கும் முயற்சி முன்னேற்றம் காணும்.

நீரிழிவு நோய்த்தடுப்பு என்னும் பெரிய முயற்சியை மருத்துவத்துறை சார்ந்தவர்களினால் மட்டும் முன்னெடுத்துச் செல்ல முடியாது. இதற்கு அனைத்துத் தரப்பினரதும் தொடர்ச்சியான முயற்சியும் பங்களிப்பும் தேவைப்படுகின்றது.

பாடசாலை மாணவர்களும், ஆசிரியர்களும் இதில் பெரும் பங்காற்ற வேண்டிய தேவை இருக்கிறது. ஆரோக்கியமான வாழ்க்கைமுறை மற்றும் உணவுமுறை சம்பந்தமாக, பாடசாலை மட்டத்திலும், சமூக மட்டத்திலும் கருத்தரங்குகளையும், விழிப்புணர்வு நடவடிக்கைகளையும் ஏற்பாடு செய்தல். பாடசாலைகளிலும் அலுவலக சிற்றுண்டிச் சாலைகளிலும் ஆரோக்கியமற்ற உணவுப் பாவனை மற்றும் சீனி அதிகம் சேர்க்கப்பட்ட மென்பானங்களின் பாவனையை நிறுத்த நடவடிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்தல். தேநீருக்கு சீனி பாவிப்பதை நிறுத்தி தேவை ஏற்படின் இனிப்பூட்டிகளைப் பாவிக்கும் நடைமுறைகளை ஏற்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளில் கவனம் செலுத்துதல் வேண்டும்.

உடற்பயிற்சி செய்வதை அனைத்துத் தரப்பினர்களுக்குமான கட்டாய நடவடிக்கையாக அறிமுகம் செய்ய வேண்டும். வயது வேறுபாடின்றி அனைத்துத் தரப்பினரையும் உடற்பயிற்சி செய்ய ஊக்கப்படுத்த வேண்டும்.

பெற்றோர்கள் ஒவ்வொருவரும் தமது பிள்ளைகள் தினந்தோறும் ஓடி விளையாடுகிறார்களா? அல்லது உடற்பயிற்சி செய்கிறார்களா? என்பதைக் கவனித்துக்கொள்ள வேண்டும். ஊடகத்துறையானது நோய்த்தடுப்பு நடவடிக்கைகளுக்கும் சுகாதார விழிப்புணர்வு நடவடிக்கைகளுக்கும் கூடிய முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். சுகாதாரத்துறை சார்ந்தவர்களும் நோய்த்தடுப்பு நடவடிக்கைகளுக்கு இன்றும் கூடிய முக்கியத்துவம் கொடுப்பதுடன் மற்றவர்களிற்கும் முன்னுதாரணமாக வாழ முயற்சிக்க வேண்டும்.

முப்பது வயது கடந்த அனைவரும் ஆறு மாதங்களிற்கு ஒரு தடவை தமது குருதி குளுக்கோசின் அளவை சோதித்துப் பார்த்துக் கொள்வது நல்லது. காலை தேநீருக்கு முன் குருதிக் குளுக்கோசின் அளவு 110mg% இலும் அதிகமாக இருந்தால் வைத்திய ஆலோசனையைப் பெற்றுக்கொள்வது அவசியம். குருதிக் குளுக்கோசின் தளம்பல் நிலை ஆரம்பத்திலேயே கண்டறியப்பட்டால் நீரிழிவு ஏற்படுவதைத் தடுத்து நிறுத்த முடியும்.

குறைந்த நிறையுடன் பிறக்கும் குழந்தைகளுக்கு எதிர்காலத்தில் நீரிழிவு நோய் ஏற்படும் சாத்தியக்கூறுகள் அதிகமாகும். எனவே கர்ப்பகாலத்தில் தாய்மார் தமது உணவு முறையில் கவனம் செலுத்த வேண்டும். இதன் மூலம் எதிர்காலத்தில் அவர்களது பிள்ளைகளுக்கு நீரிழிவு நோய் ஏற்படுவதைத் தடுக்க முடியும்.

பரிசுப் பொருட்களைத் தெரிவு செய்யும்போது இனிப்பு வகைகளைத் தெரிவு செய்வதை முற்றாகத் தவிர்க்க வேண்டும். விளையாட்டுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டிகள், பொது நிகழ்வுகள், சுப வைபவங்கள் போன்றவற்றில் சோடா கொடுப்பதை நிறுத்த வேண்டும். வீட்டிற்கு வருபவர்களுக்கு சோடா மற்றும் இரசாயன மென்பானங்கள் கொடுப்பதை நிறுத்த வேண்டும்.

இலகுவில் செய்யக்கூடிய சுவையான மலிவான ஆரோக்கியமான புதிய உணவு வகைகளும் பானங்களும் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். இந்த முயற்சியில் சமையற்கலை வல்லுநர்கள் ஈடுபடுவது அவசியம். இதன் மூலம் ஆரோக்கியமற்ற உணவுப் பாவனைகளைப் பெருமளவு குறைக்க முடியும்.

தற்போது பலர் நீரிழிவு அல்லது மாரடைப்பு நோய்களுக்கு முற்பட்ட நிலைகளிலேயே இனங்காணப்படுகின்றனர். இந்த நிலையை 'மெற்றாபோலிக் சின்ட்றோம்' என்று கூறுவார்கள். இவர்கள் தொடர்ச்சியான தேக ஆரோக்கிய நடவடிக்கைகளில் ஈடுபடாது விட்டால் எதிர்காலத்தில் இவர்களுக்கும் இந்த நோய்கள் ஏற்பட முடியும். இந்த நிலையில் உள்ள சிலரிற்கு நோய்த்தடுப்பிற்காக சில மாத்திரைகளும் கொடுக்க வேண்டிய தேவை ஏற்படுகின்றது. அத்துடன் அதிகரித்த நிறை உள்ளவர்கள் 'அக்கந்தோசிஸ்ணைகிறிக்கன்ஸ்' (Acanthosis nigricans) எனப்படும் கறுப்பு நிறத்தோல் மடிப்பு உள்ளவர்கள், வேறு சில நோய்நிலைகள் உள்ளவர்கள் போன்றோரிற்கு நீரிழிவு நோய் ஏற்படும் சாத்தியக்கூறுகள் அதிகமாகும். இவர்கள் நோய்த்தடுப்பு நடவடிக்கைகளில் அதிக கவனம் செலுத்த வேண்டிய தேவை இருக்கிறது.

நாம் அனைவரும் ஆரம்பத்திலிருந்தே உடல் ஆரோக்கிய நடவடிக்கைகளைக் கடைப்பிடித்து நோய்த்தடுப்பு நடவடிக்கைகளிலும் ஊக்கத்துடன் ஈடுபட்டு வருவோமாக இருந்தால் நீரிழிவு நோயை மட்டுமல்ல இன்னும் பல தொற்றா நோய்கள் ஏற்படும் சந்தர்ப்பத்தைப் பெருமளவு குறைத்துக் கொள்ள முடியும்.

Dr.S.சிவன்சுதன்,
பொது வைத்திய நிபுணர்,
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.
(மங்கை மலரிலிருந்து...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசவழமை

இலங்கை மக்களாகிய நாங்கள் பல்வேறு வகையான சட்டங்களால் ஆளப்பட்டுவருகின்றோம். அவற்றுள் தேசவழமைச் சட்டமும் முக்கியமானதாகும். தேசவழமை என்பது யாழ்ப்பாண மகாகாணத் தமிழர்களுக்கு ஏற்புடையதான ஒரு வழமைச் சட்டமாகும். தேசவழமையானது தென் இந்தியாவில் வாழும் தமிழ் மக்களின் அல்லது திராவிட மக்களின் 3 வழக்காறுகளின் அல்லது வழமைகளின் தொகுப்பாக இருந்தது. பின்னர் ஆதிகாலத்தில் மலபாரிலிருந்து யாழ்ப்பாண மகாணத்துக்கு வந்து சேர்ந்த மலபார் மக்களால் இதுவும் யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

டச்சுக்காரர் இலங்கையை ஆட்சிசெய்து கொண்டிருந்தபோது 1704ம் ஆண்டிலே, யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த தமிழ்மக்களின் வழக்காறுகள் பற்றி விசாரணை செய்து அவற்றைத் தொகுக்கும்படி டச்சுக் கவர்னர் சைமன்ஸ் அவர்கள் யாழ்ப்பாண பட்டினத்தில் திசாவையாக இருந்த கிளாஸ் ஐசாக்ஸ் என்பவரைப் பணிந்திருந்தார். அவரால் தொகுக்கப்பட்ட இந்த ஆவணம் பின்னர் ஒன்று திரட்டப்பட்டுத் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது. இந்த மொழி பெயர்ப்புகள் சரியாக உள்ளனவா என்பதை அறிவதற்காக அவை யாழ்ப்பாண முதலியார்மார் பன்னிரெண்டு பேர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. அம்மொழி பெயர்ப்புகள் சரியாக கவர்னரால் சட்டமாக்கப்பட்டது.

கவர்னர் சைமன்சின் கட்டளையால் திரட்டப்பட்டவாறான யாழ்ப்பாண மாகாண மலபார் வாசிகளின் (அதாவது தமிழ்மக்களின்) வழக்காறுகள் (தேசவழமை) முழுவலுவில் இருப்பதாகக் கருதப்படுதல் வேண்டுமென்று 1806ம் ஆண்டு 18 ஆம் இலக்க ஒழுங்குவிதியில் குறிப்பிடப்பட்டுள்ளது. மலபார் வாசிகளுக்கிடையிலான (தமிழ் மக்களுக்கிடையிலான) எல்லாப் பிரச்சினைகளும் சொல்லப்பட்ட வழக்காறுகளுக்கிணங்கவே தீர்க்கப்படல் வேண்டுமென்றும் இந்த ஒழுங்கு விதியில் கூறப்பட்டுள்ளது. 1814 ஆம் ஆண்டில், பிரதம நீதியரசரான சேர் அலெக்சாண்டர் ஜோன்சன் அவர்கள் தேசவழமையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலத்திற்கு மொழிபெயர்த்தார். அக்காலத்திலிருந்து தேசவழமைச் சட்டம் சட்ட நூலில் இருந்து வருகின்றது.

எனவே தேசவழமைச் சட்டமானது முதன் முதலில் டச்சு மொழியில் தொகுக்கப்பட்டு பின்னர் தமிழ் மொழியிலும் அதன் பின்னர் ஆங்கிலமொழியிலும் மொழிபெயர்க்கப்பட்டு சட்டமாக உள்ளது. எனினும் தேவ வழமைச் சட்டந்தொடர்பில் விரிவாக தமிழ் நூல்கள் எதுவும் இதுவரை வெளிவரவில்லை என்பது பெருங்குறையாகும். இக்குறையைப் போக்க இந்த நூல் ஒரு வழிகாட்டியாக அமையின் அதுவே ஒரு வெற்றியாகும்.

## தேசவழமைச்சட்டம்

நமது நாட்டில் பல சட்டங்கள் நடைமுறையில் இருந்து வருவதாக "சீதனவீடு" நூலில் ஏற்கனவே குறிப்பிட்டிருந்தேன். முன்பு நடைமுறையில் இருந்து வந்த "முக்குவர் சட்டம்" போன்ற சில சட்டங்கள் இன்று வழக்கத்தில் இல்லை. தற்போது பொதுச்சட்டமே இலங்கை முழுவதற்கும் வலுவுடையதாக இருக்கின்றது. பொதுச் சட்டத்துடன். தேசவழமைச்சட்டம், கண்டியர் சட்டம், முஸ்லீம் சட்டம் என்பவையும் நமது நாட்டில் இன்று நடைமுறையில் இருந்து வருகின்றன.

முஸ்லீம் சட்டமானது, முஸ்லீம் மக்களுடைய திருமணங்கள், விவாகரத்து என்பன தொடர்பில் மட்டுமே இன்று பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இந்த விடயங்களைக் கையாள்வதற்காக "காதி நீதிமன்றம்" என்ற தனியான நீதி மன்றங்களே உள்ளன. இங்கு நீதிபதி என்ற அந்தஸ்தில் பணியாற்றும் "காதி" என்பவர் இஸ்லாம் மதத்தவராகவே இருப்பார்.

கண்டியர் சட்டமும் கண்டிச் சிங்கள மக்களுடைய திருமணம், கண்டிச் சிங்களவரிடையே "தீக", "பின்ன" என்ற இருவகையான திருமணங்கள் இருந்து வருகின்றன. ஒவ்வொரு திருமணத்தின் பின்விளைவுகளும் வெவ்வேறானவையாக இருப்பதனால் இது விடயத்தில் கண்டியர் சட்டம் பயன்படுத்தப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் தேசவழமைச் சட்டமானது ஆதனங்கள் தொடர்பிலும், ஆட்கள் தொடர்பிலும் இன்னும் யாழ்ப்பாண மாகாணத்தில் பயன்படுத்தப்பட்டு வரும் வலிமை மிக்க ஒரு சட்டமாக உள்ளது. யாழ்ப்பாண மாகாணம் என்பதற்கான வரைவிலக்கணம் பிறிதொரு. தலைப்பில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

தேசவழமைச் சட்டந்தான் இந்த நாட்டிலே தமிழ் மக்களை அடையாளப்படுத்திக் காட்டும் ஒரு சட்டமாக இருப்பதுடன், தமிழ் மக்கள் இந்த நாட்டில் சட்டப்படியான உரிமை மிக்கவர்கள் என்பதற்குச் சரியான ஆதாரமாகவும் அமைந்துள்ளது. தமிழ்த் தேசிய இனத்தின் வரலாறு தேசவழமைச் சட்டத்தால் உறுதிப்படுத்தப்படுகின்றது.

எனவே தேசவழமைச் சட்டத்தில் ஒரு சில பாதகமான அம்சங்கள் இருப்பினும் கூட தேசவழமைச் சட்டம் தமிழ் மக்களின் தொன்மையையும், வரலாற்றுச் சிறப்பையும், இனத்தன்மையையும் முத்திரையிட்டுக் காட்டுகின்ற சட்டம் என்ற காரணத்தினால் தேசவழமைச் சட்டம் தமிழ் மக்களின் முக்கிய அங்கமாக ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கின்றது.

எனினும் தேசவழமைச் சட்டத்தால் ஆளப்படுகின்ற தமிழ் மக்கள், தேசவழமைச் சட்டத்தைப் பற்றி தெளிவான விளக்கங்கள் இன்றியே வாழ்ந்து வருகின்றார்கள். தற்போது வாழ்ந்து வருகின்ற தமிழ் மக்களில் அறுபது வயதுக்கு மேற்பட்டவர்களில் ஒரு கணிசமான பகுதியினர் தேசவழமைச் சட்டத்தைப் பற்றி ஓரளவு தெளிவுள்ளவர்களாகக் காணப்படுகின்றார்கள். தேசவழமைச் சட்டத்தைப் பற்றி தேடிப் படித்து விளக்கங்களைப் பெற முன்வருவோருக்கு நல்ல வழிகாட்டிகளும் குறைவாகவே உள்ளன.

தமிழ் மக்கள், எதனைத் தவறவிட்டாலும் தேசவழமைச் சட்டத்தை அறிந்து வைத்திருப்பதற்குத் தவறவே கூடாது. ஏனெனில் தேசவழமைச் சட்டமானது, தமிழ் மக்களின் வாழ்வுடன் பின்னிப்பிணைந்துள்ள ஒன்றாகும். தேசவழமைச் சட்டம் சட்டத்தரணிகளுக்கு மட்டும் உரித்தான சட்டம் என்று நாம் ஒதுங்கிக் கொள்ளக்கூடாது. அனைத்துத் தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களும் நன்கு அறிந்திருக்க வேண்டிய வாழ்க்கை வழிகாட்டியே "தேசவழமைச் சட்டம்" என்பதை ஒவ்வொரு வரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

## தேசவழமைச் சட்டத்தின் ஏற்புடைமை

தேசவழமைச் சட்டத்தின் ஏற்புடைமை என்ற தலைப்பின் கீழ் இரண்டு விடயங்கள் பற்றி ஆராயலாம். அவையாவன:

1. தேசவழமைச்சட்டம் எந்தெந்த ஆட்களுக்கு ஏற்புடையதாகும்.
2. இலங்கையின் பொதுச்சட்டம் புறநீங்கலாகக் குறிப்பான இச்சட்டம் எந்தெந்த விடயங்களுக்கு ஏற்புடைத்தாகும் என்பனவாகும்.

முதலாவது பகுதி, ஒரு பொதுவான சட்டமாகும் அது "யாழ்ப்பாண மாகாணத்தின் மலபார்வாசிகள்" என்ற வரைவிலக்கணத்துக்குட்படும் எல்லா ஆட்களுக்கும் ஏற்புடைத்தாகும். இரண்டாவது பகுதி ஒரு நிலம் சார்ந்த இடம் சார்ந்த சட்டமாகும். அது யாழ்ப்பாண மாகாணத்தில் அமைந்துள்ள எல்லாக் காணிகளுக்கும் அவை யாழ்ப்பாண மாகாணத்தின் மலபார் வாசிகளுக்குச் சொந்தமாயினும் சரி வேறொருவருக்குச் சொந்தமாயினும் சரி ஏற்புடையதாகும்.

## தேசவழமைச் சட்டம் யாருக்கு ஏற்புடைத்தாகும்

தேசவழமைச் சட்டமானது இலங்கையிலே வாழ்கின்ற தமிழ் மக்கள் அனைவருக்கும் ஏற்புடையதா என்பது பற்றி பலருக்கும் சந்தேகம் உள்ளது. இது தொடர்பில் காலத்துக்குக் காலம் தேசவழமைச் சட்டம் வரைவிலக்கணப்படுத்தப்பட்ட போதும் தற்போது நிலையான கருத்து உருவாகியுள்ளது.

1806ம் ஆண்டின் 18ஆம் இலக்க ஒழுங்கு விதிக்கு இணங்க யாழ்ப்பாண மாகாணத்தின் மலபார் வாசிகளுக்கு இடையிலான எல்லாப் பிரச்சனைகளும் அல்லது மலபார்வாசி ஒருவர் எதிராளியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கின்றவிடத்து அவை தேசவழமை வழக்காறுகளுக்கு இணங்க முடிவு செய்யப்படல் வேண்டும் என்றிருந்தது.

எனவே "யாழ்ப்பாண மாகாணத்தின் மலபார்வாசிகள்" என்ற வரை விலக்கணத்துக்குட்படும் ஆட்கள் அவ்வொழுங்குவிதியின் நோக்கெல்லைக்குள் அடங்குவர். தேசவழமைச் சட்டமானது, தேசவழமைச் சட்டத்தால் ஆளப்படும் ஆண்களைத் திருமணம் செய்துள்ள மனைவி மாருக்கும் அத்திருமணம் நிலைத்திருக்கின்ற காலத்தின் போது ஏற்புடைத்தாகும் என்பதையும் அறிந்திருக்க வேண்டும். உதாரணமாக யாழ்ப்பாணத் - தமிழரை மணம் புரிந்துள்ள சிங்கள அல்லது முஸ்லிம் பெண்ணுக்கும், குறித்த திருமணம் வலுவில் இருக்கும் வரை தேசவழமைச்சட்டமே ஏற்புடையதாகும்.

## மலபார் வாசிகள் எனப்படுவோர் யார்?

யாழ்ப்பாணத்தின் பழைய வாசிகள் சிலர் மலபாரிலிருந்து வந்தனர். யாழ்ப்பாணத்து மாகாணத்தின் தமிழர்களின் வழக்காறுகள், பழக்க வழக்கங்கள் என்பன இந்திய மலபார் வாசிகளின் வழக்காறுகள், பழக்க வழக்கங்கள் என்பவற்றை ஒத்துள்ளன. ஐரோப்பியர்கள் அதுவும் குறிப்பாக டச்சுக்காரர்கள். யாழ்ப்பாண வாசிகளை அவர்கள் மலபாரிலிருந்து வந்தவர்களோ அல்லது இந்தியாவின் வேறிடங்களிலிருந்து வந்தவர்களோ என்ற வேறுபாடின்றி எல்லோரையும் "மலபார் வாசிகள்" என்றே அழைத்தனர். தேசவழமையை நி முதலில் கோவைப்படுத்தியவரான கிளாஸ் ஐசாக்ஸ் (Class Isac) என்பவர் மலபார் என்ற சொல்லை "தமிழர்" என்று பொருள்படும் சொல்லாகவே பயன்படுத்தினார். இப்பிரச்சினை நீதிமன்றத் தீர்ப்புக்களால் இப்போது தீர்மானிக்கப்பட்டு விட்டது. செட்டி எதிர் செட்டி (37NLR பக்கம் 253) என்ற வழக்கில் "மலபார்" என்பது "தமிழர்" என்று பொருளாகுமென்று தீர்க்கப்பட்டது.

தருமலிங்கம் செட்டி எதிர் அருணாசலம் செட்டி (45NLR பக்கம் 414) என்ற வழக்கில் குட்ஸ் என்ற நீதிபதியின் தலைமையில் அமைந்த உயர் நீதிமன்றம். தேசவழமையானது இலங்கை வாழுமையையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண வேதிவையும் கொண்ட தமிழர் எல்லோருக்கும் ஏற்புடையதாகும் என்று தீர்ப்பு வழங்கியுள்ளது.

தேசவழமைச்சட்டம் ஏற்புடையதாக வேண்டுமென்றால் தமிழர் ஒருவர், தான் யாழ்ப்பாண மாகாண வாசி என்பதை நிரூபித்தல் வேண்டும். ஏனெனில் வடமாகாணத்துக்கு வெளியே வசிக்கும் தமிழருக்கு தேசவழமைச் சட்டம் ஏற்புடையதாகமட்டாது. "வாசி" என்ற சொல் ஏதேனுமிடத்தில் நிரந்தரமாக வசிக்கும் அல்லது வதியும் ஆள் என்று பொருளாகும். "வாசி" அல்லது "வாசம்" என்ற பிரச்சனை தனியார் பன்னாட்டிடைச் சட்டத்தில் உள்ளதுபோல, வாழுமை என்ற விடயத்தை ஆளுகின்ற அதே விதிகளால் ஆளப்படும்.

ஆளொருவர் அவர் தாம் விரும்பும் "வாழுமை" ஒன்றைத் தெரிந்தெடுக்கின்ற வரைக்கும் அவருடைய "மூலவாழுமை" தொடர்ந்திருந்து வருமென்று கருதப்படும். ஆனால் "வாசத்தைப்" பொறுத்தவரை அத்தகைய ஊகம் எதுவும் கிடையாது. வாழுமையானது திருமணத்தின் பின்னர் மாற்றப்படலாம். ஆனால் வாசத்தைப் பொறுத்தவரையில் திருமணமான நேரத்தில் கணவரின் நிரந்தரமான வீடு எது என்பதுதான் கேள்வி. இந்தக் கேள்விக்கு வடமாகாணமென்பது விடையாக அமைந்து, அவர் ஒரு தமிழராக இருப்பின் அவர் தேசவழமையால் ஆளப்படுபவரே ஆவார். (ஆதாரம் வேலுப்பிள்ளை எதிர் சிவகாமிப்பிள்ளை 13NLR பக்கம் 74-78 நாகரத்தினம் எதிர் சுப்பையா 74NLR பக்கம் 54)

## யாழ்ப்பாண மாகாணம் என்பது யாது?

தேசவழமை ஒழுங்கு விதிகள் அவை யாழ்ப்பாண மாகாண மலபார் வாசிகளுக்கு ஏற்புடையதாகுமென்று கூறுகின்றது. யாழ்ப்பாண மாகாணத்தின் பூகோள எல்லைகள் சரியாகக் குறிப்பிடப்படவில்லை "யவ்னா பட்டினம்" என்ற சொல்லமைப்பை யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கும், அருகாமையிலுள்ள பகுதிகளுக்கும் பயன்படுத்தியவர்கள் டச்சுக்காரர்களே. தேசவழமையை வடமாகாண வாசிகளுக்கு ஏற்புடைத்தாக்கலே நீதிமன்ற முடிவுகளின் போக்காக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மறிசல் எதிர் சவரி" என்ற வழக்கில் தேசவழமையானது மன்னார் மாவட்டத்தில் வாழும் தமிழர்க்கும் ஏற்புடையதாகுமென்று தீர்க்கப்பட்டது. "வேலுப்பிள்ளை எதிர் சிற்றம்பலம்" (1372-1376) இராமநாதன் அறிக்கைகள் 114 என்ற வழக்கில் தேசவழமையானது திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களைச் சேர்ந்த தமிழர்களுக்கு ஏற்புடையதாகாது என்று தீர்க்கப்பட்டுள்ளது. இந்தத் தீர்ப்புக்களின் போக்கை நோக்கும்போது தேசவழமையானது வடமாகாணத் தமிழர்களுக்கு மட்டும் ஏற்புடையதாகுமென்பதேயாகும்.

மேலே குறிப்பிடப்பட்டவற்றைத் தொகுத்து நோக்கினால் தேசவழமைச் சட்டம் இரு பகுதிகளைக் கொண்டது என்பது தெளிவாகின்றது. ஒன்று அது "ஆள் சார்" சட்டமாகும். மற்றது அது "இடஞ்சார்" சட்டமாகும்.

"ஆள் சார்" சட்டம் என்னும் போது "யாழ்ப்பாணவாசி" என்ற பதத்துக்குள் உட்படுத்தப்படும் தற்போதைய யாழ்ப்பாண மாவட்டம், கிளிநொச்சி மாவட்டம், முல்லைத்தீவு மாவட்டம், வவுனியா மாவட்டம், மன்னார் மாவட்டம் ஆகிய மாவட்டங்களில் ஏதாவது ஒன்றில் அதாவது வடமாகாணத்தில் நிரந்தர வதிவிட உரிமையையும், வதிவிட எண்ணத்தையும் கொண்ட தமிழர் ஒருவர் தேசவழமைச் சட்டத்தால் ஆளப்பட தகுதியுடையவர் ஆவார்.

யாழ்ப்பாணத்தில் தற்காலிகமாகத் தங்கி வாழும் தமிழர்களுக்கோ, இந்திய வம்சாவழித் தமிழர்களுக்கோ, தமிழ்மொழியைப் பேசும் ஏனைய இனத்தவர்களுக்கோ தேசவழமைச் சட்டம் "ஆள் சார் விடயத்தில் ஏற்புடையதாகாது."

அடுத்து தேசவழமைச் சட்டமானது "இடஞ்சார்" சட்டம் என்கின்ற கருத்தில் மேலே குறிப்பிட்ட ஐந்து மாவட்டங்களிலுள்ள அசையா ஆதனங்கள் அது எவருக்குச் சொந்தமாக இருப்பினும் தேசவழமைச் சட்டத்தாலேயே ஆளப்படும். எனவே இலங்கையின் வடமாகாணத்திலுள்ள காணி ஒன்று அது தமிழருக்குச் சொந்தமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பினும் சரி, முஸ்லீமுக்குச் சொந்தமாக இருப்பினும் சரி, அல்லது சிங்களவருக்குச் சொந்தமாக இருப்பினும் சரி தேசவழமைச் சட்டத்தாலேயே நிர்வகிக்கப்படும். இத்தகைய சிறப்புரிமை இலங்கையில் தேசவழமைச் சட்டம் தவிர வேறு எந்த சட்டத்துக்கும் கிடையாது.

## வாழ்க்கைத்துணைக்கு தேசவழமைச்சட்டம் என்படையதா?

இந்தப் பிரச்சினை பல சந்தர்ப்பங்களில் எழுந்துள்ளது. திருமணத்தின் மூலம் ஒருவர். தான் திருமணத்திற்கு முன்னர் ஆளப்பட்டு வந்த சட்டத்தை கைவிட வேண்டுமா என்பது சிக்கலான கேள்விதான்.

கண்டியர் சட்டம் இந்த விடயத்தில் நோக்கப்பட வேண்டியது முக்கியமாகும். கண்டியர் சட்டம் "தீரு", "பின்ன" என்ற இரு திருமண முறைகளைக் கொண்டுள்ளதால் எந்தத் திருமண முறையில் ஒரு கண்டி சிங்களவர் திருமணம் செய்து கொள்கின்றாரோ, அத்திருமணத்தின் சட்டக் கடப்பாட்டுக்கு அவர் ஆளாகிவிடுவார்.

தேசவழமைச் சட்டந் தொடர்பில் வேலுப்பிள்ளை எதிர் சிவகாமிப்பிள்ளை (13 NLR பக்கம் 74) என்ற வழக்கின் தீர்ப்பு நல்ல தெளிவைத் தருகின்றது. இந்த வழக்கில் யாழ்ப்பாணத் தமிழர் ஒருவர் மட்டக்களப்புக்குச் சென்று அங்கு வாழ்ந்து 1907ஆம் ஆண்டில் இறக்கும்போது மட்டக்களப்பில் பெருந்தொகையான ஆதனங்களை விட்டுச் சென்றார். அவர் 1891 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் திருமணம் செய்து கொண்டு குடும்பத்தை யாழ்ப்பாணத்தில் விட்டு விட்டு மட்டக்களப்புக்குச் சென்றார்.

ஆனால் காலத்திற்குக் காலம் யாழ்ப்பாணத்திற்கு வந்து குடும்பத்தைப் பார்த்துச் சென்றார். 1902 ஆம் ஆண்டில் அவர் தம்முடைய குடும்பத்தை மட்டக்களப்புக்குக் கூட்டிச்சென்று வாழ்ந்து அங்கேயே இறந்தார். இவர்களுடைய விடயத்தில் எழுந்த பிரச்சினை என்னவெனில் இவர்களின் திருமண உரிமைகள் தேசவழமைச் சட்டத்தாலா, அல்லது ரோம - டச்சுச் சட்டத்தாலா ஆளப்பட வேண்டும் என்பதேயாகும். இந்த வழக்கின் நிகழ்வுகளைப் பார்க்கும்போது கணவனும் மனைவியும் யாழ்ப்பாண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாகாணத்தின் மலபார் வாசிகளென்றும், அவர்கள் தேசவழமைச் சட்டத்தால் ஆளப்படுகின்றவரென்றும் அதாவது திருமண வாழ்மைச் சட்டத்தால் ஆளப்படுகின்றனரென்றும் நீதிமன்றம் தீர்மானித்தது.

*1911ஆம் ஆண்டின் 1ஆம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின் (யாழ்ப்பாணத் திருமண உரிமைகளும் வழியுரிமைகளும் கட்டளைச் சட்டத்தின்) 3 ஆம் பிரிவு கூறுவதாவது:*

1. தேசவழமைச் சட்டம் அவளுக்கு ஏற்புடைத்தான பெண் தேச வழமைச்சட்டம் அவருக்கு ஏற்புடைத்தாகாத ஆண் ஒருவனைத் திருமணம் செய்கின்றவிடத்து, அத்திருமணம் நிலைத்திருக்கின்ற காலத்தின் போது, அவள் தேசவழமைச் சட்டத்துக்கு அமைந்தவள் ஆகமாட்டாள்.
2. தேசவழமைச் சட்டம் அவளுக்கு ஏற்புடைத்தாகாத ஒரு பெண் தேசவழமைச் சட்டம் அவருக்கு ஏற்புடைத்தாகின்ற ஓர் ஆணைத் திருமணம் செய்கின்றவிடத்து அவள் அத் திருமணம் நிலைத்திருக்கின்ற காலத்தின் போது, அவள் தேசவழமைச் சட்டத்துக்கு அமைந்தவள் ஆவாள்.

## ஆதனத்திற்கு தேசவழமைச் சட்டம் ஏற்புடையதாதல்

1. அது, வடமாகணத்திலுள்ள அசைவற்ற ஆதனங்கள் யாவற்றுக்கும், அதன் சொந்தக்காரர் எவராயிருப்பினும் ஏற்புடையதாகும்.
2. அது தேசவழமைச் சட்டத்தால் ஆளப்படும் ஆளுக்கும் சொந்தமான ஆதனங்கள் யாவற்றுக்கும். அவை வடமாகாணத்தில் அமைந்துள்ளன வாயினுமாகுக அல்லது இலங்கையில் வேறெப்பாகத்திலும் அமைத்துள்ளன வாயினுமாகுக கணவன் - மனைவியரது பரஸ்பர சொத்துரிமைகள் சம்பந்தப்பட்ட வரைக்கும் ஏற்புடைத்தாகும்.

இந்தப் பிரச்சினை சீலாச்சி எதிர் விஸ்வநாதன் செட்டியார்" (23NLR பக்கம் 97) என்ற வழக்கில் ஆராயப்பட்டபோது பிரதம நீதிபதி பேட்றம் அவர்கள் மேற்கோள், சான்றுகள் பலவற்றைச் சீர்தூக்கிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்த பின்னர் தேசவழமையானது கணவன் மனைவியரது பரஸ்பர ஆதனவுரிமை சம்பந்தப்பட்ட விடயங்களில் ஏற்புடைத்தாகுமென்ற முடிவிற்கு வந்தார். அசையா ஆதனமானது வடமாகாணத்துக்கு வெளியே அமைந்துள்ளவிடத்துத் திருமண உரிமைகளும், வழி உரிமைகளும் சம்பந்தப்பட்ட வரையில் தேசவழமை ஏற்புடைத்தாதல் வேண்டுமென்று தேசவழமை ஆணையாளர்களும் அறிக்கை செய்தனர்.

யாழ்ப்பாணத் திருமண உரிமைகளும் வழியுரிமைகளும் கட்டளைச் சட்டத்தில் "ஏற்புடைத்தாகும்" என்ற சொல்லுக்குப் பதிலாக, "ஏற்புடைத்தாகுமென்பதோடு, அவர்களுடைய அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்கள் தொடர்பிலும் அவை எங்கே அமைந்திருப்பினும் ஏற்புடைத்தாதல் வேண்டும்" என்ற சொற்களைப் புகுத்தியதன் மூலம் தேசவழமை ஆணையாளர்களின் அறிக்கைக்குப் பயன்கொடுக்கப்பட்டது. இந்தத் திருத்தத்தின் பயன் என்னவெனில் யாழ்ப்பாணத் திருமண உரிமைகளும் வழியுரிமைகளும் கட்டளைச் சட்டம் தேசவழமையால் ஆளப்படும் ஆளொருவரின் ஆதனங்கள் எல்லாவற்றுக்கும் அவை வடமாகாணத்தில் இருப்பினும் சரி இலங்கையின் வேறெந்தப் பகுதியில் இருப்பினும் சரி ஏற்புடைத்தாகுதலாகும்.

தேசவழமையால் ஆளப்படும் ஆளொருவர் அசையா ஆதனம் இலங்கையிலே உள்ளவராய் இருந்து, வெளிநாடொன்றில் அவர் இறக்கின்ற விடத்து இறுதிவிருப்பாவணமில்லாப் பின்னுரிமைச் சட்டம் தேசவழமையே ஆகும்.

இவற்றை மேலும் தெளிவுபடுத்துவதானால், வடமாகாணத்துக்கு வெளியேயுள்ள அசையா ஆதனம் ஒன்று தேசவழமைக்கு உட்பட்ட ஒருவனுக்குச் சொந்தமாக இருப்பின், அவனது மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள், வாரிசுகள் குறித்த ஆதனத்துக்கு உரிமை கோரும் சந்தர்ப்பங்களிலும் தேசவழமைச் சட்டமே ஏற்புடைய சட்டமாகும்.

எனவே குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் தேசவழமைச் சட்டம் வடமாகாணத்துக்கு வெளியேயுள்ள அசையா ஆதனங்களையும் கட்டுப்படுத்தும் வலிமை கொண்டுள்ளது. அதேவேளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமாகாணத்துக்கு உட்பட்ட சகல அசையா ஆதனங்களுக்கும், அவை எவருக்குச் சொந்தமாக இருப்பினும் தேசவழமையே அதற்கு ஏற்புடைய சட்டமாக இருக்கும்.

## திருமணம்

தேசவழமைச் சட்டத்தால் ஆளப்படுவோருக்கு

1) திருமண உரிமைகளும், வழியுரிமைகளும் கட்டளைச் சட்டம்

2) மணப்பெண்டிர் ஆதனச் சட்டம்

ஆகிய சட்டங்கள் ஏற்புடையனவாகா.

வாழ்க்கைத் துணைகளின் உரிமைகள், பொறுப்புக்கள் என்பன சம்பந்தப்பட்ட விடயங்களில் தேசவழமைக்குட்பட்டவர்களை யாழ்ப்பாணத் திருமண உரிமைகளும், வழியுரிமைகளும் கட்டளைச் சட்டம் (1911), 1947 ஆம் ஆண்டில் 58 ஆம் இலக்கத் திருத்தக் கட்டளைச் சட்டம் ஆகியன ஆளுகின்றன. இந்தக் கட்டளைச் சட்டங்கள் ஏற்பாடு செய்யாதவிடத்து அத்தகைய வாழ்க்கைத் துணைகளின் திருமண உரிமைகளை உரோம டச்சுச் சட்டங்களே ஆளும்.

செல்லுபடியாகக் கூடிய திருமணத்திற்கு வேண்டியவை

1. திருமணம் செய்யப்போகும் ஆணினதும், பெண்ணினதும் சம்மதம்.
2. பெற்றோரின் சம்மதம்
3. திறந்தவர்கள் தடுக்கப்பட்ட உறவுமுறைக்குள் திருமணம் செய்தலாகாது.
4. திறந்தவர்கள் திருமண வயதை அடந்திருத்தல் வேண்டும்.
5. ஏற்கனவே திருமணம் செய்தவர், அத்திருமணம் வலுவில் இருக்கும் போது இன்னுமொரு திருமணம் செய்தலாகாது.
6. தேவையான சடங்குகள் நிகழ்த்தப்படுதல் வேண்டும்.

மேற்படி ஆறுவிடயங்களும் செல்லுபடியாகக்கூடிய ஒரு திருமணத்திற்குத் தேவையானவை என்று கூறப்பட்ட போதும், குறித்த ஆறு தேவைப்பாடுகளையும் கொண்டிராமல்கூட இன்று சிலர் திருமணம் செய்துகொள்கின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவு செய்யப்பட்டாலொழிய எந்தத் திருமணமும் செல்லுபடியாகா தென்று 1895 இன் 2 ஆம் இலக்கக் கட்டளைச் சட்டம் வெளிப்படுத்தியது. ஆனால் இக்கட்டளைச் சட்டம் அடுத்த ஆண்டில் 1896ம் ஆண்டில் 10 ஆம் இலக்கக் கட்டளைச் சட்டத்தால் நீக்கப்பட்டது.

எனவே சட்டப்படியான திருமணப் பதிவு நடைபெறாவிடினும்கூட ஏனைய தேவைப்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருப்பின் ஒரு திருமணம் நடந்ததாக நீதிமன்றங்கள் ஏற்றுக் கொள்ளும்.

## திருமணத்தின் விளைவுகள்

செல்லுபடியாகும் திருமணமொன்று செய்யப்பட்டதும், அதனால் ஏற்படும் புதிய அந்தஸ்தினால் சட்ட விளைவுகள் சில எழுகின்றன. மனைவியைக் காப்பாற்ற வேண்டிய சட்டக் கடப்பாடு கணவனுக்கு உண்டு. அதே போல அந்தத் திருமணத்தால் பிறந்த பிள்ளைகளையும் அவர்கள் பராயமடையும்வரை பராமரிக்க வேண்டிய சட்டக் கடப்பாடும் அவனுக்கு உண்டு.

1947 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்கக் கட்டளைச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1911 ஆம் ஆண்டின் 1 இலக்க யாழ்ப்பாணத் திருமண உரிமைகளும், வழியுரிமைகளும் கட்டளைச் சட்டத்தின் கீழ் வாழ்க்கைத்துணைகளுக்குள்ள உரிமைகள்:

மேற்படி கட்டளைச் சட்டம் 1911 ஆம் ஆண்டு ஆடி மாதம் 17 ஆம் திகதி நடைமுறைக்கு வந்தது. அது அத்திகதிக்குப் பின்னர் திருமணமான வாழ்க்கைத் துணைகளின் திருமண உரிமைகளையும் அந்தஸ்தையும் ஒழுங்குபடுத்துகின்றது. 1911ஆம் ஆண்டு ஆடி மாதம் 17ம் திகதிக்கு முன்னர் திருமணம் செய்தவர்கள் பழைய தேச வழமையால் ஆளப்படுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆதனத்தின் மீது மனைவிக்குள்ள உரிமைகள்

தேசவழமைச் சட்டத்திற்குட்பட்ட திருமணமான பெண் ஒருத்தி, அசையா ஆதனந் தொடர்பான எந்த உறுதியையும் தனது கணவனுடன் சேர்ந்தே (கணவரின் சம்மதத்துடனேயே) எழுத வேண்டும் என்பது கட்டாயமான விதி ஆகும். அது அவளுடைய தனிப்பட்ட சொத்தாக இருந்தாலும் சரி, தேடிய தேட்டப் பங்கு அல்லது சீதனம், நன்கொடை எப்படியாக இருந்தாலும் இது பொருத்தமாகும்.

இவ்வாறு கணவரின் சம்மதமின்றி மனைவியால் எழுதப்படும் உறுதி ஒரு வெற்றும் வெறிதுமான உறுதியாகிவிடும். "விசயரத்தினம் எதிர் இராசதுரை" (69NLR 145) என்ற வழக்கில் தேசவழமையால் ஆளப்படும். திருமணப்பெண் ஒரு "தனிப்பெண்" அல்லவென்று உயர்நீதிமன்றம் தீர்ப்புக் கூறியுள்ளது. அவள் கணவனின் திருமண ஆதிக்கத்திற்கு அமைந்தவளே. மனைவியின் தனிப்பட்ட அசையா ஆதனத்தை பராதீனப்படுத்த அல்லது ஈடுவைக்க அவளுக்குத் தனது சம்மதத்தைக் கொடுப்பதற்குக் கணவனுக்குள்ள உரிமை அவளது திருமண ஆதிக்கத்தின் ஒரு விளைவேயாகும்.

ஆனாலும் 1911ம் ஆண்டின் 1ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின் 8 ஆம் பிரிவு மனைவியானவள் அவளது கணவனின் சம்மதமின்றி அவளது அசையா ஆதனத்தைக் கைமாற்றலாமென்று கூறுகின்றது. எனினும் அவள் பின்வரும், காரணங்களைக் காட்டி மாவட்ட நீதிமன்றத்தின் அனுமதியைப் பெற்ற பின்னரே அவ்வாறு கைமாற்றம் செய்ய முடியும்:

அ) அவள் கணவனால் கைவிடப்பட்டிருப்பின்,

ஆ) பரஸ்பர இணக்கத்தின் பேரில் அவள் தனது கணவனை விட்டுப் பிரிந்து வாழ்ந்துவருபவரெனின்.

இ) நீதிமன்றத்தின் ஏதாவதொரு கட்டளையால் இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திற்கு அவளது கணவன் சிறையில் இருப்பின்,

ஈ) அவளது கணவன் ஒரு பைத்தியக்காரனாக அல்லது முட்டாளாக அல்லது அவன் எங்கு வாழ்ந்து வருகின்றான் என்பது தெரியாத விடத்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ) அவளது கணவன் நியாயமற்ற முறையில் சம்மதம் தர மறுத்திருப்பின்,
ஊ) மனைவியினதும், பிள்ளைகளினதும் நலனுக்காகக் கணவனின் சம்மதம் தேவையில்லை என்று தெரியுமிடத்து.

மேற்படி காரணங்களில் ஏதாவது ஒன்றை நீதிமன்றில் நிரூபித்து, மாவட்ட நீதிமன்றின் அனுமதியுடன் மட்டுமே மனைவியானவள் தனது தனிப்பட்ட சொத்துக்கள் தொடர்பில் கணவனின் பங்களிப்பின்றி உறுதி ஒன்றை எழுதலாம்.

பொன்னுப்பிள்ளை எதிர் குமாரவேற்பிள்ளை (65 NLR241) என்ற வழக்கில் யாழ்ப்பாணத் திருமண உரிமைகளும் வழியுரிமைகளும் கட்டளைச் சட்டத்தின் 8ம் பிரிவு பெண் ஒருத்தி அவளது கணவனின் சம்மதத்தைப் பெறாமல், அவளது அசைவற்ற ஆதனங்கள் முழுவதையும் தான் விரும்பியவாறு கைமாற்றம் செய்வதற்கான பொது அனுமதியை திருமணப் பெண் ஒருத்திக்கு வழங்குவதற்கான நியாயாதிக்கத்தினை மாவட்ட நீதிமன்றத்திற்கு வழங்கவில்லை என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இந்தப் பிரிவின் கீழ் நீதிமன்றம் ஆனது அனுமதி வழங்கும் நேரத்தில் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள குறிப்பிட்ட உறுதி மாற்றத்திற்கு மட்டுமே அனுமதி கொடுக்கலாம்.

கணவன் - மனைவி இருவரும் சட்டப்படி விவாகரத்துப் பெற்று இருப்பின், அந்தப் பெண் தனக்குரிய அசையா ஆதனங்கள் தொடர்பில் உறுதி எழுதுவதற்கும், மாவட்ட நீதிமன்றத்தின் அனுமதியைப் பெற வேண்டிய அவசியம் இல்லை.

அதேபோல மனைவி தனது அசைவுள்ள ஆதனங்களைத் தனது கணவரின் சம்மதம் இன்றியே வேறொருவருக்கு கையளிக்கத் தடை ஏதும் இல்லை. அத்துடன் அவள் இறுதிவிருப்பாவணம் (Last Will) ஒன்றின் மூலம் அவளது அசையும், அசையா ஆதனங்களை கணவனின் சம்மதம் இல்லாமலே கையுதிர்க்கலாம்.

கணவனை இழந்த விதவைப் பெண்ணும், திருமணம் ஆகாத பாராயடைந்த கன்னிப்பெண்ணும் தனது அசையும், அசையா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதனங்கள் எதனையும் எவரின் சம்மதமும் இன்றி சுயமாக தனியே உறுதி எழுதி கைமாற்றம் செய்யலாம்.

## ஆதனத்தின் மீது கணவனுக்குள்ள உரிமைகள்

தான் திருமணம் செய்வதற்கு முன்னர் ஒருவன் அறுதி வாங்கிய ஆதனத்தையும், அவனுக்கு நன்கொடை, முதுசொம் உரிமை வழியாக வந்தடைந்த ஆதனத்தையும் கணவன் ஒருவன் உறுதி மூலம் கைமாற்றம் செய்வதற்கு முழு உரிமையுடையவன்.

அவனது திருமணத்தின் பின்னர் அறுதி வாங்கிய ஆதனத்தில் கணவனுக்குரித்தான தேடிய தேட்டப்பங்கையும் கணவன் ஒருவர் தன் எண்ணப்படி கைமாற்றம் செய்யலாம். அதாவது தேடிய தேட்டத்தில் சரி அரைப்பங்கை கணவன் தன் எண்ணப்படி எதுவும் செய்யலாம்.

எனினும் சீதன ஆதனத்தையும், மனைவிக்குரிய தேடிய தேட்டப் பங்கு, அவளை வந்தடைந்த நன்கொடை, முதுசொம், உரிமை வழியான ஆதனங்களை கணவன் கைமாற்றம் செய்யமுடியாது.

## நீதிமன்றத்தில் வழக்காடும் உரிமை

குடியியல் வழக்கொன்றில், தேசவழமைக்குட்பட்ட திருமணப் பெண் ஒருவர். அவளது கணவனையும் சேர்த்து கட்சிக்காரராக்காமல் வழக்காளியாகவோ அல்லது எதிராளியாகவோ தோன்ற முடியாது.

எனினும் குற்றவியல் வழக்கு விடயத்தில் தேசவழமைக்குட்பட்ட திருமணப்பெண் ஒருத்தி அவளது கணவனைச் சேர்க்காமலேயே முறைப் பாட்டாளராகவோ, எதிராளியாகவோ தோன்றமுடியும். ஏனெனில் குற்றவியல் விடயங்கள் தேசவழமைச் சட்டத்தால் ஆளப்படுவதில்லை என்பதனாலேயே ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பொழுது தனி ஆதனம் என்ற தத்துவம் இருப்பதால் அவள் தனது தனிப்பட்ட ஆதனத்தை அல்லது சீதன ஆதனத்தை மீட்பதற்காகக் கணவனுக்கு எதிராகவும் வழக்கெடுக்கும் உரிமை கொண்டிருக்கிறாள். அதைப் போலவே திருமண நீக்க வழக்குகளிலும் கணவனுக்கு எதிராக மனைவி வழக்குத் தொடுக்க முடியும்.

சட்டமுறை எதுவேயாயினும் தேசவழமைச் சட்டத்தால் ஆளப்படும் மனைவி, அவள் கணவனுடன் ஒன்று சேர்ந்து வாழும் காலத்தில் (கணவனுக்கு எதிராக மனைவி வழக்குத் தொடுக்கின்ற சந்தர்ப்பங்களில் தவிர) குடியியல் வழக்குகளில் கணவனின் துணையுடன் தான் வழக்காட வேண்டுமென்பது இப்பொழுது உறுதியாகியுள்ளது. இதற்கு இலங்கை பேமன் முறையீட்டு நீதிமன்றம் வழக்கு இலக்கம் 712/92 மீளாய்வு COURT OF APPEALL OF THE IDEMOCRATIC RUPUBLIC OF SRILANKA CASE NO 712/ 92 - REV, I.A.206/92 (D.C.Mt. Lavania No 31/91/RE) என்ற வழக்கில் 1993 வைகாசி 28ம் திகதி வழங்கிய தீர்ப்பு நல்ல ஆதாரமாகவுள்ளது.

## ஆதனம் பற்றிய சட்டம்

தேசவழமைச் சட்டத்தின் கீழ் ஆதனங்கள் பின்வருமாறு வகைப்படுத்தப் பட்டுள்ளது. அவையாவன.

1) முதுசொம்
2) சீதனம்
3) தேடிய தேட்டம்
4) உரிமை

ஒருவனது அல்லது ஒருத்தியின் பெற்றோர் இறப்பதால், அல்லது பெற்றோர் வழி மூதாதையர் இறப்பதனால் வழிவழியாக ஒருவரை வந்தடையும் ஆதனமே "முதுசொம்" எனப்படும்.

நடைபெறவிருக்கும் திருமணத்தை முன்னிட்டு பெற்றோர்கள் தங்கள் மகளுக்குக் கொடுப்பதே சீதனம் எனப்படும். எனினும் சீதனம் திருமணத்தின் முன்னரோ, திருமணத்தின் போதோ அல்லது திருமணத்தின் பின்னரோ கூடக் கொடுக்கப்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணம் நிலைத்திருக்கும் காலத்தில் கணவனால் அல்லது மனைவியால் அல்லது இருவரும் சேர்ந்து விலை கொடுத்து வாங்கப்படும் ஆதனம் தேடிய தேட்டம் கொள்விலை ஆதனம் என்று அழைக்கப்படும்.

பெற்றோர் தவிர்ந்த, அல்லது மூதாதையர் தவிர்ந்த உறவினர் ஒருவர் இறக்கும் போது, வழிவழியாக ஒருவரை வந்தடையும் ஆதனம் உரிமை (அடிநிலை ஆதனம்) எனப்படும்.

இனிமேல் மேற்படி விடயங்கள் தொடர்பில் தனித்தனியாக விபரமாக ஆராய்வோம்.

## முதுசொம்

இதனைச் சுருக்கமாகச் சொல்வதென்றால் மூதாகையர்" ஆதனம் என்று பொருளாகும். ஒருவரது பெற்றோர் இறக்கும் போது விட்டுச் செல்லும் ஆதனங்கள் அவருக்கு முதுசொம்" என்ற பெயரில் வந்தடையும். அதேபோல்) பெற்றோரின் பெற்றோர் (பாட்டன், பாட்டி) அவர்களின் பெற்றோர் (பூட்டன், பூட்டி) போன்றவர்களிடமிருந்து அதாவது பெற்றோர் வழி மூதாதையரிடமிருந்து அவர்கள் இறப்பின் பயனாக ஒருவருக்கு வந்து சேரும் ஆதனங்கள்யாவும் "முதுசொம்" என்றே அழைக்கப்படும்.

முதுசொமாகக் கிடைத்த பணம் அல்லது முதுச ஆதனத்தை விற்று வந்த பணத்தைக் கொண்டு, ஒருவன் தனது திருமணத்தின் பின்னர் ஒரு ஆதனத்தை வாங்கின் அது முதுசொமாக இருக்குமா அல்லது தேடிய தேட்டமாகுமா என்ற விடயத் தொடர்பில் காலத்திற்குக் காலம் மாறுபட்ட கருத்துக்கள் நிலவி வந்துள்ளன.

ஆனாலும் 1947ஆம் ஆண்டின் 58ஆம் இலக்கக் கட்டளைச் சட்டம் இது விடயத்தில் ஒரு தெளிவை ஏற்படுத்தியுள்ளது. இதன்படி முதுசொமான பணம் அல்லது முதுச ஆதனத்தை விற்று வரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணத்திலிருந்து வாங்கும் ஆதனமும் முதுசொமாகவே கருதப்படல் வேண்டும்.

கணவனுடைய முதுச ஆதனத்தில் மனைவிக்கோ அல்லது மனைவியினுடைய முதுச ஆதனத்தில் கணவனுக்கோ பங்கு எதுவும் கிடையாது. முதுச சொத்தை ஒருவர் விட்டு இறக்கும்போது, அது அவரது பிள்ளைகளையே சென்றடையும். வாழ்க்கைத் துணை அதில் உரிமை கோர முடியாது.

## **சீதனம்** (Dowry)

மனைவியால் கொண்டு வரப்படும் ஆதனமே சீதனம் எனப்படும். சீதனமானது, முறையான திருமணத்தைச் செய்து கொள்ளும் ஒரு பெண்ணுக்குக் கொடுக்கப்படுமொன்றேயன்றி, வைப்பாட்டியாயுள்ள ஒரு பெண்ணுக்குக் கொடுக்கப்படுமொன்றல்ல என்று தேசவழமைச் சட்டக்கோவை கூறுகின்றது.

திருமணத்தை முன்னிட்டுக் கொடுக்கப்படுவதே சீதனம் ஆகும். எனினும் திருமணத்தன்றுதான் சீதனங் கொடுக்க வேண்டுமென்ற அவசியம் இல்லை. திருமணத்திற்கு முன்னரோ, திருமணத்தன்றோ, திருமணத்தின் பின்னரோ கூட சீதனம் கொடுக்கப்படலாம். தகப்பன் அல்லது அவர் இறந்திருப்பின் தாய் கொடுப்பதே வழக்கமாகச் சீதனமெனப்படும். எனினும் நடைமுறையில் இருவரும் இணைந்தே சீதனத்தைக் கொடுப்பார்கள். பெற்றோர்கள் இல்லாத பெண்பிள்ளைக்கு, அவளின் சகோதரர்கள் அல்லது நெருங்கிய உறவினர்கள் கூட சீதனங் கொடுப்பது காணப்படுகின்றது. ஆனால் பெற்றோர்கள் அவர்களது பெண் பிள்ளைகளுக்குச் சீதனம் கொடுக்க வேண்டுமென்பது சட்ட ஏற்பாடல்ல என்பதையும் கவனிக்க வேண்டும்.

சீதன ஆதனம், சீதன உறுதிமூலமே கொடுக்கப்படும். சீதன ஆதனங்கள் பற்றியே நாங்கள் இங்கே ஆராய முற்படுகின்றோம். தற்போது இலட்சங்களே முக்கிய சீதனமாகக் கருதப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலட்சங்களை "சீதனம்" என்று அழைப்பதை விட "விலை" (MARKET PRICE) என்று அழைப்பதே மிகப் பொருத்தமாக இருக்கும்.

## சீதன ஆதனம் தொடர்பில் கணவன் - மனைவிக்கிடையேயான உரிமைகளும், கடப்பாடுகளும்

அடுத்து சீதன ஆதனந் தொடர்பில் ஆராய்ந்தால் சீதன ஆதனம் யாருக்குச் சொந்தமானது என்பது பற்றி இன்று வரை பலருக்கு மயக்கமுடையதாகவே இருக்கின்றது. இது விடயத்தில் அதி உயர் கல்வி பெற்றவர்கள் கூடச் சரியான தெளிவின்றியே உள்ளார்கள்.

சீதன ஆதனமானது மனைவியின் தனிப்பட்ட சொத்தாகவே கருதப்படுகின்றது. சீதன உறுதியில் எவ்வாறு எழுதப்பட்டாலும் சீதன ஆதனம் சீதனத்தைப் பெற்றுக் கொள்ளும் பெண்ணுக்கு மட்டுமே சொந்தமாகும். சீதன உறுதியில் மனைவியின் பெயருடன் கணவரின் பெயர் சேர்த்து எழுதப்பட்டாலும் அதனால் கணவனுக்கு சீதன ஆதனத்தில் எதுவித பங்கும் கிடைத்துவிடாது. இதைப் புரியாது இன்றும் பலர் மனைவியின் சீதன ஆதனத்தில் கணவனுக்கும் பங்கிருப்பதாகக் கற்பனை செய்து வருகின்றார்கள். அவ்வாறு செயற்பட்டும் வருகின்றார்கள்.

சீதன ஆதனம் மனைவிக்கு மட்டுமே உரித்தான தனிச் சொத்து ஆகும். கணவனுக்கு அதில் ஒரு துளி நிலம் கூடச் சொந்தமாகாது. சீதனத்தைப் பெற்றுக் கொண்ட பெண், அந்த ஆதனத்தைத் கைமாற்றம் செய்யாமல் இறந்தால் மட்டுமே, அவளது பிள்ளைகளுக்கு அது சமபங்காகச் சென்றடையும். பிள்ளைகளின்றி இறப்பாராயின், சீதனத்தை யார் கொடுத்தர்களோ அவர்களுக்கே அந்த ஆதனம் திரும்பிச் சென்று விடும். சீதனத்தைக் கொடுத்தவர்களும் இறந்திருப்பின் அவளது சகோதரங்களுக்கு அது சமபங்காகச் சென்று சேரும்.

தேசவழமைச் சட்டத்தின்படி, மனைவி தனது ஆதனத்தைக் கைமாற்றம் செய்வதற்காக எழுதும் எந்த உறுதியிலும் கணவனும் கையொப்பமிடல் வேண்டும் என்ற ஒரே ஒரு காரணத்துக்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணவனுக்கு சீதன ஆதனத்தில் எதுவித பங்கும் கிடைத்துவிடப் போவதில்லை. எக்காரணங்கொண்டும் சீதன ஆதனம் கணவனுக்கோ, கணவனைச் சார்ந்தவர்களுக்கோ (கணவன் வழி உறவினர்களுக்கோ) சேரமாட்டாது. 1911ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க யாழ்ப்பாணத் திருமண உரிமைகளும் வழியுரிமைகளும் கட்டளைச் சட்டத்தின்படி கணவனின் கடன்களைக் கொடுத்துத் தீர்ப்பதற்காக மனைவியின் சீதன ஆதனத்தைக் கைப்பற்ற முடியாதெனினும், சீதன ஆதனத்திலிருந்து பெறப்படும் இலாபங்கள் கைப்பற்றப்படலாம். கணவனானவன். சீதன ஆதனத்தை உதாரித்தனம் செய்தால், அது மனைவி இறந்து ஆதனமானது பிரிக்கப்படும் போது கணவனின் தேடிய தேட்டத்தில் இருந்து ஈடுசெய்யப்படுதல் வேண்டும்.

மனைவியின் சீதன ஆதனத்திற்கு கணவனால் திருத்தங்கள் எவையேனும் செய்யப்பட்டிருப்பின், கணவனானவன் மனைவி இறந்த பின்னர் குறித்த சீதன ஆதனம் பங்கிடப்படும் போது தன்னால் செய்யப்பட்ட திருத்தங்களுக்கான பணத்தைக் கோரலாம். ஆனால் பின்னுரிமையாளர் அவ்வாறு கோர முடியாது. மனைவியானவள், கணவனின் எழுத்திலான சம்மதமின்றி அவளது அசைவற்ற ஆதனத்தைக் கைமாற்றம் செய்ய முடியாது. செல்லப்பா எதிர் குமாரசுவாமி" (18NLR பக்கம் 435) என்ற வழக்கு இதற்கு ஆதாரமாகவுள்ளது. மனைவி இறந்த பின்னர் மனைவியின் சீதன ஆகனத்தில் கணவனுக்கும் குறித்த சில ஆதிக்கங்கள் உண்டு.

## சீதன வீடு (Dowry House)

"சீதன வீடு" விடயமாகப் பலரும் பலவிதமான கற்பனைகளைக் கொண்டுள்ளார்கள். திருமணம் நடைபெற்ற நாட் தொடக்கம் சீதன வீடு கணவனுக்கே சொந்தமானது என்றும், சீதன வீட்டில் கணவனுக்கும் சரி அரைவாசிப் பங்கு உண்டென்றும் வாதாடுவோர் இன்றுமுள்ளார்கள்.

இது மட்டுமல்ல, சீதன வீட்டிலிருந்து மனைவியை அடித்துத் துரத்தி விட்டு, கணவன் சீதன வீட்டில் ஏகபோக உரிமை கொண்டாடுவதும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணவனானவன் தனது பெற்றோர்களையோ, சகோதர சகோதரிகளையோ அதில் குடியிருத்தி ஆட்சி செய்வதும் கூட, சில இடங்களில் காணப்படுகின்றது.

சீதன வீட்டை, கணவன்மார் தம் எண்ணப்படி தங்கள் பிள்ளைகளுக்கோ, அல்லது வேறு எவருக்குமோ நன்கொடை கொடுப்பதும், விற்பனை செய்வதும் கூடக் காணக் கூடியதாகவுள்ளது. இவ்வாறு சிலர் உறுதிகள் கூட எழுதியுள்ளார்கள். உறுதி ஒன்று எழுதப்பட்டு விட்டது அல்லது அந்த உறுதி பதியப்பட்டு விட்டுது என்ற ஒரே காரணத்துக்காக மட்டும், இல்லாத உரிமை வந்துவிடப் போவதில்லை.

"சீதன வீடு" என்றுமே மனைவிக்கு மட்டுமே சொந்தமானது. அதில் அவளுடைய கணவனுக்கு பங்கு எதுவுமே கிடையாது. மனைவியுடன் ஒன்றாக வாழும் வரை கணவன் சீதன வீட்டில் வாழ அருகதையுடையவன். மனைவியைச் சீதன வீட்டிலிருந்து வெளியேற்றவும் கணவனுக்கு உரிமையில்லை . மனைவி உயிருடன் இருக்கும் வரை சீதன வீட்டில் அவளது பிள்ளைகளுக்கு பங்கு எதுவும் தானாகக் கிடையாது. அவள் உறுதி எதுவும் எழுதாமல் இறப்பின் மட்டுமே தாயின் சீதன வீட்டில் பிள்ளைகளுக்குப் பங்கு கிடைக்கும் பிள்ளைகளின்றி அவள் இறப்பின் "சீதன வீடு" சீதனத்தைக் கொடுத்தவர்களுக்கே திரும்பிச் சென்றுவிடும். எனவே "சீதன வீடு" திருமணப் பெண்ணின் தனியான சொத்தாகும்.

எனினும் சீதன வீட்டைப் பெற்ற பெண் முதலில் இறந்து, அவளது கணவன் தொடர்ந்து உயிர் வாழ்வானாயின், அவனுக்கு அந்தச் சீதன வீட்டில் சில குறிப்பிட்ட உரிமைகளை தேசவழமைச் சட்டம் வழங்குகின்றது.

சீதன வீடுடைய பெண் ஒருத்தி பிள்ளைகள் இல்லாது இறந்து, அதன் விளைவாக அவளது சீதனவீடு உரித்தாளர்களுக்குப் பங்கிடப்படும்போது, தன்னால் முன்னர் குறித்த சீதன வீட்டுக்குச் செய்யப்பட்ட திருத்தங்கள் மற்றும் அபிவிருத்திக்கான பெறுமதித் தொகையை அவர்களிடம் அவளின் கணவன் கோரலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைத் தெளிவாகப் பின்வருமாறு விளக்கலாம். செல்லையா செல்லம்மா தம்பதிகளின் மகள் இராசம்மா என்பவர் இராசையாவைத் திருமணம் முடித்த போது பெற்றோர்கள் இராசம்மாவுக்கு சீதனவீடு ஒன்றைக் கொடுத்திருந்தார்கள். இரண்டு அறைகள் மட்டும் கொண்டிருந்த அந்த சீதன் வீட்டிற்கு. கணவன் இராசையா புதிதாக ஒரு குசினி, சாப்பாட்டு அறை என்பவற்றைக் கட்டினார். திருமணம் முடிந்து சில வருடங்களால் இராசம்மா மாரடைப்பால் இறந்த போது அவளுக்குப் பிள்ளைகள் எவருமில்லை. தேசவழமைச் சட்டத்தின் படி இராசம்மாவின் சீதனவீடு அவளின் பெற்றோர்களான செல்லையா செல்லம்மா தம்பதியினருக்கு மீண்டும் சென்று விடுகின்றது. கணவன் இராசையா வீட்டை விட்டுவிட்டு வெளியேற வேண்டிய கட்டாயநிலை. அவ்வேளை, இராசையா தன்னால் குறித்த சீதனவீட்டில் கட்டப்பட்ட புதிய குசினி மற்றும் சாப்பாட்டு அறைக்குரிய பெறுமதித் தொகையை தற்போதைய உரித்தாளரான செல்லையா செல்லம்மா தம்பதிகளிடமிருந்து கோரமுடியும்.

பழைய சட்டத்தின்படி, இறந்து போன மனைவியின் ஆதனத்திலிருந்து சீதனம் கொடுக்குமுரிமை கணவனுக்கிருந்தது. ஆனால் 1911 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கக் கட்டளைச் சட்டம் இயற்றப்பட்டதன் பிறகு இந்த ஆதனமானது குறிப்பிட்ட விகிதங்களில் பிள்ளைகளுக்குரியதாகின்றது. ஆகவே உயிரோடிருக்கும் கணவன், இறந்து போன மனைவியின் ஆதனத்திலிருந்து சீதனம் கொடுக்க உரிமையற்றவராவார்.

“சீனிவாசகம் எதிர் சுப்பிரமணியம்” (G5NLR 542) என்ற வழக்கில் தேசவழமைச் சட்டத்தால் ஆளப்படுமொருவர் தேடிய தேட்டம் உடையவராய் இறந்திருப்பின், தப்பியிருக்கும் வாழ்க்கைத்துணை, மற்றப்பிள்ளைகளை வந்தடைந்துள்ள தேடிய தேட்டத்தின் ஏதேனும் பங்கினை முன்னர் திருமணம் செய்த மகள் ஒருத்திக்குச் சீதனம் என்ற முறையில் நன்கொடை கொடுப்பதற்கு உரிமையற்றவர் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. ஆனால் இறந்துபோன வாழ்க்கைத் துணையின் சொத்தானது பராய மடையாத பிள்ளையை வந்தடைகின்றவிடத்து, தப்பியிருக்கும் பெற்றோர், அந்தப் பிள்ளை திருமணமாகும் வரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது பராயமடையும் வரை அந்தச் சொத்தை ஆண்டனுபவிக்கலாம். தப்பியிருக்கும் வாழ்க்கைத் துணை ஆணாக இருந்து, அவர் மறுமணம் புரியின் இந்த உரிமையை இழந்துவிடுவார்.

"ஆறுமுகசாமி ஐயர் எதிர் முத்துக்குமார ஐயர்" (72 NLR 136) என்ற வழக்கில் பராயமடையாத ஒருவரை வந்தடைந்த இறந்து போன ஒருவரின் சொத்தையும், அதன் வருமானத்தையும் யாழ்ப்பாணத் திருமண உரிமைகளும் வழியுரிமைகளும் கட்டளைச் சட்டத்தின் 37ம் பிரிவுக்கிணங்க ஆண்டனுபவித்து வரும் தப்பியிருக்கும் பெற்றோர் அத்தகைய சொத்தின் பாகமாயமையும் காணியில் அவராற் செய்யப்பட்ட திருத்தங்களுக்கு நட்ட ஈடாக அந்தப் பிள்ளை பராயமடைந்ததன் பிறகு நட்டஈடு கோரமுடியாதென்று தீர்க்கப் பட்டது. அத்தகைய விடயத்தில், தப்பியிருக்கும் பெற்றோரானவர், அந்தப் பராயமடையாதவரின் ஆதனத்தை ஆட்சிசெய்தல், அதிலிருந்து வரும் வருமானத்தை அனுபவித்தல் என்பன தொடர்பிலான உரிமைகளைப் பொறுத்தவரையில் "பயனுகரி" ஒருவரின் அதே நிலையிலேயே உள்ளார்.

## நன்கொடையும், சீதனமும்

நன்கொடைக்கும், சீதனத்துக்கும் இடையில் உள்ள வேறுபாடுகளையும் நன்கு தெரிந்து கொள்ளல் வேண்டும். இரண்டுமே விலை கொடுத்து வாங்காத சொத்தாக இருப்பதனால் இரண்டுமே ஒன்றுதான் என்ற அபிப்பிராயமும் பலரிடம் உண்டு. ஆனால் நன்கொடை வேறு, சீதனம் வேறு என்பதே உண்மையாகும்.

திருமணத்தை முன்னிட்டுக் கொடுக்கப்படுவதே சீதனம் ஆகும். எனினும் திருமணத்தன்றுதான் சீதனங் கொடுக்க வேண்டுமென்று அவசியம் இல்லை. திருமணத்துக்கு முன்னரோ, திருமணத்தன்றோ, திருமணத்தின் பின்னரோ கூட சீதனம் கொடுக்கப்படலாம். சீதனங் கொடுக்கப்பட்டால் கொடுக்கப்பட்டது தான். பின்னர் எக்காரணங் கொண்டும் அதனைக் கைமீட்க முடியாது. நடைபெற்ற திருமணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறிவடைந்தாலும் கூட சீதனம் அதனைப் பெற்றுக்கொண்ட பெண்ணுக்கே உரியதாகும். சீதனத்தைப் பெற்றுக்கொண்ட பெண் அதனைக் கைமாற்றம் செய்யாமலும், வாரிசுகளின்றியும் இறந்தால் மட்டுமே சீதன ஆதனம் அதனைக் கொடுத்தவருக்கு திரும்பவந்துசேரும்.

அசையாத ஆதனத்தைச் சீதனமாகப் பெற்றுக்கொண்ட பெண் அதன் பின்னர் அவளது பெற்றோர்கள் இறப்பின் அவர்கள் சொத்தில் பங்கு கோரமுடியாது. ஆனால் அசையா ஆதனத்தைச் சீதனமாகப் பெறாது, நன்கொடையாகப் பெற்றுக்கொண்ட பெண், பெற்றோர்கள் இறந்த பின்னர் பெற்றோர்கள் சொத்தில் பங்கு கோர உரித்துடையவளாவாள். இதுவே நன்கொடைக்கும், சீதனத்துக்கும் இடையேயான முக்கிய வேறுபாடாகும்.

நன்கொடை சில கட்டுப்பாட்டுக்கு அமைவாகக் கொடுக்கப் பட்டிருப்பின் குறித்த கட்டுப்பாடு மீறப்படின் குறித்த நன்கொடையை நன்கொடை கொடுத்தவர் கைமீட்கலாம். மாவட்ட நீதிமன்றத்தின் அனுமதியுடனும் நன்கொடை கைமீட்கப்படலாம். ஆனால் சீதனத்தைக் கொடுத்த பின்னர் எக் காரணங்கொண்டும் கைமீட்கப்பட முடியாது. எனவே சீதனத்துக்குள்ள வலிமை நன்கொடைக்குக் கிடையாது. கணவனுக்கு நன்கொடையாகக் கிடைத்த ஆதனத்தில் மனைவிக்கு உரிமை எதுவுமில்லை. அதேபோல மனைவிக்கு நன்கொடையாக கிடைத்த ஆதனத்தில் கணவனுக்கு உரிமை எதுவுமில்லை. நன்கொடை பெற்றவர் பிள்ளைகளின்றி இறப்பின் அச்சொத்து நன்கொடை கொடுத்தவருக்கே திரும்பச் சென்றுவிடும்.

திருமணத்துக்கு முன்னரே ஒரு பெண்ணுக்கு அவளது பெற்றோர் தங்கள் பெறுமதியான வீட்டை நன்கொடையாகக் கொடுத்து விடுகின்றார்கள். எனினும் திருமணப் பேச்சின் போது மணமகனின் பெற்றோர், குறித்த வீட்டைச் சீதனமாக எழுதித் தந்தால் தான் நாங்கள் திருமணத்துக்குச் சம்மதிப்போம் என்று பெண் வீட்டாருக்கு நிபந்தனை இடுகின்றார்கள். இவ்வாறான சிக்கல்களை நாங்கள் நடைமுறையில் சந்திக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவே சட்டத் தெளிவின்மையின் வெளிப்பாடாகும். சீதன உறுதி எழுதப்படும் போது, மணமகனின் பெயர் மணமகளின் பெயருடன் சேர்த்து உ+ம்: கந்தசாமி பாஸ்கரன் பெண் சியாமளா என்று எழுதப்படுவதால் தங்கள் மகனுக்கு சீதன ஆதனத்தில் பங்கு கிடைத்துவிடுவதாகப் பெற்றோர்கள் தவறான அபிப்பிராயம் கொண்டே இவ்வாறு நிபந்தனை விதிக்கிறார்கள். ஆனால் மணமகளுக்கான நன்கொடை அல்லது சீதனத்தில் மணமகனுக்கு எதுவித பங்கும் கிடைக்கமாட்டாது. இரண்டுமே மணமகளுடைய தனிப்பட்ட சொத்தாகும். தேடிய தேட்டச் சொத்தில் மட்டுமே கணவனுக்கும் மனைவிக்கும் பங்கு கிடைக்கும். வேறு எந்தச் சொத்திலும் வாழ்க்கைத் துணை ஒருவர் மற்றவரின் சொத்தில் பங்கு கோர முடியாது.

தெளிவாகச் சொல்வதானால் கணவனும் மனைவியும் தங்களுடைய தேடிய தேட்டச் சொத்தில் மட்டுமே பங்கு பெறும் உரிமையுடையவர்கள் ஆவர். முதுசொம், சீதனம், நன்கொடை உரிமை வழியான சொத்து என்பன அதனைப் பெற்றுக் கொண்டவர்க்கு மட்டுமே தனிப்பட்ட சொத்தாகும். இவற்றில் திருமணத் துணைக்கு பங்கு எதுவும் கிடைக்கமாட்டாது.

நன்கொடை என்பது எவரும், எவருக்கும் எப்போதும் கொடுக்கப் படலாம். எத்தனை தடவையும் கொடுக்கப்படலாம். ஒருவர் இவ்வாறு தனது வாழ்நாளில் பல நன்கொடைகளைப் பலரிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும். நன்கொடை பெற்றுக் கொள்வதற்கு ஆண் பெண் என்ற பால் வேறுபாடு கிடையாது. இன்னும் சொல்லப் போனால் கணவன் தனது மனைவிக்கோ அல்லது மனைவி தனது கணவனுக்கோ கூட நன்கொடை கொடுக்கலாம்.

ஆனால் சீதனம் என்பது ஒருதடவைதான் கொடுக்கப்படும். திருமணத்தை முன்னிட்டு மட்டுமே சீதனங் கொடுக்கப்படலாம். பெண்கள் மட்டுமே சீதனத்தைப் பெறும் உரித்துடையவர்கள். கணவன் தனது மனைவிக்கோ அல்லது மனைவி தனது கணவனுக்கோ சீதனங் கொடுக்க முடியாது. கொடுக்கப்பட்ட சீதனத்தை பின்னர் ஒருபோதும் கைமீட்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிச் சீதன உறுதிக்கும். நன்கொடை உறுதிக்கும் உள்ள ஒற்றுமை களை ஆராய்வோம். இந்த இரு உறுதிகளும் எழுதப்படும் போது கொடுப்பவர்களுடன். பெறுபவர்களும் உறுதியில் கையொப்பமிடல் வேண்டும் அதாவது ஒருவர் ஒருபகுதியினர் அசையாஆதனத்தைச் சீதனமாக அல்லது நன்கொடையாகக் கொடுக்கும்போது, அதனைப் பெறுபவர் குறித்த உறுதியில் ஒப்பமிட்டு அதனை ஏற்கவேண்டும். இதுவே இவை இரண்டுக்குமிடையேயான முக்கிய ஒற்றுமையாகும்.

அத்துடன் சீதன உறுதியோ அல்லது நன்கொடை உறுதியோ எழுதப்படும்போது எந்தப் பகுதியாரும் மறுபகுதியாருக்கு கிரயத்தொகை (பெறுமதி) கொடுக்கப்படுவதில்லை.

மேலும் சீதன உறுதி எழுதப்படும்போது, நன்கொடை உறுதி எழுதப்படும்போதும், அசையா ஆதனத்தைக் கொடுப்பவர்கள் தங்களுக்கு சீவிய உரித்தை (LIFE INTEREST) வைத்துக் கொண்டு (அதைத் தெளிவாக உறுதியில் காட்டி) எழுதமுடியும். இந்த வசதி வேறு எந்த உறுதிகள் எழுதப்படும் போதும் பின்பற்றப்படமுடியாதவையாகும்.

## தேடிய தேட்டம்

1947ம் ஆண்டின் 58 ஆம் இலக்கக் கட்டளைச் சட்டம் தேடிய தேட்டத்திற்குப் பின்வருமாறு வரைவிலக்கணங் கூறுகின்றது.

அ) திருமணமானது நிலைபேறாயுள்ள (வலுவிலுள்ள) காலத்தில் ஒரு வாழ்க்கைத் துணையினால் பெறுமதியான மதிபலன் கொண்டு (விலை கொடுத்து) கொள்ளப்பட்ட ஆதனம் (ஆனால் அத்தகைய மதிபலன் அந்த வாழ்க்கைத் துணையின் தனிப்பட்ட சொத்தின் பாகமாயமைதலாகாது)

ஆ) திருமணம் நிலைவேறாயுள்ள காலத்தில் வாழ்க்கைத் துணையொன்றின் தனிப்பட்ட சொத்திலிருந்து எழுகின்ற இலாபங்கள்.

ஒரு ஆதனமானது "தேடிய தேட்டம்" என்ற வரையறைக்குள் வருவதற்கு பின்வரும் அம்சங்கள் முக்கியமானவை:

1. கொள்விலை ஆதனமானது புதிதாகக் கொள்வனவு செய்யப் பட்டிருத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. ஆதனமானது திருமணம் நிலைத்திருக்குங்காலத்தில் அறுதி வாங்கப்பட்டு இருத்தல் வேண்டும்.
3. ஆதனமானது பெறுமதியுள்ள மதிபலன் கொண்டு கொள்ளப்பட்டதாக (அதாவது விலை கொடுத்து வாங்கியதாக) இருத்தல் வேண்டும்
4. ஆதனமானது வாழ்க்கைத் துணைகளில் ஒருவரால் அல்லது இருவராலும் கொள்வனவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

இதற்கு முன்னர் நாங்கள் படித்த முதுசொம். சீதனம் என்பவற்றைவிட "தேடிய தேட்டம்" முற்றிலும் வேறுபாடானது. முதுசொம், யாருக்குக் கிடைத்ததோ அவருக்கே அது சொந்தமாகும். முதுசொச் சொத்துக்குரியவர் இறந்தால் அது அவரது வாரிசைச் சென்றடையும். ஆண் - பெண் இருபாலாருக்கும் அவரவர் மூதாதையரிடமிருந்து வழிவழியாக முதுசொம் கிடைக்கலாடம். எனவே முதுசொச் சொத்து பால் அடிப்படையில் தங்கியிருப்பதில்லை.

ஆனால் சீதனம், திருமணப் பெண்ணுக்கே உரிய சொத்தாகும். எந்த ஆணுக்கும் சீதனம் கிடைக்கமாட்டாது. எனவே சீதனம்பால் அடிப்படையிலேயே தங்கியுள்ளது. எனினும் முதுசொம், சீதனம் என்பவை விலை கொடுத்து வாங்கப்படாதவை என்ற ஒற்றுமை கொண்டவை.

"தேடிய தேட்டமானது" விலை கொடுத்து வாங்கப்படுகின்ற சொத்தாகும். அத்துடன் கணவன் - மனைவி இருவருக்கும் பங்குடையது என்ற காரணத்தினாலும் இது தனித்தன்மை வாய்ந்தது. எனினும் தேடிய தேட்டப்பங்கு விடயத்திலும் பலருக்கு இன்றும் சந்தேகமுள்ளது. கணவன் பெயரில் ஆதனம் அறுதி வாங்கப்பட்டிருப்பின் அதில் மனைவிக்குப் பங்கு கிடையாது என்று வாதிடுபவர்கள் இருக்கத் தான் செய்கிறார்கள். ஆனால் மனைவி பெயரில் ஆதனம் அறுதி வாங்கப்பட்டிருப்பின் இவர்கள் தங்கள் குரலை மாற்றிவிடுவார்கள்.

திருமணத்தின் பின்னர், திருமணம் நிலைத்திருக்கும் காலத்தில் கணவனோ அல்லது மனைவியோ ஒரு அசையா ஆதனத்தை விலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்து கொள்வனவு செய்தால், அது இருவரில் ஒருவர் பெயரில் வாங்கியிருந்தாலும் கூட. வாங்கிய அன்றே அது "தேடிய தேட்டமாக" கணவனுக்கும் - மனைவிக்கும் சமபங்காக அதாவது தலா அரைவாசி சொந்தமாகிவிடும்.

உதாரணமாக கணபதி நடராசா என்பவர், தங்கமலர் என்ற பெண்ணை 1980 ஆம் ஆண்டில் திருமணம் செய்கிறார். 1981 ஆம் ஆண்டு நடராசா ஒரு காணியை விலைக்கு வாங்குகின்றார். இதற்கான உறுதி எழுதப்படும்போது "கணபதி நடராசாவுக்கு இத்தால் அறுதியாக விற்றும், ஒப்படைத்தும், கையளித்தும் விடுகின்றேன்" என்று எழுதப்பட்டுள்ளது. இவ்வாறு உறுதியில் எழுதப்பட்டிருப்பதால் குறித்த காணி தனக்கு மட்டும் தான் சொந்தமானது என்று நடராசா கருதிக் கொண்டு செயற்படுகின்றார். மனைவி தங்கமலரைச் சேராமலே குறித்த காணியை நடராசா கைமாற்றஞ் செய்கின்றார். இவையெல்லாம் தேசவழமைச் சட்டம் பற்றிய தெளிவின்மையையே வெளிப்படுத்துகின்றது.

குறித்த ஆதனத்தை நடராசா தனது பெயரில் வாங்கியிருந்தாலுங் கூட, அறுதி உறுதியிலே மனைவி தங்கமலரின் பெயர் குறிப்பிடப்படாதிருப்பினும் கூட இந்த ஆதனம் அறுதி வாங்கிய அன்றே - அது எவ்வாறு எழுதப்பட்டிருப்பினும் - கணவன் கணபதி நடராசாவுக்கு அரைவாசிப் பங்காகவும், மனைவி தங்கமலருக்கு அரைவாசிப் பங்காகவும் சொந்தமாகிவிடும். குறித்த உறுதியில் தங்கமலரின் பெயர் மட்டும் எழுதப்பட்டு, கணவனின் பெயர் எழுதப்படாமல் இருந்தாலும் கூட (கணபதி நடராசா பெண் தங்கமலருக்கு இத்தால் அறுதியாக விற்றும், ஒப்படைத்தும், கையளித்தும் விடுகின்றேன்) கணவனுக்கும் சரி அரைவாசி சொந்தமாகவே இருக்கும்.

இவ்வாறு அரைவாசி கணவனுக்கும், அரைவாசி மனைவிக்கும் சொந்தமாகிவிட்டாலும் மனைவி தனக்குரிய அரைவாசிப் பங்கை தானே தனியக் கைமாற்றம் செய்யமுடியாது. கணவனுடன் சேர்ந்தே மனைவி உறுதி எதனையும் எழுதுதல் வேண்டும். தேசவழமைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டத்திற்குட்பட்ட திருமணப் பெண் கணவனின் துணையின்றி உறுதி எதுவும் எழுத முடியாதுள்ளது. ஆனால் கணவன் தனது தேடிய தேட்டப் பங்கை தன் எண்ணப்படி (மனைவியைச் சேர்க்காமலே) கைமாற்றஞ் செய்யலாம்.

கணவனோ அல்லது மனைவியோ இறந்துவிட்டால் இறந்தவருக்குரிய பங்கு (அதாவது அரைவாசிப் பங்கு) பின்வருமாறு போய்ச் சேரும் என்று 1947ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்கக் கட்டளைச் சட்டம் அடிப்படையான மாற்றமொன்றை ஏற்படுத்தியுள்ளது. இதுவே தற்போதும் நடைமுறையில் இருந்து வருகின்றது.

1947ஆம் ஆண்டுக்கு முன்பிருந்த நிலை மாற்றப்பட்டு வாழ்கைத் துணை ஒவ்வொருவருக்கும் தேடிய தேட்டமுண்டு என்னுமொரு புதிய கருத்தைப் புகுத்தி, இறந்துபோன வாழ்க்கைத் துணைக்கு உரியதாயிருந்த தேடிய தேட்டத்தின் ஒரு பாதி, உயிருடன் இருக்கும் வாழ்க்கைத் துணையை வந்தடையும் என்றும், மற்றப் பாதி இறந்து போனவரின் வழியுரிமையாளரை வந்தடையும் என்றும் ஏற்பாடு செய்தது. உயிருடன் இருக்கும் வாழ்க்கைத் துணைக்குச் சொந்தமாயிருந்த தேடிய தேட்டம் மற்ற வாழ்க்கை துணையின் இறப்பினால் பாதிப்படையாமல் அப்படியே இருக்கும்.

தேடிய தேட்டமுடைய குடும்பத்தின் கணவனோ அல்லது மனைவியோ முதலில் இறந்தால் இறந்தவருக்குரிய பங்கு (அதாவது அரைவாசிப் பங்கு) பின்வருமாறு சென்றடையும். இறந்தவருக்குரிய பங்கில் ஒரு அரைப்பங்கு (அதாவது முழு ஆதனத்தில் நாலிலொரு பங்கு) உயிருடன் இருக்கும் வாழ்க்கைத் துணைக்குச் சொந்தமாகும். மற்றைய அரைப்பங்கு (அதாவது முழு ஆதனத்தில் நாலிலொரு பங்கு) இறந்தவரின் பிள்ளைகளுக்கு சமபாங்கு விகிதமாகச் சென்றடையும். பிள்ளைகள் இல்லாவிட்டால் இறந்தவரின் பெற்றோர் சகோதரங்களுக்கு உரிமை வழியாகச் சென்றடையும். எனவே உயிருடன் இருக்கும் வாழ்க்கைத் துணைக்கு இவ்வாறாக தனது தேடிய தேட்டப் பங்கும் சேர்த்து முழு ஆதனத்தில் நாலில் மூன்று (3/4) பங்கு சொந்த மாகிவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளுக்கு முழு ஆதனத்தில் நாலில் ஒரு (1/4) பங்கு சொந்தமாகும். இதுவே தேசவழமைச் சட்டத்தில் தேடிய தேட்டம் என்ற பகுதியில் தேட்டப்பங்கு பிரிவடையும் முறையாகும்.

தேடிய தேட்டம் பிள்ளைகளைச் சென்றடையும் போது அது "முதுசொம்" என்ற பெயரைப் பெறும். ஏற்கனவே பெற்றோர் சொத்தில் சீதனம் வாங்கி திருமணமான பெண்பிள்ளைகளுக்கு, இந்தவகையில் "முதுசொம்" பெற அருகதை இல்லை. எல்லா ஆண் பிள்ளைகளும், மற்றும் பெற்றோர் சொத்திலிருந்து சீதனம் பெறாத பெண் பிள்ளைகளும் திருமணமாகாத பெண் பிள்ளைகளும் "முதுசொம்" பெறத் தகுதியுடையவர்களாவர். இவர்களுக்கு முழு ஆதனத்தில் நாலிலொரு பங்கு மட்டுமே முதுசொமாக வந்து சேரும். பெற்றோர் இருவரும் இறப்பின் முழு ஆதனமும், அவர்களின் பிள்ளைகளுக்கு "முதுசொமாக" வந்து சேரும். முதுசொம் பங்குக்கு உரித்துடைய பிள்ளை ஒன்று இறந்திருந்தால், அதன் வாரிசுக்களுக்கே சென்றடையும். அவ்வாறு நீ வாரிசு இல்லாவிட்டால் இறந்தவருக்குரிய முதுசொப் பங்கு இறந்தவரின் சகோதரங்களை அடையும்.

தேடிய தேட்டச் சொத்தையுடைய கணவன் - மனைவி இருவரும் இறந்து விட்டால் "தேடிய தேட்டம்" முழுவதும் அவர்களின் பிள்ளைகளுக்கு (சீதனம் பெறாத பிள்ளைகளுக்கு) சமபங்கு விகிதமாக - முதுசொமாகச் சென்றடையும். பிள்ளைகள் இல்லாமல் தேடிய தேட்டமுடைய தம்பதிகள் இறப்பின், முதலில் இறந்தவரின் உரித்தாளர்களுக்கு நாலிலொரு (1/4) பங்கும், பின்னர் இறந்தவரின் உரித்தாளர்களுக்கு நாலில் மூன்று (3/4) பங்கும் உரிமை வழியாகச் சென்றடையும்.

உதாரணமாக தேடிய தேட்டச் சொத்துடைய "பாலசிங்கம் பரமேஸ்வரி" என்ற தம்பதிகளுக்கு பிள்ளைகள் எவருமில்லை. இவர்களில் பாலசிங்கம் முதலில் இறந்து விடுகின்றார். எனவே பரமேஸ்வரி தன்னுடைய அரைப் பங்கும், தனது கணவனுடைய அரைப்பங்கில் ஒரு அரைப்பங்கான கால்ப் பங்கும் ஒன்று சேர முக்கால் (3/4) பங்குக்கு சொந்தக்காரியாவாள். பாலசிங்கத்தின் அரைப் பங்கில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீதி அரைப் பங்கான கால்ப் (1/4) பங்கு பாலசிங்கத்தின் மரணத்தின் பின்னர் அவரது உரித்தாளர்களுக்கு உரிமை வழியாகச் சென்றடையும். இதன் பின்னர் பரமேஸ்வரி இறப்பின், பரமேஸ்வரியின் முக்கால் (3/4) பங்கும் பரமேஸ்வரியின் உரித்தாளர்களுக்கு உரிமை வழியாகச் சென்று அடையும்.

ஒரு கணவன் தேடிய தேட்ட ஆதனத்தில் தனக்குரிய அரைப்பங்கை, மனைவியின் சம்மதமின்றி அறுதி விற்கலாம். அவ்வாறு அறுதி விற்கும் பங்கு சொரியல் பங்காகவே அமையும். அத்துடன் கணவன் தேடிய தேட்ட ஆதனத்தை குத்தகைக்கோ அல்லது மாதவாடகைக்கோ மனைவியின் சம்மதத்தைப் பெறாமலே கொடுக்க முடியும் மனைவி இறந்த பின்பும் இதே நிலை தொடரலாம்.

மனைவி தனது தேடிய தேட்டப்பங்கை தனது கணவரின் சம்மதம் இன்றி அறுதி விற்க விரும்பின் (அதாவது அத்தகைய விற்பனைக்கு கணவன் அடாத்தாக சம்மதம் கொடுக்க மறுப்பின்) **1947** ஆம் ஆண்டின் யாழ்ப்பாண தமிழரின் திருமண வழியுரிமை சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் கணவனின் அனுமதியின்றி விற்க நீதிமன்ற அனுமதி பெறலாம். திருமணத்துக்கு முன்னர் கணவனோ, மனைவியோ அறுதி வாங்கிய ஆதனங்கள், தேடிய தேட்டமாக மாட்டாது. அதேபோல திருமண வாழ்வை சட்டப்படி (விவாகரத்து அல்லது இறப்பின் மூலம்) இழந்த பின்னர் அறுதி வாங்கிய ஆதனமும் தேடிய தேட்டமகாது.

## உரிமை

தேசவழமைச் சட்டத்தில் ஆதனங்கள் நாலு வகையாகப் பகுக்கப்பட்டுள்ளதாக ஏற்கனவே குறிப்பிட்டிருந்தோம். அதில் முதுசொம் சீதனம் தேடிய தேட்டம் என்பவற்றைப் பற்றி இதுவரை விரிவாக ஆராய்ந்தோம். இனி உரிமை வழியான ஆதனம் என்றால் என்ன என்பது பற்றி ஆராய்வோம்.

உரிமை என்பது அடிநிலை ஆதனமென்றும் அழைக்கப்படும் பெற்றோர் அல்லது ஏறுவழி மூதாதையர் (பாட்டன், பாட்டி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூட்டன், பூட்டி தவிர்ந்து உறுப்பினர்) ஒருவரின் இறப்பால் ஓராளுக்கு வழிவழியாய் வந்தடையும் ஆதனம் உரிமை எனப்படும். இதனை மலட்டுச் சொத்து என்றும் சிலர் அழைப்பார்கள்.

உரிமை வழியாக ஒரு ஆதனத்தைப் பெறுபவருக்கு அது அவரது தனிப்பட்ட ஆதனமாய் அமையும் என்பதோடு, அவர் அதனை எண்ணப்படி கைமாற்றம் செய்யவும் முடியும். உரிமை வழியாகக் கிடைக்கும் ஆதனம் பெரும்பாலும் ஒருவருக்கு சொரியல் பங்காகவே வந்து சேரும். ஏனெனில் ஒருவருக்குச் சொந்தமான ஆதனம், உரிமை வழியாகச் செல்லும்போது ஒன்றுக்கு மேற்பட்ட பலருக்கு அது சென்றடையும். ஆனால் முதுசொம், சீதனம், தேடிய தேட்டம் என்பவை தனியே ஒருவருக்கு வந்து சேரும் வாய்ப்பும் உள்ளது. எனவே உரிமை வழியாக ஒருவர் ஒரு ஆதனத்தைச் சொந்தம் கொள்ளும் போது அவர் அதன் சொரியல் பங்காளியாகவே வரமுடியும்.

உரிமை வழியான ஆதனமும் ஒருவரது தனிப்பட்ட சொத்தாகவே அமைவதனால் அதில் வாழ்க்கைத் துணைக்குப் பங்கு கிடைக்காது. ஆனால் கணவன் - மனைவி இருவரும்கூட தனித்தனியே உரிமை வழியாக சொத்தின் சொந்தத்தைப் பெறமுடியும். ஆனால் கணவனின் உரிமை வழிச் சொத்தில் மனைவிக்குப் பங்கு கிடையாது. அதேபோல மனைவியின் உரிமை வழிச் சொத்தில் கணவனுக்குப் பங்கு கிடையாது. "முதுசொம்" போலவே உரிமை வழியான சொத்தும் பின் தொடரும். இரண்டுக்குமுள்ள ஒரே வித்தியாசம் என்னவெனில் ஏறுவழி மூதாதையரிடமிருந்து வருவது முதுசொம் எனப்படும். பக்கவழி உறவினரிடமிருந்து வருவது உரிமை எனப்படும். ஆண் - பெண் இரு பாலாருக்கும் உரிமை வழியில் ஆதனத்தைச் சொந்தங் கொள்ளமுடியும்.

## வசதியுரிமைகள் அல்லது சேவகங்கள்

ஒருவரின் ஆதனத்தில் வேறொருவருக்குள்ள அக்கறை அல்லது உரிமை தான் வசதியுரிமை என்றும் சேவகம் என்றும் குறிப்பிடப்படும். சேவக உரித்துக்கள் பற்றி ஆராயுமிடத்து, ஒரு நாகரீகமுள்ள சமுதாயத்தில் தற்கால தேவைக்கேற்ப நீதிமன்றங்கள் புதிதாக சேவகங்களை உருவாக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைமுறையிலிருக்கும் சேவகங்களை விரிவுபடுத்தலாம். எமது நாட்டு நீதிமன்றங்கள் பல புதிய சேவகங்களை ஏற்றுக் கொண்டுள்ளது. ஒரு சேவக உரித்தை வழமை மூலம் நிரூபிக்கலாம். ஆனால் அந்த வழமை முடிவானதாகவும், மாற்ற இயலாததாகவும் இருக்க வேண்டும்.

வட மாகாணத்தில் சேவக உரித்துக்கள் பின்வருமாறு காணப்படுகின்றது.

1. தேசவழமையை அடிப்படையாகக் கொண்ட சேவக உரித்து.
2. றோமன் - டச்சு சட்டத்தை அடிப்படையாகக் கொண்ட சேவக உரித்து.
3. உள்ளூராட்சி மன்றங்களின் துணைச் சட்ட மூலம் நடைமுறைகளில் இருக்கும் சேவக உரித்துக்கள்.

இவற்றில் தேசவழமையின் கீழ் காணப்படும் சேவக உரித்துக்கள் பின்வரும் உபதலைப்புக்களின் கீழ் ஆராய்வோம்:

அ) மனித முயற்சியால் உருவாக்கப்பட்ட மரங்கள்.
ஆ) எவ்வித முயற்சியுமின்றி தானாக வளர்ந்த மரங்கள்.
இ) எல்லை மரங்களும், படரும் கொப்புக்களும்
ஈ) எல்லை வேலிகளும், அது பற்றிய உரித்துக்களும்.
உ) அயலவரின் காணிக்குள் சேவக உரித்துக்களை அனுபவிப்பதற்காக உள்ள உரிமை.

ஒருவர் தனது காணிக்குள் பயன்தரும் மரம் ஒன்றை நட்டு, தனது முயற்சியால் அதனை வளர்த்து வந்தால் அந்த மரத்தின் பழங்களும், பயன்களும் முழுமையாக அவனுக்கே சொந்தமாகும். குறித்த மரம் கோணல் வளர்ச்சியால், அயலவர் காணிக்குள் கொப்புக்களைப் பரப்பியிருந்தாலும் அந்தக் கொப்புக்கள் மீதோ, அந்தக் கொப்புக்களில் உள்ள பழங்கள் மீதோ அயல் காணிக்காரனுக்கு எதுவித உரிமையும் கிடையாது. குறித்த கொப்புக்களை வெட்டும்படி மரச் சொந்தக்காரனைக் கட்டாயப்படுத்தவும் முடியாது.

ஆனால் மனித முயற்சி எதுவுமின்றி தானாக வளரும் மரங்களைப் பொறுத்த வரையில், அந்த மரத்தின் கொப்பு எந்தெந்தக் காணிக்குள் பரவியிருக்கின்றதோ அக்கொப்புக்களும், அவற்றில் உள்ள பழங்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொப்புக்கள் பரவியுள்ள காணிக்காரனுக்கே சொந்தமானதாகும். அக்கொப்புக்களால் அவனுக்கு இடையூறு ஏதும் ஏற்படுமாயின், அவ்வாறு இடையூறு ஏற்படுத்தும் கொப்புக்களை வெட்டவும், வெட்டப்பட்ட கொப்புக்களை தானே எடுத்துக் கொள்ளவும் அவனுக்கு உரித்துண்டு.

"கந்தசாமி எதிர் மயில்வாகனம்" (1905) (3 பாலசிங்கம் அறிக்கை 54) என்ற வழக்கில் "பாலை" போன்ற வளர்க்கப்படும் மரங்களின் விடயத்தில் அயலவரின் காணிக்குள் கவிழ்ந்து தொங்கும் கொப்புக்களிலிருக்கும் பழங்கள், அந்த மரத்தை நட்டவர்களுக்கு மட்டுமே சொந்தமானவை. அதன் பழங்களையோ, கொப்புக்களையோ கோரவோ, கொப்புக்களை வெட்டி வீழ்த்தவோ அயலவருக்கு உரிமை கிடையாதென்று தீர்ப்பளிக்கப் பட்டது. சுந்தரம் எதிர் சின்னத்தம்பி (37 என்.எல்.ஆர் 324) என்ற வழக்கில் இரு நீதிபதிகளைக் கொண்ட நீதிக்குழாம், மேற்குறித்த "கந்தசாமி எதிர் மயில்வாகனம்" என்ற வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பு சரியானதே என்று ஏற்றுக் கொண்டது.

"நரசிங்கம் எதிர் சின்னத்தம்பி" (62 என். எல்.ஆர் 465) என்ற வழக்கில் ஒரு மரத்தின் சொந்தக்காரர் அல்லது உயிர்க்கதிகாலகளைக் கொண்ட வேலியின் சொந்தக்காரர், அவரின் மரத்திலிருந்து உதிர்ந்து விழுந்த இலையின் சருகுகளைப் பொறுக்குவதற்கென வேறொரு வருக்குச் சொந்தமான பக்கத்துக் காணிக்குள் செல்ல முடியாதென்று தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

அ) சுருக்கமாகச் சொன்னால் சட்டத்தின் இன்றைய நிலை: வளர்க்கப்பட்ட மரமொன்றின் கொப்புக்கள் அல்லது கிளைகள் வேறொருவரின் காணிக்குள் கவிழ்ந்துதொங்கினால் அந்த மரத்தின் சொந்தக்காரரே அவ்வாறு தொங்கும் கிளைகளுக்கும், அவற்றிலுள்ள பழங்களுக்கும் உரித்துடையவராவார். அக்கிளைகள் கவிழ்ந்து தொங்குகின்ற பக்கத்துக் காணிச்சொந்தக்காரன் கிளைகளிலுள்ள பழங்களிலோ தொங்குகின்ற கிளைகளையும் வெட்ட முடியாது.

ஆ) தானாகவே வளரும் மரங்களைப் பொறுத்த வரையில் அவ்வாறு கவிழ்ந்து தொங்கும் கிளைகளும் அதிலுள்ள பழங்களும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கிளைகள் கவிழ்ந்து தொங்குகின்ற காணியின் சொந்தக்காரனுக்கே உரியதாகும். அத்தகைய கிளைகளை வெட்டுவதற்கும், பக்கத்துக் காணிச் சொந்தக்காரனுக்கு உரிமையுண்டு.

பொதுச் சட்டத்தின்படி ஆளெவரும் அவரது மரங்கள், பக்கத்துக் காணிக்காரர்களின் காணிப்பக்கமாகக் கவிழ்ந்து தொங்குவதற்கு விடலாகாது. அவ்வாறு நிகழ்ந்தால், குறித்த பக்கத்துக் காணிக்காரன் அக்கிளைகளை வெட்டி வீழ்த்தலாம் அல்லது அத்தகைய கிளைகளிலுள்ள பழங்களை தானே எடுத்துக் கொள்ளலாம். இந்தத் தனிப்பட்ட வசதியுரிமை தேசவழமைக்கே உரியதொன்று. இவ்வாறான வசதியுரிமை எதுவும் உரோமடச்சுச் சட்டத்தில் காணமுடியாது.

## வேலி அடைப்பதற்காக அயலவரின் காணிக்குள் செல்லும் உரிமை

இது யாழ்ப்பாண மாவட்டத்தில் நடைமுறையில் உள்ள ஒரு வழமையாயிருப்பதோடு, சட்டவலுவும் பெற்றுள்ளது. தனது வேலியை, ஓலையைக் கொண்டு மறைத்தடைக்கும் நோக்கத்திற்காகக் காணிச் சொந்தக்காரரொருவர் பக்கத்துக் காணிக்குள் செல்லும் உரிமை உடையவராவார். சின்னப்பர் எதிர் கணக்கர் (13 என். எல். ஆர் 157) என்ற வழக்கில் யாழ் மாவட்டத்தில் ஒருவர் வேலியை அடைப்பதற்கு அயலவர் ஆதனத்துள் சட்டபூர்வமாக உட்புகலாம் என்று தீர்க்கப்பட்டுள்ளது. ஆனால் நரசிங்கம் எதிர் சின்னத்தம்பி (62 என். எல்.ஆர் 465) என்னும் வழக்கில் ஆதனம் ஒன்றின் சொந்தக்காரர், அயலவர் காணியுள் சென்று தனது வேலியிலிருந்து விழுந்த காய்ந்த சருகுகளைப் பொறுக்கமுடியாது என்று தீர்க்கப்பட்டது. சின்னப்பர் எதிர் கணக்கர் என்ற வழக்கில், மேலும் ஒரு சேவக உரித்து சாட்சி அடிப்படையில் ஆட்சி உரிமைச் சட்டத்தின் கீழ் நிரூபிக்க முடியும் எனக் தெளிவுபடுத்தப்பட்டது.

இந்த விடயங்கள் பற்றி நியதிச் சட்டம் (அதாவது இலங்கைப் பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டம்) எதுவுமில்லை என்ற போதும், சட்டவலுப் பெற்றுவிட்ட ஒரு வழமையாக சேவகமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து வருகின்றது. நீதிமன்றத் தீர்ப்புக்களால் இவை ஏற்று அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

## பனை மரங்களின் ஆட்சி

காணி ஒருவனுக்குச் சொந்தமாக இருந்தாலும், அதில் நிற்கும் முதுபனை மரங்கள் வேறு ஒருவருக்குச் சொந்தமாக இருக்கலாம். இது எவ்வாறெனில் ஒருவர் தனது காணியை இன்னொருவருக்கு அறுதிவிற்கும் போதோ அல்லது வேறு வகைகளில் கைமாற்றம் செய்யும் போதோ "பனை மரங்கள் புறநீங்கலாக" என்ற வாசகத்துடன் உறுதி எழுதலாம். இவ்வாறான சந்தர்ப்பங்களில் பனை மரங்களின் ஆட்சி, காணியின் புதிய சொந்தக்காரனுக்குக் கிடையாது.

ஆனாலும் முதுபனைகள் விடயத்தில் மட்டுமே மேலே கூறியவை பொருந்தும், வடலிகள் என்று சொல்லப்படும் வளரும் பனைகள் நிலச் சொந்தக்காரனுக்கே உரியதாகும்.

எனவே உறுதியிலே "பனை மரங்கள் புறநீங்கலாக" என்ற வாசகம் முதுபனை மரங்களை மட்டுமே குறிப்பிடுவதாகும். வடலிகள் தொடர்பில் இத்தகைய வாசகம் எதுவும் பொருத்தமுடையதாக அடையமாட்டாது.

## காணிச் சொந்தக்காரரொருவர் அவருடைய காணி பக்கத்திலுள்ள வயல் எல்லையிருந்து நான்கு யார் தூரத்தில் குறித்த சில மரங்களை நடுவதைத் தடுப்பதற்கான வசதியுரிமைகள்

மேற்படி விடயமாக நியதிச் சட்டமோ அல்லது நீதிமன்ற தீர்ப்புக்களோ காணப்படவில்லை. அத்துடன் இது இடத்துக்கு இடம் வேறுபட்டும் காணப்படுகின்றது.

வல்லிபுரம் எதிர் சந்தானம் (1 இலங்கை வார அறிக்கைள் 96 (1915) என்ற வழக்கில் நாட்டில் பல காலமாகத் தாபிக்கப்பட்ட வழமையின்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கத்துக் காணிச் சொந்தக்காரர் தமது எல்லைக்கு நான்கு (4) யார் உட்பக்கமாகவன்றிப் பழம் தரும் மரம் எதனையும் நடக்கூடாதென்ற வாதம் முன்வைக்கப்பட்டது. ஆனால் இந்த வழக்கில் அத்தகைய வழமையொன்றிருப்பதை எண்பிக்க முடியவில்லை. அத்துடன் இந்த வசதியுரிமை இருப்பதாக நிரூபிப்பதற்கு எடுத்த முயற்சியும் தோல்வியடைந்தது.

எனினும் குறித்த சில உள்ளூராட்சி மன்றங்கள், தத்தமது பிரதேசத்தில், துணை விதிகள் மூலம் இந்த வசதியுரிமையை நிலைநாட்டி வருகின்றன. எல்லா உள்ளூராட்சி மன்றங்களும் ஒரே அணியாக, ஒழுங்கமைப்பில் துணை விதிகளை அமைத்து நடைமுறைப்படுத்தாமையினால் இது விடயமாக தெளிவான வசதியுரிமை இருப்பதாக வாதாடமுடியாது.

## கிணறு சம்பந்தமான சேவகம்

கிணற்றுப்பங்கு, தண்ணீர்ப்பங்கு என்பன சம்பந்தமான பல சிக்கல்கள் எமது மக்களிடையே இருப்பதனால் அவை பற்றியும் விளக்க விரும்புகிறேன்.

## கிணற்றுப்பாங்கிற்கும் தண்ணீர் பங்கிற்கும் உள்ள வித்தியாசம்

கிணற்றுப் பங்குடைய ஒருவனுக்கு கிணறு, துலா, ஆடுகால், தூர்வை , வழிவாய்க்கால் மற்றும் அவை சார்ந்த யாவற்றிலும் பங்குண்டு. ஆனால் தண்ணீர் பங்கு என உறுதியில் குறிக்கப்பட்டிருப்பின், இழுகொடி மூலம் நீர் எடுக்கும் உரித்து மட்டுமே உண்டு. தண்ணீர்ப் பங்குகாரருக்கு வழிவாய்க் காலைப் பாவிக்கும் உரித்தும் உண்டு. ஆனால் துலா இருப்பினும் அதைப் பாவிக்கும் உரித்து இல்லை. தூர்வையிலும் பங்கு கிடையாது. தொட்டி, உடுப்புக் கழுவும் கல் போன்றவற்றிலும் உரித்துக் கிடையாது.

ஆனால் தண்ணீர் பங்குக்கு சொந்தக்காரனான ஒருவன், மற்றப் பங்குக்காரனுடைய அனுமதியுடன் ஒரு கிணற்றுப் பங்கு உடையவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபவிக்கும் சகல வசதிகளையும் அனுபவிக்கலாம். எனினும் அப்படி அனுபவிக்கும் உரிமையை இரத்துச் செய்யும் உரித்து மற்றப் பங்காளிகளுக்கு உண்டு.

கிணறு பற்றிய உரிமைகள் இருவகையாக வரலாம்:

1. உறுதி மூலம்
2. ஆட்சியுரிமைச் சட்டத்தின் கீழ் கிணற்றுப்பங்கு இன்னும் ஒருவருக்குரிய ஆதனத்தில் இருக்கலாம். அல்லது பொதுவாக விடப்பட்ட நிலத்தில் அமைந்துள்ள இடத்தில் அச்சேவகம் இருக்கலாம்.

எது எவ்வாறாயினும் கிணற்றுப் பங்குள்ளவர்களுக்கு தூர்வையில் பங்குண்டு. தூர்வையில் பங்குண்டென உறுதியில் குறிப்பிடப்படாதிருப்பினும் கிணற்றில் பங்குள்ளவர்களுக்கு தூர்வையில் பங்குண்டு. ஆனால் தண்ணீர்ப் பாங்கு மட்டும் என உறுதியில் குறிக்கப்பட்டு இருப்பின் அவர்களுக்கு தூர்வை யில் எந்தவித பங்குமில்லை. ஆனால் உறுதியில் குறிக்கப்பட்டிருப்பின் அல்லது ஆட்சி உரிமைச் சட்டத்தின் கீழ் ஆட்சியுரிமையை நிரூபிக்க முடியும் ஆயின் தண்ணீர்ப் பங்குக்காரரும் கிணற்றுப்பங்குக்காரர் அனுபவிக்கும் உரிமையை அனுபவிக்கலாம்.

தண்ணீர்ப் பங்குக்காரன் ஒருவன் தூர்வை நிலத்தில் நிரந்தரக் கிடங்கு களை அமைத்து நீர் இறைக்கும் இயந்திரங்களை வைத்துப் பாவிப்பதற்கும், நீர்க்குழாய்களை அமைப்பதற்கும் கிணற்றுப் பங்கு உரித்துடையவர்களின் சம்மதம் பெறப்படல் வேண்டும். கிணற்றுப் பங்குக்காரன் இதற்கு ஆட்சேபித் தால், தண்ணீர்ப்பாங்கு உரித்துடைய ஒருவர் தன்னிச்சையாக மோட்டார் கிடங்குளை வெட்டி நீர் இறைக்கும் இயந்திரம் மூலம் தண்ணீர் எடுக்கம் உரித்தை அனுபவிக்க முடியாது இக்கருத்து உயர் நீதிமன்றத் தீர்ப்புக்களின் மூலம் உறுதிப்படுதப்பட்டு உள்ளது.

ஒரு சேவகத்தை சேவக உரித்துடையவர் மறைமுகமாகவோ அல்லது வெளிப்படையாகவோ கைவிடலாம். நீண்டகாலமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவர் நீர் எடுக்கும் உரிமையை பாவிக்காமல் விட்டால் அவ்வுரித்து அழிந்தொழிந்து போய்விடும். கைவிடப்பட்ட ஒரு சேவக உரித்தை மீளப்பெறுவதற்கு ரோமன் - டச்சுச் சட்டத்தின் கீழ் எவ்வித உரித்தும் இல்லை. "வைத்தியலிங்கம் எதிர் வைரமுத்து" (55 NLR 185) என்ற வழக்கில் தண்ணீர் பங்குடைய ஒருவர் உறுதியில் தண்ணீர்ப்பங்கு மட்டும் எனக்குறிப்பிடப்பட்டிருப்பின், அவர் துலாவைப் பாவிக்க உரித்தற்றவர் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. உறுதியில் கொண்டுள்ள உரித்தை விஸ்தரிக்கவோ அல்லது பெரிதாக்கவோ அனுமதிப்பின் பல சிக்கல்கள் ஏற்படலாமென்றும் இத்தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்னுமொருவருடைய கிணற்றில் இருந்து தண்ணீர் எடுக்கும் உரிமை எமது நாட்டு நீதிமன்றங்களால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. பொதுவில் இந்தச் சேவகம், துணைக் சேவகத்தையும் கொண்டிருக்கும்.

உதாரணமாக:

அ) கிணற்றிலிருந்து தன்னார் எடுக்கும் உரிமை

ஆ) நீரைக் கொண்டு செல்லும் உரிமை

சேவகங்கள் இயற்கையாகப்பிரிந்த முடியாதவையாகும். பிரதான சேவகத் திற்கு துணையாக ஒரு சேவகம் இருக்குமாயின் பிரதான சேவகத்தைக் கைவிட்டால், துணைச்சேவகமும் தானாகவே அழிந்தொழிந்து போய்விடும், அதாவது மேலே காட்டியவாறு ஒருவருக்கு இன்னொருவருடைய கிணற்றி லிருந்து தண்ணீர் எடுக்கும் உரிமை எனப்படும் பிதான சேவகம் இருந்து அது அவரால் கைவிடப்பட்டால், நீரைக் கொண்டு செல்லும் உரிமை எனப்படும் துணைச்சேவகமும் தானாகவே இல்லாது போய்விடும். அதன் பின்னர் தனக்கு நீரைக் கொண்டு செல்லும் உரிமை இருப்பதாக அவர் வாதாடமுடியாது.

## தூர்வை நிலம்

யாழ்ப்பாண மாவட்டத்தில் கிணற்றுப்பங்கு விடயத்தில் தூர்வை நிலம் என்ற சொற்பதம் பாவிக்கப்படுவது வழமை. உறுதிகள் எழுதப்படும் போது, "தூர்வை நிலத்திலும் பங்கு" என்ற வாசகமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம் பெறகின்றது. எனினும் "தூர்வை நிலம்" எனப்படுவது யாது என்று பலருக்கு தெரியாது.

தூர்வை நிலம் என்பதற்கு சட்டரீதியாகவியாக்கியானம் எதுவும் காணப்பட வில்லை காலத்துக்குக் காலம் இதன் பொருள் மாறுபட்டுள்ளது. எனவே தூர்வை நிலத்துக்கு தெளிவான, நிலையான வரைவிலக்கணம் கொடுக்க முடியாது.

கிணற்றிலிருந்து துலா மூலம் நீர் எடுப்பதற்காக அந்த அமைப்பை (துலாவை) ஏற்படுத்துவதற்கு விடப்பட்ட நிலமே தூர்வை நிலமாகும் என்பதே, பொதுவான கருத்தாகும் எனவே தூர்வை நிலம் என்பது துலாவின் அடிப்பாகம் நிலத்தில் முட்டும் இடத்தையும், அடித்துலா மேலெழும்பும் போதும், கீழிறங்கும் போதும் பாவிக்கப்படும் இடமே தூர்வை நிலம் என அழைக்கப்படுகின்றது.

## குத்தகை

வடமாகாணத்தில் நிலவும் குத்தகை பற்றிய சட்டம் உரோம - டச்சுச் சட்டத்தையே அடிப்படையாகக் கொண்டதாகும். குத்தகையின் விளைவுகள் அந்தக் குத்தகை உடன்பாட்டிற் காணப்படும் உடன்படிக்கை நியதிகளுக்கமையவே பெரும்பாலும் ஆளப்பட்டு வருகின்றது,

குத்தகையானது எழுத்துவடிவில் இருப்பதுடன் குத்தகை கொடுப்பவரும், குத்தகை பெறுபவரும் ஒப்பமிட்டிருத்தல் வேண்டும். வாய் மூலம் குத்தகை என்பதை நீதிமன்றங்கள் ஏற்க விரும்புவதில்லை. அசையா ஆதனங்கள் தொடர்பிலான குத்தகைகள் குத்தகை உறுதி மூலம் நொத்தாரிசினால் எழுதப்பட்டு, காணிப் பதிவு அலுவலகத்தில் பதியப்படுவது பாதுகாப்பானதாகும்.

குத்தகையின் விளைவு பணமாகவே பெரும்பாலும் காணப்படும். எனினும் தேசவழமையில் குத்தகையின் விளைவு பணமாக இல்லாமல் பொருளாகக் கூடக் காணப்படும். உதாரணமாக வயல் ஒன்றின் சொந்தக்காரன், அதனை இன்னொருவனுக்கு குத்தகைக்குக் கொடுத்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குத்தகைப் பணத்துக்குப் பதிலாக குறிப்பிட்டளவு நெல்லைப் பெற்றுக் கொள்ளலாம். இதுவும் வலிதான குத்தகை உடன்படிக்கையாகவே இருக்கும்

## வாடகையும் குத்தகையும்

வாடகை எனப்படுவதும், குத்தகை என்பதுவும் ஒன்றா அல்லது வெவ்வேறானவையா என்பது பற்றி மக்கள் மத்தியில் மயக்கம் காணப் படுகின்றது. ஏனெனில் சிலர் தங்களுடைய வீட்டை வாடகைக்கு கொடுக்கின்ற அதேவேளை மற்றும் சிலர் தங்கள் வீட்டை குத்தகைக்குக் கொடுத்து வருகின்றார்கள். அப்படியாயின் வாடகைக்கும், குத்தகைக்கும் இடையில் உள்ள வேறுபாடுதான் என்ன என்ற கேள்வி எழுவது இயற்கையே.

வாடகை என்பது ஒரு இடத்தை அல்லது பொருளை இன்னுமொருவர் பாவிக்கக் கொடுப்பதாகும். அதாவது ஒரு வீட்டைக் குடியிருக்கக் கொடுப்பது, ஒரு கடைக்கட்டிடத்தை, வியாபார நிலையமாக நடாத்தக் கொடுப்பது. மணவறையை திருமண வீட்டுக்குக்கொடுப்பது, வைத்தியசாலைக்குச் செல்வதற்கு மோட்டார்க்கார் வசதி செய்து கொடுப்பது என்பவை வாடகையாகவே இருக்கும் அசையா ஆதனங்கள் தொடர்பிலான வாடகை உடன்படிக்கைள் நொத்தாரி மூலம் நிறைவேற்றப்பட்டு காணிப் பதிவு அலுவலகத்தில் பதியப்படுவது பாதுகாப்பானதாகும்.

அசையும் பொருள் தொடர்பில் வாடகை உடன்படிக்கை பெரும் பாலும் வாய்மூலமானதாகவே அமையும் "கனவான்கள் உடன்படிக்கை" என்பது இங்கு பொருந்தும். எனினும் இத்தகைய உடன்படிக்கையையும் எழுத்தில் நிறைவேற்றத் தடையேதுமில்லை. வாடகை உடன்படிக்கையில் வாடகைக்கு கொடுப்பவரும், வாடகைக்கு எடுப்பவரும் எனப்படும் இரு தரப்பினரும் ஒப்பமிடல் வேண்டும். ஒரு வீட்டைக் குடியிருக்க மட்டும் அனுமதிப்பதுடன் மட்டுமல்லாது அதிலுள்ள பயன்களையும் அனுபவிக்க அனுமதிப்பின் அது குத்தகையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணிக்கப்படும். உதாரணமாக ஒருவர் தனது வீட்டை இன்னுமொருவர் குடியிருக்க கொடுத்துவிட்டு, அந்த வீட்டு வளவிலுள்ள தென்னை மரங்களில் பயன்களை தொடர்ந்தும் தானே எடுத்துவரின், அவர் வீட்டை வாடகைக்குச் கொடுத்திருப்பதாகவே கருதப்படும். ஆனால் வீட்டில் குடியிருக்கவும், வீட்டு வளவிலுள்ள மரங்களின் பயன்களை அனுபவிக்கவும் வீட்டுச் சொந்தக்காரன் அனுமதித்திருந்தால் அங்கே ஒரு குத்தகை ஒப்பந்தம் இருப்பதாகப் புரிந்து கொள்ளலாம்.

எனினும் எவ்வித பிறவருமானங்களும் இல்லாத வீட்டைக் குடியிருக்கக் கொடுத்து, குத்தகை உடன்படிக்கை எழுதப்படுவதும் காணப்படுகின்றதே என்று நீங்கள் கூறலாம். உதாரணமாக ஒருவர் தனது கடைக்கட்டிடத்தை இன்னுமொருவர் வியாபார நிலையமாகப் பயன்படுத்தக் கொடுத்திருப்பார். கடைக் கட்டிடம் தவிர வேறு ஒரு துளி மண் நிலங்கூட அதிலே இருக்காது. எனினும் குத்தகை உடன்படிக்கை எழுதப்பட்டிருக்கும். இது எவ்வாறு பொருந்தும் என்று வினா எழுப்பலாம். வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டம் போன்றவற்றிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காக கட்டிடச் சொந்தக்காரன் "வாடகை என்ற பதத்தைத் தவிர்த்து குத்தகை" என்ற பாதுகாப்பைத் தேடிக்கொள்வதே இதன் உள்நோக்கமாகும்.

## ஒற்றி ஈடு

ஒற்றி ஈடு என்பது ஒருவிதப் பயன்நுகர் ஈடாகும். இது தேசவழமைக்கு மட்டுமே உரியதாகும். வட்டிக்குப் பதிலாக ஈடு பிடித்தவர் அந்தக் காணியிலுள்ள பிரயோசனத்தை எடுத்தல் வேண்டுமென்னும், முறைப்படியான அறிவித்தல் கொடுக்கப்பட்டதன் பின்னர் வருடத்தில் குறிப்பிட்ட ஒரு காலத்தில் மீளக் கூடியதாயிருத்தல் வேண்டுமென்றுமுள்ள நிபந்தனைகளின் பேரில் குறிப்பிட்ட ஒரு தொகைக்கு அல்லது சட்டப்படியான மதிபலனுக்காக இலங்கையின் வடமாகாணத்தில் அமைந்துள்ள காணியின் பயன்நுகர் ஈடே ஒற்றி எனப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே ஒற்றி ஈட்டில் பின்வரும் அம்சங்கள் காணப்படும்:

அ) ஈடுபிடித்தவர் வட்டிக்குப் பதிலாகக் காணியின் பிரயோசனத்தை எடுக்கிறார்.

ஆ) இது வடமாகாணத்திலுள்ள காணியையே (அக்காணி தேசவழமையால் ஆளப்படுபவருக்குச் சொந்தமாயினும் சரி அல்லது வேறொருவருக்குச் சொந்தமாயினும் சரி) கட்டுப்படுத்தும்.

இ) அறிவித்தல் கொடுத்ததன் பிறகு குறிப்பிட்ட காலங்களில் மட்டும் அதை மீள முடியும்.

## ஒற்றி ஈட்டைச் செய்து கொள்வதற்கான தகுதி

பொதுவாக ஈடுகளைச் செய்து கொள்வதற்கான தகுதியே இதற்கும் தேவையாகுமென்பதோடு நாட்டின் பொதுச்சட்டமே இதற்கும் ஏற்புடையதாகும். ஆனால் தேசவழமையால் ஆளப்படும் திருமணமான பெண் ஒருவரின் விடயத்தில் அவளுக்கு அவளுடைய கணவனின் சம்மதமும், ஒருப்பாடும் தேவை.

ஒற்றி ஈடானது மோசடித் தடுப்புக் கட்டளைச் சட்டம், உறுதிகளும் ஆவணங்களும் கட்டளைச் சட்டம் என்பனவற்றுக்கு இணங்க எழுத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.

வழமையாக ஒற்றி ஈட்டுக்கான விடயப்பொருள் வடமாகாணத்தில் அமைந்துள்ள அசைவற்ற ஆதனமாகும். பழமரங்கள், அதாவது தென்னை, கமுகு, வாழை, பலா, மா ஆகியன கூட ஒற்றி ஈடாக வைக்கப்படக் கூடியனவே.

## சம்மந்தப்பட்டவர்களின் உரிமைகளும் கட்டுப்பாடுகளும் ஒற்றி ஈடுகொள்வோரின் (ஈடு பிடிப்போரின்) உரிமைகள்

அ) ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் ஆட்சியைக் கொண்டிருக்கவும், வட்டிக்குப் பதிலாகக் காணியின் பிரயோசனத்தை எடுக்கவும் ஈடுகொண்டவருக்கு உரிமை உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ) பிரயோசனமானது, சட்டப்படியான வட்டி வீதத்திலும் பார்க்கக் கூடுதலாயிருந்தாலும், அப்பிரயோசனத்தை எடுக்கும் உரிமை ஈடு பிடித்தவருக்கு உள்ளது.

இ) ஈடு பிடித்தவர் தம்முடைய பணத்தைத் திரும்பப் பெறவிரும்பினால் நீதிமன்றத்தின் கட்டளையின் துணையுடன் ஈடுவைத்த ஆதனத்தை விற்பதற்கு உரிமை கொண்டிருக்கிறார். ஆனால் அந்தப் பணத்தைக் கோரமுன்னர் அவர் காணியின் ஆட்சியை ஈடுவைத்தவருக்குத் திருப்பிக் கொடுத்து, கொடுத்த அந்தத் தேதியிலிருந்து ஒரு வருட காலம் வரைக்கும் அப்பணத்தைப் பெறுவதற்காகக் காத்திருத்தல் வேண்டும். ஆனால் ஈட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளைக் கருத்திற் கொண்டு பார்க்கும்போது, ஈடு பிடித்தவர் அந்த ஈட்டுரித்தைக் காட்டி வழக்குத் தொடுத்தே, அக்காணியை வாங்கவிரும்பின் நீதிமுறை விற்பனையின் போது அதனை வாங்கலாம்.

உ) ஈடு பிடித்தவர் அவருக்கு ஈடுவைக்கப்பட்ட காணியிலிருந்து ஒற்றித் தொகையைப் பெறுவதற்கு உரிமையுடையவர். ஒற்றி ஈடு வைக்கப் பட்ட காணி பின்னர் கைமாற்றப்பட்டிருப்பின், அப்படிக்கைமாற்றிப் பெற்றவர் அந்த ஈட்டு முறியானது முறைப்படி பதியப்பட்டிருப்பின் அந்த ஒற்றிக்கு அமையவே அந்த ஆதனத்தைப் பெற்றுக் கொள்வார்.

## ஒற்றி ஈடு கொள்வோரின் கடமைகள்

அ) காணியின் வரிகளையும், கட்டணங்களையும் கொடுத்தல் ஆனால் இப்போது சட்டமொன்று இயற்றப்பட்டதன் விளைவாக ஆதனத்தின் சொந்தக்காரர் அல்லது இருப்பாட்சி கொண்டிருப்பவரே வீதங்களையும், வரிகளையும் செலுத்துதல் வேண்டும்.

ஆ) அந்தக் காணி பயிர் செய்யப்படக்கூடியதொன்றாயின் அதில் பயிரிடுதல் வேண்டும்.

இ) அந்தக் காணி அவருக்கு எந்த நிலமையிற் கொடுக்கப்பட்டதோ அந்த நிலைமையில் ஈடு வைத்தவருக்குத் திருப்பிக் கொடுக்கப்படுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈ) ஒற்றிக் காணியின் ஆட்சியை உடனடியாக ஏற்றல் வேண்டும். ஆனால் இப்போதைய சட்டத்தில் இது அவசியமில்லை.

## ஒற்றி கொள்வோரின் கடமைகள்

ஈடு கொள்வோருக்கு முறைப்படி அறிவித்தல் கொடுத்துச் செலுத்த வேண்டிய பணத்தைக் கொடுத்தவுடனும் ஈடு வைத்த காணியை மீளப்பெறும் உரிமை ஈடுவைத்தவருக்கு உண்டு. தான் விரும்பிய நேரத்தில் ஒற்றி ஈட்டை மீள முடியாது.

## ஒற்றி ஈடு வைப்போரின் உரிமைகள்

அ) ஈடு வைப்பர் காணியின் ஆட்சியை ஈடு கொள்வோருக்குக் கொடுத்தல் வேண்டும். அத்துடன் அவ்வாட்சியைக் குழப்பக் கூடாது.

ஆ) ஈடு வைத்தவர் தாம் கடன் எடுத்து தொகையைத் திருப்பிக் கொடுத்தல் வேண்டும். இது ஈடுவைத்த காணியின் ஆட்சியைத் திருப்பி ஒப்படைத்து ஓராண்டு கழிந்த பின்னர் கொடுக்கப்படலாம்.

ஒற்றி ஈடு முடிவுறுதல்

பின்வரும் வகைகளில் ஏதாவது ஒன்றினால் ஒற்றி ஈடு முடிவுறும்,

அ) பணம் கொடுத்தல்

ஆ) ஒன்றாதல்

இ) சமமாக்கி விடுதல்

ஈ) விட்டுவிடுதல்

உ) புதுப்பித்தல்

## **முன்வாங்குரிமை** (PRE - EMPTION)

முன்வாங்குரிமை என்பது தேசவழமைச் சட்டத்தில் உள்ள ஒரு சிறப்புரிமையாகும். முன்வாங்குரிமை என்றால் "மற்றவர்களுக்கு முன்பதாக ஒரு ஆதனத்தை வாங்குவதற்கு, ஒருவர் கொண்டிருக்கும் உரிமை என்று பொருளாகும்" உண்மையான ஒரு வாங்குநர் பணங்கொடுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாங்குவதற்கு தயாராயுள்ள அந்த விலையில், அந்தக் காணியைத் தமக்கு விற்கும்படி கேட்பதற்குள்ள உரிமையொன்றும் வரைவிலக்கணம் கூறலாம்.

இலங்கையின் வடமாகாணத்தில் அமைந்திருக்கும் அசைவற்ற ஆதனத்தில் மீதுள்ளதும், தேசவழமையால் அங்கீகரிக்கப்படுவதுமான "முன்வாங்குரிமை" சொரியல் ஆதனம் தொடர்பில் பிரயோகிக்கப்படலாம்.

தனிப்பட்ட ஒருவருக்கே முழுவதும் சொந்தமான தனியான ஆதனந் தொடர்பில் முன்வாங்குரிமையை ஒருவர் கோர முடியாது. பிரிவிடல் செய்யப்படாததும், ஒன்றுக்கு மேற்பட்டவர்களுக்குச் சொந்தமானதுமான சொரியல் ஆதனத்தில் மட்டுமே முன்வாங்குரிமை ஏழும். நீ முன்வாங்குரிமை கோரும் உரித்து பின்வரும் இரு திறந்தவர்களுக்கு மட்டுமே உரித்தானதாகும் என்று **1947** ஆம் ஆண்டின் **59**ஆம் இலக்கக் கட்டளைச் சட்டம் எடுத்துக் கூறுகின்றது.

*1)* ஆதனத்தின் கூட்டுச் சொந்தக்காரர்

*2)* கூட்டுப் பின்னுரிமையளார்.

இவர்களைத் தவிர வேறு எவருக்கும் முன்வாங்குரிமை கிடையாது என்று **1947** ஆம் ஆண்டு ஆடி மாதம் ***03*** ம் திகதி நடைமுறைக்கு வந்த மேற்படி சட்டம் தெளிவுபடுத்தியுள்ளது.

ஆனாலும் இது எல்லாக் கூட்டுப் பின்னுரிமையாளருக்கும் உரியதல்ல. இந்தக் கட்டளைச் சட்டத்தின் கீழான கூட்டுப் பின்னுரிமையாளர் என்ற பதத்தின் வரைவிலக்கணத்துக்கு உட்பட்டவரே இந்த உரிமையைப் பெறுவர். பின்னுரிமையாளரென்பது சகல பின்னுறுவோரும், முன்னுறுவோரும், வழியுரிமையில் மூன்றாம் படி வரைக்கும் உள்ள பக்கவழி உறவினருமென்று பொருளாகும்.

"பொன்னுத்துரை எதிர் சிதம்பரப்பிள்ளையும் வேறு ஒருவரும் (71NLR315) என்ற வழக்கில் கூட்டுச் சொந்தக்காரரொருவரின் சகோதரி ஒருவர், அந்தக் கூட்டுச் சொந்தக்காரருக்குப் பிள்ளைகள் இருப்பினும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசவழமை, முன்வாங்குரிமை கட்டளைச் சட்டத்தின் 2ம் பிரிவில் கருத்தெல்லைக்குள் பின்னுரிமையாளராவரென்று தீர்ப்பளிக்கப்பட்டது.

நாகரத்தினம் எதிர்சண்முகம் (*69* NLR *389*) என்ற வழக்கில் பங்காளர்கள் ஒவ்வொருவரதும் அறிவுடனும், சம்மத்துடனும் சுமுகமான முறையில் பிரிக்கப்பட்டு, தனித்தனித் துண்டுகளாக ஆட்சி செய்யப்படும் ஒரு காணியின் பங்கு தொடர்பில் கூட்டுச் சொந்தக்காரர் என்ற அடிப்படையில் முன்வாங்குரிமைக்கான வழக்கொன்று தொடுக்கப்பட முடியாது என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

## கூட்டுச் சொந்தக்காரர் ஒருவர் அவரது ஆதனத்தை விற்க விரும்பும் போது மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள்

அ) நடவடிக்கைகள் அவர் நொத்தாரிசு ஒருவர் முன்னால் கையொப்பமிட்ட அறிவித்தல் ஒன்றை வெளியிடுதல் வேண்டும். அந்த அறிவித்தலை மாவட்ட காணிப்பதிவு அலுவலகத்தில் பதிய வேண்டும் என்ற கடப்பாடில்லை.

ஆ) அந்த அறிவித்தலில், வாங்க முன்வந்துள்ள வாங்குநர் உண்மையிலே தரச்சம்மதித்த விலையை தெளிவாக காட்டப்படுதல் வேண்டும். ஆனால் அத்தகைய வாங்குநரின் பெயரை வெளியிட வேண்டிய அவசியம் இல்லை.

இ) அத்தகைய அறிவித்தலின் அத்தாட்சிப்படுத்திய பிரதி ஒன்றை அத்தகைய விற்பனையாளர், கட்டளைச் சட்டத்தில் குறிப்பிட்ட அலுவலருக்கு உடனடியாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

ஈ) அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி ஒன்று கிடைக்கப்பெற்ற அலுவலர் அவ் அறிவத்தலில் காட்டப்பட்ட விபரங்களை அந்த நோக்கத்திற்கென அவரால் பேணப்பட்டு வர வேண்டிய பதிவேட்டில் பதிதல் வேண்டும் என்பதோடு, அத்தகைய அத்தாட்சிப்படுத்திய பிரதியை அவரது அலுவலகத்தில் உள்ள அறிவித்தல் பலகையில் தொங்கவிடப்படுதலும் வேண்டும்.

உ) அறிவித்தலானது அவரது அலுவலக அறிவித்தற் பலகையில் முறைப்படி தொங்கவிடப்பட்டதென்று கூறும் அலுவலரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைப்பட்ட சான்றிதழ், அத்தகைய அறிவித்தல் வெளியிடப்பட்டது என்பதற்கு முற்றும் முழுதுமான சான்றாதல் வேண்டும்.

ஆனால் "காசிநாதன் எதிர் தாமோதரம்பிள்ளை" (63 NLR 241) என்ற வழக்கில் அசைவற்ற ஆதனத்தின் விற்பனை பற்றிய அறிவித்தல் 1947ம் ஆண்டின் 59ம் இலக்க முன்வாங்குரிமை கட்டளைச் சட்டத்தின் 5ஆம் பிரிவிற்கிணங்க விற்பனையாளரால் கொடுக்கப்படுகின்ற விடத்து, அறிவித்தலானது கிடைக்கப் பெற்ற அலுவலர் உண்மையில் அதனை வெளியிட்டாரா என்பதை கவனித்துக் கொள்ளல் அவரது கடமையென்று தீர்ப்பளிக்கப்பட்டது. 5ஆம் பிரிவின் கீழான அறிவித்தலொன்று. அந்த அறிவித்தலானது கிடைக்கப் பெற்ற அலுவலர் அதை 4ஆம் 5ஆம் பிரிவுகளில் விதிக்கப்பட்ட மாதிரியாக வெளியிடத்தவறியிருப்பின், 8ஆம் பிரிவின் நோக்கங்களுக்காக அது கொடுக்கப் பட்டதாகக் கருதப்பட முடியாது.

மேலே சொல்லப்பட்ட அறிவித்தல் வெளியிடப்பட்டு மூன்று வாரங்களுக்குள், முன்வாங்குரிமைக்கு உரித்துடைய எந்த ஆளும் அறிவித்தலிற் குறிப்பிட்ட பணத்தைக் கொடுத்து அந்த ஆதனத்தை அறுதி வாங்கலாம். அல்லது அந் நோக்கத்திற்கென உடன்படிக்கையொன்று செய்து கொள்ளலாம். முன் பந்தியில் குறிப்பிட்ட மூன்று வாரங்களுக்குள் அந்த விற்பனைக் காரர், முன்வாங்குரிமைக்கு உரித்தில்லாத எவரேனும் ஆளுக்கு அந்த ஆதனத்தை கையுதிர்த்தால், அச்செயல் வெற்றும் வெறிதுமாதல் வேண்டும். உத்தேச வாங்குநர், மேற்காட்டிய ஏற்பாடுகளுக்கு இணங்க கொடுத்த பணத்தை அந்த உச்தேச விற்பனையாளர் வாங்க மறுத்தால், அந்த உத்தேச வாங்குநர் அந்த அறிவித்தலில் குறிக்கப்பட்ட தொகையை, முதலில் மாவட்ட நீதிமன்றில் வைப்பிலிட்டுவிட்டு, அந்தக் காணியை தனக்கே விற்கப்பட வேண்டு மென்று பணிக்கும் கட்டளையை ஆக்கும்படி, சத்தியக் கடதாசியோடு சேர்ந்த மனு மூலம் நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும். எனினும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருந்த தொகையானது பொய்யானது அல்லது கற்பனையானது என்று நீதிமன்றம் திருப்திப்படும் வண்ணம் உத்தேச வாங்குநர் எண்பிக்கின்றவிடத்து, அவர் அக் காணியின் சந்தை பெறுமதியை (MARKET PRICE) நீதிமன்றத்திடம் கொடுக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் "ஜோசப் எதிர் ஜோசட்" (63 NLR212) என்ற வழக்கில் தேசவழமை முன்வாங்குரிமைக் கட்டளைச் சட்டத்தின் 5ஆம் பிரிவின் நியதிகள் கிணங்குவதாகக் காட்டி, வெளியிடப்பட்ட அறிவித்தலில் குறிக்கப்பட்ட விலை பொய்யானதாகவும், உண்மையான சந்தைப் பெறுமானத்தைக் காட்டாதாயிருக்கின்றவிடத்து, அத்தகைய குறிக்கப்பட்ட விலையானது பொய்யானதாக இருப்பினுங்கூட அதிற் குறிக்கப்பட்ட விலையையே கட்டளை சட்டத்தின் நோக்கத்திற்கெனச் செல்லுபடியான கொடை முனையாக 6 ஆம் பிரிவு கருதுகின்றது. பின்னைய சந்தர்ப்பத்தில் நீதிமன்றமானது விசாரணை ஒன்றை நடாத்தி, வைப்பிலிடப்பட்டுள்ள தொகை போதுமானதா என்ற பற்றிக் கட்டளை ஒன்றைப் பிறப்பிக்கும். இத்தகைய விசாரணையின் பின் நீதிமன்றத்தினால் ஆக்கப்படும் கட்டளையெதுவும் முற்று முழுவதாத வேண்டுமென்பதோடு அந்தக் கட்டளை மேலும் கூடுதலான தொகையை வைப்பிலிடல் வேண்டுமென்று பணிக்கின்றவிடத்து. அது அத்தகை கட்டளைக்கு இணங்கியொழுகியமை கட்டுப்படுத்தும் தன்மையதாகும்.

உத்தேச விற்பனையாளர் நீதிமன்றத்திற்கு வரத் தவறுகின்ற விடத்து உத்தேச வாங்குநரின் சார்பில் நீதிமன்றமே உறுதியை நிறைவேற்றலாம் "ஆறுமுகம் எதிர் சோமசுந்தரம்" (61 NLR 16) என்ற வழக்கில் முன்வாங்குரிமைக்கான ஒரு வழக்கின்போது எதிராளிகள் வேண்டுமென்றே அவ்வாறு செய்யத் தவறினார்களென்ற காரணத்தால் முன்வாங்குரிமைக்காரரின் சார்பில் கைமாற்றும் பத்திரமொன்றை நிறைவேற்றும்படி மாவட்ட நீதிமன்றப் பதிவாளர் நீதிமன்றத்தால் கட்டளையிடப்பட்டிருக்கின்றவிடத்து அன்றிலிருந்து உரிமையானது முன்வாங்குரிமைக்காரருக்குரியதாகும் எனத் தீர்க்கப்பட்டுள்ளது.

இடைக்காலக் கட்டளையொன்று அல்லது வழக்கிடைக் கட்டளை ஒன்று உத்தேச விற்பனையாளருக்கு விடுக்கப்பட்டதும், சம்பந்தப்பட்ட ஆதனத்தின் முன்வாங்குரிமைக்கான விண்ணப்பதாரர் தவிர்ந்த வேறு எவரேனும் ஆளுக்குச் சொல்லப்பட்ட ஆதனத்தைக் கைமாற்றினால் அவை வெற்றுமவெறிதுமாதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சம்பந்தப்பட்ட (முன்வாங்குரிமைக்குரியதான) காணியானது ஏற்கனவே விற்பனை செய்யப்படிருப்பின் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை

அறிவித்தலானது கொடுக்கப்பட்டிருக்கின்றவிடத்து விற்பனையானது நிறைவேறியதன் பின்னர் அல்லது அறிவித்தலானது கொடுக்கப்படாதிருக்கின்ற விடத்து விற்பனையானது முடிந்ததன் பின்னர் முன்வாங்குரிமையானது முறையான வழக்கொன்றின் மூலமே நிலைநாட்டப்படலாம். இந்த வழக்கில் வாங்குநரையும் ஒரு திறந்தவராகக் காட்டலாம். அந்த வழக்கானது பின்வரும் காரணங்களில் எவையேனும் ஒன்றை அடிப்படையாக வைத்து தொடுக்கப்படலாம்.

1) அறிவித்தல் கொடுக்கப்படவில்லை அல்லது கொடுக்கப்பட்ட அறிவித்தல் முறைப்படி கொடுக்கப்படவில்லை அல்லது அந்த அறிவித்தல் குறைபாடு உடையது. (மங்களேஸ்வரி எதிர் செல்லதுரை 63NLR 88 கோமறைக் கழகம் என்ற வழக்கைப் பார்க்கவும்)
2) அறிவித்தலில் காட்டப்பட்ட விலை பொய்யானது அல்லது நல்லெண்ணத்துடன் குறிக்கப்படவில்லை
3) அறிவித்தல் வெளியிடப்பட்ட நேரத்திலும், அதன் பின் மூன்று வாரங்களும் உத்தேச வாங்குநர், அந்த மாவட்டத்துக்கு வெளியே இருந்தாரென்றும் அந்த மூன்று வாரங்கள் கழிந்ததன் பிறகும், உத்தேச விற்பனை முடிவடைய முன்னரும் நியாயமான காலத்துள் அவர் விற்பனை விலையை விற்பனையாளருக்குக் கொடுத்தாரென்றும் ஆனால் அதனை விற்பனையாளர் ஏற்றுக் கொள்ளவில்லையென்றும்.

முன்வாங்குரிமை சந்பந்தமாக வழக்குத் தாக்கல் செய்ய காலஎல்லை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. முன்னறிவித்தலின்றியோ அல்லது முன்னறிவித்தல் குறைபாடுடையது என்ற காரணத்தின் மீது தாக்கல் செய்யப்படும் எந்த வழக்கும், காணி விற்கப்பட்ட உறுதி பதிவு செய்யப்பட்ட ஒரு வருடத்தின் பின் தாக்கல் செய்யப்பட முடியாது,

சொரியல் பங்கை வாங்கியவர், அத்தகைய சொரியல் பங்கை முன்வாங்கும் உரித்துடையவராக இருந்தால் அவர் அத்தகைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொரியல் பங்கை வாங்குமிடத்து, அதே சொரியல் பங்கை வாங்கும் முன்னுரித்து உடையவர் வேறொருவர் முன்னுரித்துக் கோரி வழக்குத் தாக்கல் செய்ய இயலாது.

ஆவணங்கள் பதிவுக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இல "லிஸ் பென்டன்ஸ்" (நிகழ்வழக்கு) ஆனது பதியப்பட்டிருந்தாலொ முன்வாங்குரிமையை நிலை நாட்டுவதற்கான வழக்குத் தொ முடியாது அவ்விதம் "லிஸ் பென்டன்ஸ்" பதிவு செய்யப்பட்டது என்று நிரூபிப்பதற்கான சான்று சமர்ப்பிக்கப்படும் வரை நீதிமன்றம் எதிராள் எத்தகைய அறிவித்தலும் வழங்காது.

முன்வாங்கும் உரித்தைக்கோரி வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட எந்நேரத்திலும் நீதிமன்றம், தனது சொந்தக் கணிப்பின் பேரில் காணி விற்பவர் அதற்கு வாங்குபவர் கொடுக்க முன்வந்த தொகை என்று சட்டத்தில் 5ம் பிரிவின் கீழ் அறிவித்தலில் குறிப்பிட்ட தொகையை நீதிமன்றில் கட்ட வேண்டும் எனக் கட்டளையிடலாம். அவ்விதம் நீதிமன்றம் கட்டளையிடப்பட்ட தவணைக்குள் அல்லது மொத்தமாக மூன்று மாதத்திற்கு மேற்படாமல் நீதிமன்றம் நீடித்துக் கொடுக்கக் கூடிய தவணைக்குள் அப்பணத்தை, வழக்குத் தாக்கல் செய்வர் நீதிமன்றில் காட்ட வேண்டும். அப்படி அவர் செய்யாதவிடத்து அவரது வழக்கு "விளங்கி முடிப்பதற்காக இருக்கும் வழக்குப் பட்டியலில்" இருந்து நீதிமன்றில் நீக்கப்படலாம்.

முன்வாங்கும் உரித்துக்கோரி வழக்குத் தாக்கல் செய்தவர் விற்பமனை பற்றிய சட்டத்தின் 5ம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் முன்னறிவித்தலில் காணப்படும் தொகைக்கு அல்லது விற்பனை செய்யப்படிருப்பின் விற்பனை உறுதியில் காணப்படும் தொகைக்கு குறைந்த தொகையை நீதிமன்றில் காட்ட முடியாது. ஆனால் அவ்விதம் கூறப்பட்ட தொகை கற்பனையானது என அவர் நிரூபித்த காணியின் சந்தை விலையையும், உண்மையில் பங்கை வாங்கிய கொடுத்த விலையையும் நீதிமன்றம் பரிசீலித்து விலையை நிர்ணயிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆறுமுகம் எதிர் சோமசுந்தரம்" (6ONLR *16*) என்ற வழக்கில் நீதிமன்றம் விற்பனைப் பணம் எனக் குறிக்கும் தொகையை நீதிமன்றம் நிர்ணயிக்கும் திகதியில் செலுத்த வேண்டும் என்றும். தவறின் அவரது வழக்கு விசாரிக்கப்படமாட்டாதெனவும், வழக்காளி கட்டிய பணத்தை ஏற்று காணிச் சொந்தக்காரர் வழக்காளி பெயருக்கு உறுதி முடிக்கத் தவறுமிடத்து நீதிமன்றப் பதிவு அத்தகைய உறுதியை முடிக்கலாம் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கூட்டுச் சொந்தக்காரர், பின்னுரிமையாளர் எல்லோருக்கும் சமமான முன்வாங்குரிமையுண்டு. ஆகவே இவர்களிடையே போட்டி எழுமாயின் அவர்களில் எவர் கூடுதலான தொகையைக் கொடுக்க முன்வருகிறாரோ அதையே நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளும்.

பொன்னையா எதிர் பொன்னையா (6ONLR *415*) என்ற வழக்கில் கூட்டுச் சொந்தக்காரர் ஒருவர், பின்னவருக்குச் சொந்தமான பொது ஆனத்தில், தமது பங்கைக் கைமாற்ற எண்ணுகின்ற சந்தர்ப்பங்களில் அந்தக் கொடுக்கல் வாங்கல்களின் சந்தர்ப்ப சூழ்நிலைகளை நுணுகிப் பார்க்கவும் அந்தக் கொடுக்கல் வாங்கலானது உண்மையில் ஒரு விற்பனையா அல்லவா என்பதை முடிவுசெய்யவும் தேசவழமைச் சட்டத்தின் கீழான முன்வாங்குரிமை நோக்கங்களுக்கான நீதிமன்றத்திற்கு உரிமையுண்டு என்று தீர்க்கப்பட்டது.

## முன்வாங்குரிமை முடிவுறல்

*1)* ஆதனத்தை முன்வாங்குரிமைக்காரருக்குக் கைமாற்றுவதால்
*2)* அவ்வுரிமையை விட்டு விடுவதால்
*3)* அதை நெகிழவிடுவதால்
*4)* அதை இழந்து விடுவதால்
*5)* காலக்கடப்பினால்
*6)* சட்டச் செயற்பாட்டினால்
*7)* ஒன்று சேர்வினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண சாதனம்

மரண சாதனம் பற்றியும் மக்களிடையே பல்வேறு விதமான கருத்து வேற்றுமைகள் காணப்படுகின்றன. ஒருவர் உயிருடன் இருக்கும் போது தான் விட்டிறக்கும் சொத்துக்கள், தனது இறப்பின் பின்னர் யார் யாருக்கு, எவ்வாறு சென்றடைய வேண்டும் என்பதற்காக எழுதப்படுவதே மரண சாதனம் ஆகும் இதனை இறுதிவிருப்பாவணம் என்றும் அழைப்பார்கள். எனவே ஒருவர் இறந்ததன் பின்னர் மட்டுமே மரண சாதனம் செயற்படுத்தப்படல் வேண்டும். மரண சாதனத்தை எழுதியவர் உயிருடன் இருக்கும் வரை அந்த மரண சாதனம் எதுவித பெறுமதியுமற்றதாகும்.

மரண சாதனம் எழுத்தில் இருக்க வேண்டும் மரண சாதனத்தை நிறைவேற்றபவர் இரு சாட்சிகள் முன்னிலையிலும், பிரசித்த நொத்தாரிசு முன்னிலையிலும் ஒரே இடத்திலிருந்து ஒரே நேரத்தில் ஒப்பமிட்டிருக்கவேண்டும்.

ஒருவர் ஒன்றன் பின் ஒன்றாக எத்தனை மரண சதனமும் எழுதலாம். கடைசியாக எழுதப்படும் மரண சாதனம் மட்டுமே அவரது மரணத்தின் பின்னர் பெறுமதியுடையதாக இருக்கும் ரூபா (500000/=) ஐந்து இலட்சத்துக்கு மேற்பட்டபெறுமதியுடைய ஆதனங்கள் தொடர்பான மரண சாதனம் கட்டாயமாக நீதிமன்றில் எண்பிக்கப்படல் வேண்டும். மரண சாதனம் ஒன்ற முறையாக நிறைவேற்றப்பட்ட உறுதிக்கு இணையாகமாட்டாது.

காணி, வீடு, தோட்டங்கள் போன்ற அசைவற்ற ஆதனங்கள் தொடர்பில் மட்டுமே "மரண சாதனம்" எழுதப்படல் வேண்டுமென்ற வரையறை கிடையாது. பணம். நகைகள், காப்புறுதி, உட்பட அசையும், அசையாப் பொருட்கள் எவை தொடர்பிலும் கூட, மரண சாதனம் எழுதப்படலாம். இவை மட்டுமல்ல தனது உடல் உறுப்புக்களைத் தானஞ்செய்வது பற்றிக்கூட மரணசாதனம் எழுதி முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனக்குச் சொந்தமான ஆதனங்கள் பற்றிய முழுமையான விபரங்கள், அதற்குரிய உறுதிகள் கைவசம் இல்லாத நிலையில் ஆதனச் சொந்தக்காரர், தன் மரணத்தின் பின்னர் தனது சொத்துக்கள் எவ்வாறு சென்றடைய வேண்டுமென விரும்புகின்றாரோ அதனை மரண சாதனம் மூலம் வெளிப்படுத்தலாம்.

மரண சாதனம் இரு பிரதிகளில் மட்டுமே எழுதப்படுகிறது. காணிப் பதிவு அலுவலகத்துக்கு இது பதிவுக்காகக் கொடுக்கப்படுவதில்லை. எனினும் பிரசித்த நொத்தாரிசின் மாதாந்த அறிக்கை, வாராந்த நிரல் என்பவற்றில் மரண சாதனத்தின் இலக்கமும், அது நிறைவேற்றப்பட்ட திகதியும் குறிப்பிடப்பட்டு காணிப் பதிவு அலுவலகத்துக்குத் தெரியப்படுத்தப்படுவது வழக்கமாகும். யாரால் மரண சாதனம் எழுதப்பட்டது, யாருக்கு எழுதப்பட்டது, எந்தெந்தச் சொத்துக்கள் யார் யாருக்குச் சேர வேண்டும் போன்ற விபரங்கள் காணிப் பதிவு அலுவலகத்துக்குத் தெரியப்படுத்தப்படமாட்டாது.

மரண சாதனம் பதிவு செய்யப்படுவதில்லை என்பதுடன் மரண சாதனத்தின் ஒரு பிரதி (மூலப் பிரதி) மரண சாதனத்தை முடிப்பவரிடமும் (அதாவது ஆதனச் சொந்தக்காரரிடமும்) . மறுபிரதி (புறற்றக்கோல்) பிரசித்த நொத்தாரிசிடமும் இருக்கும். பொதுவில் மரண சாதனத்தை முடித்தவர் இறந்த பின்னர் அல்லது இறக்குந் தறுவாயில் அவரால் எழுதப்பட்ட மரண சாதனம் வெளிப்படுத்துப்படும்.

மரண சாதனத்தைப் பொறுத்த வரையில் தேசவழமைக்குட்பட்ட திருமணமான ஒரு பெண் தானே தனிய ஒப்பமிடலாம். அதற்கு அவளது கணவனின் சம்மதமோ, ஒப்பமோ அவசியமில்லை. அத்துடன் எந்த ஒரு உறுதிக்கும் சாட்சிக் கையெழுத்திடவும் அவளுக்கு கணவனின் அனுமதிதேவையில்லை.

## உறுதிகளுக்கு ஒப்பமிடல்

இன்று நாட்டுக்கு வெளியே வாழ்கின்ற பிள்ளைகளுக்குக்கூட சீதன உறுதி எழுதப்பட வேண்டிய தேவையுள்ளது. இச் சந்தர்ப்பத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வாறு சீதனத்தைப் பெறுபவர் கையெழுத்திடுவது என்ற கேள்வி எழுகின்றது. சீதனத்தையோ, நன்கொடையையோ பெற்றுக்கொள்பவர் குறித்த உறுதி எழுதப்படும் போது அவ்விடத்தில் இல்லாவிட்டால் அவர்கள் சார்பில், அவர்களின் வகைக்காக இன்னுமொருவர் கையெழுத்திடலாம். இவ்வாறு கையெழுத்திடுபவருக்கு குறித்த ஆதனத்தில் எதுவித உரித்தோ, சோந்தையோ கிடைத்து விடமாட்டாது. யார் பெயருக்கு சீதனம் நன்கொடை எழுதப்படுகின்றதோ அவரே அச்சொத்துக்கு உரிமையாளராகச் சட்டம் கருதும்.

ஆனால் சீதனத்தைக்கொடுப்பவர் உறுதி எழுதப்படும்போது அவ்விடத்தில் இருந்து கையெழுத்திடுதல் முக்கியம், சீதன உறுதிக்கு மட்டுமல்லாது எந்த உறுதி எழுதுவதானாலும் ஆதனத்தைக் கையளிக்கும் ஆதனச் சொந்தக்காரர்கள் நேரில் பிரசன்னமாகி நொத்தாரிசு, இரு சாட்சிகள் முன்னிலையில் கையொப்பமிடல் வேண்டும். இது ஒரு கட்டாய ஏற்பாடாகும். எனினும் ஆதனச் சொந்தக்காரர்கள் சார்பில் அவர்களின் அற்றோணித் தத்துவக்காரர் ஒப்பமிடலாம். இவ்வாறு ஒப்பமிடுபவரிடம் ஆதனச் சொந்தக்காரர் வழங்கிய வலிதான அற்றோணித் தத்துவப் பத்திரம் இருத்தல் வேண்டும். அதைப் பற்றி உறுதியில் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டுமென்பதுடன், அத்தாட்சிப்படுத்தப்பட்ட அற்றோணித் தத்துவப் பத்திரப் பிரதி ஒன்று இணைக்கப்படவும் வேண்டும்.

ஆதனம் ஒன்றை ஒருவர் விலைக்கு வாங்கும் போது எழுதப்படுவதே அறுதி உறுதியாகும். இத்தகைய அறுதி உறுதியில் (DEEP OF TRANSFER) ஆதனத்தைப் பணம் கொடுத்து வாங்குபவரும் கையெழுத்திட வேண்டுமா என்பதில் சிலர் மயக்கமாக உள்ளார்கள். அறுதி உறுதியில் ஆதனத்தை விற்பவர்கள் மட்டுமே கையெழுத்திடல் வேண்டும். ஆதனத்தை விலைக்கு வாங்குபவர், குறித்த அறுதி உறுதியில் கையெழுத்திட சட்டத்தில் ஏற்பாடு எதுவுமில்லை. இலட்சக்கணக்கான பணத்தைக் கொடுத்து அறுதி வாங்குபவர், உறுதிச் செலவையும் கொடுக்கின்ற போதும்கூட அந்த உறுதியில் தான் கையெழுத்திட முடியவில்லையே என்று விசனப்படுவது அர்த்தமற்றது. அறுதி வாங்குபவர்கள், உரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணத்தைக் கொடுத்து நொத்தாரிசு மூலம் உறுதியை எழுதுவிப்பதே கடமையாகும். அவர்கள் சாட்சியாகவும் ஒப்பமிடக்கூடாது.

ஆதனத்தை அறுதி வாங்குபவர் வெளிநாட்டில் இருப்பினும் கூட அவர் பெயரில் அறுதி உறுதி எழுதப்படலாம். ஆதனத்தை அறுதி வாங்குபவர் உறுதி எழுதப்படும் போது கட்டாயமாக நேரில் பிரசன்னமாக வேண்டுமென்று அவசியமில்லை

சீதன உறுதி, நன்கொடை உறுதி என்பவை போலவே குத்திகை உறுதியிலும் இரு தரப்பினரும் ஒப்பமிடல் வேண்டும். அறுதி உறுதி நிபந்தனை அறுதி உறுதி (CONDITIONAL TRANSFER), ஈட்டு உறுதி, ஒற்றி உறுதி போன்றவற்றுக்கு ஆதனச் சொத்தக்காரர்கள் மட்டுமே ஒப்பமிடல் வேண்டும். மறுதரப்பினர் ஒப்பமிடத் தேவையில்லை.

எந்த உறுதிக்கும் குறைந்தது இரு சாட்சிகள், சாட்சிக்காரர்களாக ஒப்பமிடல் வேண்டும் என்பதுடன் ஒரே இடத்தில், ஒரே நேரத்தில் நொத்தாரிசு முன்னிலையில், உறுதியை நிறைவேற்றுபவர் ஒப்பமிட அதனைத் தொடர்ந்து சாட்சிகள் ஒப்பமிடுவது அவசியம்

## உறுதிப் படிவங்கள் (DEED FORMS)

எந்த உறுதி எழுதும் போதும் மூன்று பிரதிகளில் (படிவங்களில்) எழுதப்படல் வேண்டும். முதல் பிரதி என்று சொல்லப்படும் "புறற்றக்கோல்" (PROTACAL) எழுதி முடித்த பின்னர் நொத்தாரிசின் பாதுகாப்பில் வைத்துப் பராமரிக்கப்படும். இது காணிப்பதிவு அலுவலகத்திற்கு அனுப்பப்படுவதில்லை. உண்மைப் பிரதி (ஒரிஜினல் - ORIGINAI) இணைப்பிரதி (ஒரிஜினல் (DUPLICATE) ஆகிய இரண்டும் நொத்தாரிசால் காணிப்பதிவு அலுவலகத்திற்கு அனுப்பப்படும்.

ஆதனப் பெறுமதிக்குரிய முத்திரைகள் ஒட்டப்படும் இணைப்பிரதி (டுப்பிளிக்கேற்) காணிப் பதிவு அலுவலகத்தில் அந்த நொத்தாரிசின் பெயரில் தனிக்கோவையாக கோவை செய்து பாதுகாத்து வைக்கப்படும். ஆதனச் சொந்தக்காரன், தான் பெற்றுக்கொண்ட ஒரிஜினல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதியைத் தொலைத்து விட்டால், மீண்டும் உறுதிக் கொப்பி எடுப்பதற்கு காணிப்பதிவு அலவலகத்துக்கு விண்ணப்பிப்பின் மேற்படி இணைப்பிரதியிலிருந்தே புதிய பிரதி தயாரித்துக் கொடுக்கப்படும்.

ஒரு ரூபா முத்திரை ஒட்டப்படும் உண்மைப் பரதி (ஓரிஜினல்) காணி பதிவு அலுவலகத்தில் உரிய புத்தகத்தில் அதற்கான பக்கத்தில் பதிவுசெய்யப்பட்டு இது சம்பந்தமான குறிப்புகளை அந்த உறுதியில் குறிப்பிட்டு பதிவாளர் ஒப்பமிட்டு அதன் பின்னர் குறித்த நொத்தாரிசிடம் அது மீள ஒப்படைக்கப்படும் இதுவே "ஒரிஜினல் உறுதி" எனப்படுவதோடு இதனை நொத்தாரிசிடமிருந்து ஆதனத்தின் புதிய சொந்தக்காரன் பெற்று தனது பாதுகாப்பில் வைத்திருக்க வேண்டும்.

எனவே ஆதனந் தொடர்பில் ஒரு உறுதி எழுதப்படும் போது சம்பந்தப்பட்டவர்கள் மூன்று பிரதிகளில் கட்டாயமாக ஒப்பமிடல் வேண்டும் (மரண சாதனமாயின் இரண்டு பிரதிகளில் ஒப்பமிடல் வேண்டும்) மூன்றுக்கு மேற்பட்ட பிரதிகளில் எக்காரணங் கொண்டும் ஒப்பமிடத் தேவையில்லை.

நொத்தாரிசு தான் கடமையாற்ற அனுமதிக்கப்பட்ட மாவட்டத்துக்கு வெளியேயுள்ள ஆதனம் தொடர்பான உறுதி எழுதும் போது, மேலதிகமாக ஒரு பிரதி எழுதுதல் வேண்டும். இது "அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி" (ATTESTED COPY) எனப்படும் எனவே வழமைபோல மூன்று பிரதிகளுக்குப் பதிலாக நாலு பிரதிகள் எழுதுதல் வேண்டும். எனினும் முதல் மூன்று பிரதிகளில் மட்டுமே சம்பந்தப்பட்டவர்கள் ஒப்பமிடுமாறு தேவைப் படுத்தப்படுவர் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியில் ஒப்பமிடத் தேவையில்லை.

## சட்டத்தரணிகள் உறுதி எழுதலாமா?

நாங்கள் சட்டத்தரணிகளிடம் சென்று உறுதி எழுதினாலும், அவர்கள் "பிரசித்த நொத்தாரிசு" என்றே குறிப்பிட்டு ஒப்பமிடுகின்றார்களே இதற்கு என்ன காரணம் என்று சிலர் சந்தேகம் எழுப்புகின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பிரசித்த நொத்தாரிசு" (NOTARY PUBLIC) என்ற தகைமை உடையவர்கள் மட்டுமே உறுதிகள் எதனையும் எழுதமுடியும். சட்டத்தரணி ஒருவர், "சட்டத்தரணி" என்ற கோதாவில் உறுதி எழுத முடியாது நீதிமன்றப் பதிவாளர், நீதிமன்றத்தின் கட்டளையின் பேரில் வழக்குத் தொடர்புடைய உறுதியை எழுதி நிறைவேற்றலாம்.

"சட்டத்தரணி" என்பது தனியான ஒரு பதவி "பிரசித்த நொத்தாரிசு" என்பது வேறான ஒரு பதவி. ஆனால் பெரும்பாலான சட்டத்தரணிகள் எல்லோரும், பிரசித்த நொத்தாரிசு ஆகவும் சத்தியப் பிரமாணம் எடுத்திருப்பார்கள். அதாவது ஒருவரே இரு பதவிகளையும் வைத்திருப்பார். வழக்கு நடவடிக்கைகளில் ஈடுபடும் போது அவர் சட்டத்தரணியாகவும், உறுதி எழுதும் போது பிரசித்த நொத்தாரிசாகவும் இரு வேறு கடமைகளை ஆற்றுகின்றார்.

சட்டத்தரணியாக இல்லாமல் தனியே "பிரசித்த நொத்தாரிசாக" மட்டும் கடமையாற்ற அனுமதிக்கப்பட்டவர்களும் இருக்கின்றார்கள். இவர்களும் உறுதி எழுதமுடியும். இதேவேளை பிரசித்த நொக்காரிசாக அங்கீகாரம் பெறாத சட்டத்தரணி ஒருவர் உறுதி எதனையும் எழுதமுடியாது.

எனினும் சட்டத்தரணி ஒருவர் இலங்கையிலுள்ள எந்த நீதிமன்றத்தில் தோன்றி வழக்காட முடியும் ஆனால் "பிரசித்த நொத்தாரிசு" குறித்த ஒரு மாவட்டத்தில் மட்டுமே கடமையாற்ற முடியும். உதாரணமாக யாழ்ப்பாண மாவட்டத்தில் கடமையாற்ற அனுமதிக்கப்பட்ட பிரசித்த நொத்தாரி யாழ்ப்பாண மாவட்டத்துக்குள் இருந்து கொண்டு இலங்கையின் எந்த பாகத்திலுள்ள ஆதனந் தொடர்பான உறுதியையும் எழுத முடியும். ஆனா குறிப்பிட்ட நொத்தாரிசு யாழ்ப்பாண மாவட்டத்துக்கு வெளியே சென்று உறுதி எழுத முடியாது அவ்வாறெனில் அவர் தனது தொழில் புரியும் மாவட்டத்தை மாற்றுவதற்கான அனுமதியைக் கோரிப் பெறவேண்டும். ஒரு நொத்தாரி ஏதாவது ஒரு மாவட்டத்தில் மட்டுமே தொழில் பார்க்க அனுமதிக்கப்படுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரிஜினல் உறுதி

உறுதி எழுதிக்கொள்ளும் பலர் தங்களுக்கு ஒரிஜினல் உறுதி உண்மை பிரதி வேண்டும் என்று வற்புறுத்துகின்ற போதும், எது ஒரிஜினல் உறுதி என் தெரியாமலே சங்கடப்படுகின்றார்கள் "உறுதிப்படிவங்கள்" என்ற தலைப்பி ஒரிஜினல் உறுதி பற்றி ஓரளவு விளக்கப்பட்டிருக்கிறது.

நொத்தாரிசால் எழுதப்படும் மூன்று பிரதிகளில் ஒரு ரூபா முத்திரை இடப்படும் (பிரிவிடல் உறுதிக்கு ஐந்து ரூபா முத்திரை) உறுதியையே ஒரிஜினல் உறுதி எனப்படும். ஒரிஜினல் உறுதி மட்டுமே காணிப்பதிவு அலுவலகத்தி பதிவு செய்ப்படும். காணிப்பதிவு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஒரிஜினல் உறுதி புதிதாக ஆதனத்தைப் பெற்றுபவருக்கு கொடுக்கப்படும்.

நொத்தாரிசால் தயாரிக்கப்பட்டு, பதிவு செய்யப்பட்ட ஒரிஜினல் உறுதி தொலைந்து போனால் புதிதாக ஒரு பிரதிக்கு காணிப்பதிவு அலுவலகத்திற் விண்ணப்பிக்கலாம். அந்த விண்ணப்பத்தின் மீது காணிப்பதிவு அலுவலகத்தால் வழங்கப்படும் பிரதியும் ஒரிஜினல் உறுதி என்றே அழைக்கப்படும் நொத்தாரிசால் சமர்ப்பிக்கப்பட்டு, கோவை செய்யப்பட்டு, பாதுகாக்கப்பட்டுவரும் இணைப்பிரதி (டூப்பிளக்கேற்) யிலிருந்தே காணிப்பதிவு அலுவலகத்தினால் தேவையான பிரதியைத் தயாரித்து தருவார்கள். மேற்படி இருவிதமான ஒரிஜினல் உறுதிகளும் சம வலிமையுடையவை என்ற போது இரண்டுக்கும் இடையே பலத்த வேறுபாடுகள் காணப்படும். நொத்தாரிசால் தயாரிக்கப்பட்டு, காணிப்பதிவு அலுவலகத்தில் பதிந்து கிடைக்கும் ஒரிஜின் உறுதியில் உறுதியை முடிப்பவர்கள், சாட்சிகள், நொத்தாரிசு ஆகியோர் உண்மையான கையொப்பம் இருக்கும். ஆனால் காணிப்பதிவு அலுவலகத்த பின்னர் விண்ணப்பித்துப் பெறப்படும் ஒரிஜினல் உறுதியில் உண்மையான கையொப்பங்கள் இருக்க மாட்டாது. ஒப்பமிடப்பட்டது (ஒப்பம்) அல்லது Sgd அல்லது என்று குறிப்பிட்டு பெயர்கள் எழுதப்பட்டிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் நொத்தாரிசு தயாரித்த ஒரிஜினல் உறுதி நொத்தாரிசின் பெயர் பொறிக்கப்பட்ட உறுதி எழுதும் விசேட படிவத்தில் காணப்பட்டும் ஆனால் காணிப்பதிவு அலுவலகத்திற்கு விண்ணப்பித்துப் பெறும் ஒரிஜினல் உறுதி இத்தன்மை கொண்டிராது.

சில பெற்றோர்கள் தங்கள் மகளுக்கு, திருமணத்தன்று சீதன வீட்டைக் கொடுக்க முடியாமல் இருப்பார்கள். திருமணத்தின் பின்னர் பொருத்தமான வீடு, அடக்கமான விலைக்குச் சந்தித்தால் அதனை விலைக்கு வாங்கி மகளுக்குச் சீதனமாகக் கொடுக்க விரும்புவார்கள். இச்சந்தர்ப்பத்தில் செலவுச் சுருக்கத்தைக் கருதி ஒரே உறுதியிலேயே அறுதி வாங்கி அதையே சீதனமாகக் குறிப்பிட்டுக் கொடுத்தால் என்ன என்று ஐயம் எழுப்புவேர் பலருள்ளனர்.

சீதனம் என்பது வேறு, அறுதி என்பது வேறு, ஒன்றுடன் ஒன்றைக் கலக்க முடியாது. பெற்றோர்கள் (சீதனத்தைக் கொடுப்பவர்கள்) முதலில் குறித்த ஆதனத்தை அறுதி வாங்கி தங்கள் பெயரில் அறுதி உறுதி முடித்தல் வேண்டும். அதன் பின்னர் மகளுக்கு (சீதனத்தை பெறுபவருக்கு) சீதன உறுதி மூலம் சீதனத்தைக் கொடுத்தல் வேண்டும். இவ்வேளையில் இரு தடவைகள் உறுதி எழுதும் செலவுகள் ஏற்படும் என்பதற்காக மாற்று வழிகளைக் கையாளக்கூடாது.

## இவையும் சில தகவல்கள் முடிக்குரிய வழங்கள் (Crown Grant)

முடிக்குரிய வழங்கல் மூலம் கிடைக்கப்பெறும் உரிமையானது களங்க மற்றது. முடியானது சட்டத்தின்படி தனது விற்பனையை கட்டுறுத்தவும், எதிர்த்து வாதாடவும் கட்டுப்பட்டுள்ளது. இங்கு வழங்கப்படும் உரித்தானது நல்ல உரித்தென ஒரு ஊகம் உண்டு. ஆனால் இவ் ஊகமானது முடிக்குரிய வழங்கலுக்கு எவ்வித பாதுகாப்பையும் அளிக்காது. வாங்குபவரது உரிமையை, எதிர் உரித்து கோருபவர் முடியிடம் இருந்து பெற்றாலே கைப்பற்ற முடியும் எனலாம். முடிக்குரிய வழங்கலானது ஆட்சி மூலம் பெற்ற உரிமையை பாதிக்கக் கூடியதல்ல. ஆனால் கண்டி மாகாணங்களில் அரசுக்கெதிராக ஆட்சியுரிமை கோர இயலாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முந்துரிமை அறிவித்தல் (Priority Notice)

எவரேனும் ஆளிடமிருந்து காணி தொடர்பான அக்கறையை அல்ல நன்மையை பெறுமதியான மதிபலனுக்கு வாங்கிய அல்லது வா உத்தேசித்துள்ள நபர் ஒருவர்.

அ) ஆவணம் நிறைவேற்றப்பட முன், கைமாற்றுபவரின் எழுத்தில் சம்மதத்துடன் அல்லது

ஆ) ஆவணம் நிறைவேற்றப்பட்ட பின், கைமாற்றுபவரின் எழுத்தில் இசைவின்றி

தனது ஆவணத்தை பதிவு செய்யும் கருத்தை காட்டும் அறிவித்தல் பதிவிற்காக பதிவாளரிடம் அனுப்பலாம்.

முன்னுரிமை அறிவித்தல் வலுவிலுள்ள காலத்தில், அவ் அறிவித்தது விபரிக்கப்பட்டுள்ள காணி தொடர்பாக ஏதேனும் நன்மையை அன் அக்கறையை வேறு ஆவணத்தை பதிவு செய்வதன் மூலம் கைமாறி பெறுபவர் அல்லது அவரின் கீழ் உரிமை பெறும் நபர் பெறுமதிய பிரதிபலனுக்குப் பெற்றால், அத்தகைய வேறு ஆவணம் இக்கட்டன சட்டத்தின் தேவைக்காக முன்னுரிமை அறிவித்தல் பதிவு செய்த போது பத் செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும்.

அதாவது முன்னுரிமை அறிவித்தலானது ஆவணம் பதியப்பட மு பதியப்பட்டிருப்பின் ஆவணனுானது முன்னுரிமை பதியப்பட்ட நேரத்தி பதியப்பட்டதாகக் கொள்ளப்படும். கைமாற்றுபவரின் எழுத்திலான சம்மதம் பெறப்பட்டு முன்னுரின் அறிவித்தலொன்று பதியப்பட்டுள்ளபோது அது வலிதுடைய காலத்தில் கைமாற்றுபவர் ஆனவர் கைமாற்றிப் பெறுபவரின் எழுத்திலான சம்மதமின் வேறு ஆவணங்களைப் பதிய முடியாது.

முன்னுரிமை அறிவித்தலைப் பெற்ற பதிவாளர் அதை ஏனை ஆவணங்களைப்போன்று பதிவு செய்வார். ஆனால் அதைத்தானே வைத்திருப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னுரிமை அறிவித்தலொன்று அது பதியப்பட்ட தினத்திலிருந்து வா களுக்கு வலுவிலிருக்கும் அக்காலத்தினுள், ஆவணத்தை கைமார் பவரினால் நிறைவேற்ற முன் அவரின் எழுத்திலான சம்மதத்துடன் அல்ல நிறைவேற்றிய பின் சம்மதமின்றி கைமாற்றிப் பெறுபவரினால் அல்ல அவரின் கீழ் உரிமைத்தொடர்பு பெறும் நபர் ஒருவரால் மேலும் 6 வார காலத்திற்கு நீடிக்கப்படலாம்.

முன்னுரிமை அறிவித்தல் வலுவுடைய காலத்தின் போது ஆவணம் பதியப்படாவிட்டால், முன்னுரிமை அறிவித்தல் இறுதியானதாகக் கொள்ளப்பட்டு, இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் எவ்வித விளைவையும் பெறாது.

## கைப்பற்றும் முந்துரிமை அறிவித்தல்

கைப்பற்றும் முந்துரிமை அறிவித்தலானது தீர்வைக் கடன்காரன் ஒருவரால் பதியப்படும் அறிவித்தலாகும். நிறைவேற்றல் ஆணை விடுக்கப்பட்டதும் தீர்ப்பு அதிருப்தியாக இருக்கும்போது தீர்ப்புக் கடன்காரன் ஒரு அறிவித்தலை பதிவிற்காக சமர்ப்பிக்கலாம். அதன் மூலம் அதில் விபரிக்கப்பட்டுள்ள காணி நிறைவேற்றல் ஆணையின் கீழ் கைப்பற்றலுக்கு பொறுப்பானது என்ற விளைவை ஏற்படுத்துவதாகும்.

இவ்வாறு கைப்பற்றும் முன்னுரிமை அறிவித்தலைப் பதிவதற்கு நிறைவேற்றல் ஆணை ஒன்று இருத்தல் வேண்டும்.

கைப்பற்றும் முன்னுரிமை அறிவித்தல் ஒன்று வலுவிலுள்ள காலத்தில், அதில் விபரிக்கப்பட்டுள்ள காணி சம்பந்தமான கைப்பற்றும் அறிவித்தல் பதிவு செய்யப்பட்டால் அக் கைப்பற்றும் அறிவித்தலானது கைப்பற்றும் முன்னுரிமை அறிவித்தலானது பதியப்பட்டபோது அல்லது கைமாற்றம் உண்மையாக நிகழ்ந்தபோது எது பின்னர் நடைபெற்றதோ, அத்தினத்தில் பதிவு செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைப்பற்றும் முன்னுரிமை அறிவித்தலைப் பெற்றதும் பதிவாளர் ஏனைய ஆவணங்களைப் போன்று பதிவு செய்வார். ஆனால் அதை தானே வைத்திருப்பார். அவ் அறிவித்தல் 6 வாரத்திற்கு வலுவிலிருக்கும் இதற்கு இடையில் மேலும் நீடிக்கப்படலாம். இவ் அறிவித்தல் நடைமுறையிலுள்ள காலத்தில் கைப்பற்றல் அறவித்தலானது நிறைவேற்றல் ஆணையின் கீழ் பதிவு செய்யப்படாவிட்டால் அறிவித்தலானது இறுதியானதாகப்பட்டு விளை வெதையும் ஏற்படுத்தாது. இவ் அறிவித்தல் வலுவிலுள்ள காலத்தில் பணப் பெறுமதிக்காக ஆள் ஒருவர் ஆதனத்தினை கொள்வனவு செய்தாலும் கூட அக் கொள்வனவு சட்ட முரணானதாகக் கருதப்படும்.

## தோமரைச் சட்டம் தொடர்பிலான முக்கிய வழக்கு

C.A.NO:-712/97 Rev/

L.A: 206/92

மாவட்ட நீதிமன்றம், கல்கிசை இல: 31/91/Rev

திருமதி பிறேமிலா ஷாலினி சிவநாதன்

60 1/1, நந்தன காடின்ஸ், கொழும்பு - 4

- வழக்காளி

- எதிர் -

C.E. கந்தப்பா

54. உருத்திரா மாவத்தை கொழும்பு - 5

- எதிராளி

C.E. கந்தப்பா

54, உருத்திரா மாவத்தை கொழும்பு - 6

- எதிராளி - மேன்முறையீட்டாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-எதிர் -

*1) திருமதி பிறேமிலா ஷாலினி சிவநாதன்*

*2) திரு. நிற்சிங்கம் சிவநாதன்*

*60 1/1, நந்தன காடின்ஸ், கொழும்பு - 4*

வழக்காளி - மேன்முறையீட்டு

பிரதிவாதிகள்

K.பாலகிட்ணர், J (மேன்முறையீட்டு நீதிமன்ற தலைவர்) அவர்களும்

L.H.G.வீரசேகர, J அவர்களும்

*விவாதிக்கப்பட்ட திகதி: 1993 மாசி 17*

*தீர்ப்பு வழங்கப்பட்ட திகதி: 1993 வைகாசி 28*

வழக்கறி...

வழக்கறிஞர்கள்: எஸ். மகேந்திரன், எதிராளி - மேன்முறையீட்டாளர் சார்பில்

எம். தேவசகாயம், வழக்காளி - மேன்முறையீட்டு பிரதிவாதி சார்பில்

வீரசேகர, J

அறிவு சார்ந்த கல்கிசை மாவட்ட நீதிபதி அவர்களின் 1992-08.25ம் திகதியகட்டளைக்கு எதிராக மீளாய்வு மற்றும் Leave to Appeal Application ஆகிய இரண்டும் ஒன்றாக எடுக்கப்பட்டு ஒரே தீர்ப்பாக கூறப்பட்டுள்ளது.

இந்த வழக்கின் விபரமாவது: 1 வது வழக்காளி 30.07.1991 அன்று கல்கிசை மாவட்ட நீதிமன்றில் 31/91/Re என்ற வழக்கை எதிராளிக்கு (மேன் முறையீட்டாளருக்கு) எதிராக தாக்கல் செய்திருந்தார். எதிராளிக்கு அழைப்புக் கட்டளை சேர்ப்பிக்கப்பட்டு அவர் (Proxy) பதிலி நியமனம் அணைத்து மறுமொழி அணைப்பதற்கு முன்னர் 1992.01.24ம் திகதியன்று வழக்காளி (மேன் முறையீட்டுப் பிரதிவாதி) தனது கணவனான நிற்சிங்கம் சிவானந்தனையும் முறைப்பாட்டாளராகச் சேர்த்துக் கொள்ளும் விதமாக தமது வழக்கின் பிராதைத் திருத்துவதற்கு முயன்றார். இவ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணப்பத்திற்கு எதிராளியால் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. வழக்காளி தேசவழமைச் சட்டத்திற்குட்பட்ட ஒரு திருமணமான பெண் என்பது பிரச்சினைக்குரிய விடயம் இல்லை. இந்த விண்ணப்பம் கூட்டு வழக்காளியாக நிற்சிங்கம் சிவானந்தனைச் சேர்ப்பதற்கு அனுமதிக்கும். 1992.08.25ம் திகதிய அறிவு சார்ந்த கல்கிசை

மாவட்ட நீதிபதியின் கட்டளை தொடர்பிலேயே செய்யப்பட்டுள்ளது. இந்த விடயங்கள் சம்மந்தமாக இரு பகுதியினருக்கும் இடையே எவ்வித பிரச்சினையுமில்லை.

தேசவழமைச்சட்டத்திற்குட்பட்ட ஒரு பெண் தனது கணவனின் துணையின்றி தனியே வழக்காடுவதற்கோ, வழக்காடப்படுவதற்கோ சட்டத் தகுதி பெற்றவளா? என்பதே முதலில் தீர்வு காணப்பட வேண்டி கேள்வியாகும். வழக்காளி ஒரு திருமணமான தமிழ்பெண் என்பதுடன் அவள் தேசவழமைச் சட்டத்திற்குட்பட்டவள் என்பதும் கூட்டு வழக்காளியாகச் சேர்க்கப்படவிருந்தவர் உயிருடன் இருக்கும் அவளது கணவர் தான் என்பதும் கேள்விக்கப்பாற்பட்ட ஒரு விடயமாகும்.

திருமண உரிமைகளும் வழியுரிமைகளும் கட்டளைச்சட்டத்தின் (Matrimonial Rights and Inheritance Ordinance) பிரிவு 50,52) ஆகியன எதுவும் தேசவழமைச் சட்டத்துக்கு ஏற்புடையனவாக இல்லை என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு சட்டவரையென்பதும் மேற்குறிப்பிட்ட சட்ட ஏற்பாடுகள் தேசவழமைச்சட்டத்திற்குட்பட்ட ஒரு திருமணமான பெண்ணுக் பொருந்தாது என்பதுடன் Casus Omisue ஒன்றை உருவாக்க முனைவது றோமன் டச்சுச் சட்டத்தினை நாடவேண்டிய தேவை ஏற்படும்.

இந்த விடயத்தில் Dr. H.W. தம்பையா அவர்கள் யாழ்ப்பாணத்த களின் சட்டங்களும், பழக்கவழக்கங்களும் (The Law and Customs the Tamils of Jaffna) என்ற தன்னுடைய புத்தகத்தில் இது பற்றிக் குறிப்பு கையில் தேசவழமைச்சட்டங்களில் பொருத்தமான சரத்துக்கள் (Provisions) குறிப்பிட்ட விடயத்திற்கு அமைவாக இல்லாதவிடத்து அதற்கீடாக உரோம டச்சுச் சட்டத்தினை பிரயோகிக்கமுடியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கூறியுள்ளார். அச்சொட்ட இதையேதான் நீதிமன்றங்கள் நீண்ட காலமாக கடைப்பிடித்து வந்துள்ள என்பதும் இது 1848ம் ஆண்டிலிருந்தே நடைமுறையில் இருந்து வருகின் என்று திரு. முத்துக்கிருஷ்ணா தன்னுடைய தேசவழமை என்ற புத்தகத்தி 263ம் பக்கத்தில் குறிப்பிட்டிருந்த "சின்னப்பொடியன்" எதிர் சின்னப்பிள்ள என்ற வழக்குக் குறிப்பேட்டில் இருந்து தெரிய முடிகிறது என்றும் இதன் திருமணமான பெண் யாருடைய துணையுமின்றி ஒரு வழக்கை தாக்கல் செய்யின் அந்த வழக்கு சட்ட ரீதியற்ற முறையில் கொண்டுவரப்பட்ட என்பதும் தேசவழமைச்சட்டத்திற்குட்பட்ட திருமணமான ஒரு தமிழ்ப் பெண் தனது கணவனின் துணையின்றி நீதிமன்றத்தில் பிரசன்னமாக முடியாது என்றும் அமைகிறது. இந்த நிலைப்பாடு சபாபதிப்பிள்ளை எதிர் சின்னத்தம்பி 50LNR 367 என்ற வழக்கில் பிரிவுக்கவுன்சிலால் (Privy Cound உறுதிப்படுத்தப்பட்டது. ஆகவே நாங்கள் தேசவழமைச் சட்டத்திற்குட்பட்ட திருமணமான பெண் ஒரு Feme Sole இல்லை என்பதிலும் Jurisi Personality அற்றவர் என்பதும் அவள் சுயமாக, தனியாக தன்னுடைய பெயரில் வழக்காடுவதற்கோ, வழக்காடப்படுவதற்கோ (வழக்காளியாக அல்ல எதிராளியாக) முடியாதவர் என்ற விடயத்திலும் நாங்கள் மிகத் தெளிவா உள்ளோம்)

தீர்வு காணவேண்டிய அடுத்த கேள்வி தேசவழமைச் சட்டத்துக்குட்பட்ட ஒரு திருமணமான பெண் தனது கணவனையும் ஒரு வழக்காளியாக சேர்த்துக் கொள்ளாமல் தானே தனியாகவும், சுயமாகவும் வழக்காட முடியுமா என்பதேயாகும்.

இதுவும் தற்போது ஏற்றுக்கொள்ளப்பட்ட சட்டமாக இருக்கின்றது. அதாவது தேசவழமைச் சட்டத்திற்குட்பட்ட ஒரு திருமணமான பெண் றோமன் டச்சு சட்டத்திற்கு உட்படலாம் என்பதுடன் Standi in Judico வின் மூலம் எவரு இல்லாதவிடத்தும், தனது கணவனின் உதவி இல்லாமல் அல்லது நீதிமன்றத்தின் (Leave of Court) முன் அனுமதி இது சம்பந்தமாகப் பெறாமலும் சுயமாக, தனித்து அவளால் வழக்குத் தொடருவதற்கோ, வழக்கை எதிர்த்து வாதாடுவதற்கோ முடியாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதும் ஆகும். (இப்ராகிம் எதிர் அன்னம்மா 1982 பகுதி 11 S.L.R 633 பார்க்க)

இந்தவழக்கில் தேசவழமைச்சட்டத்திற்குட்பட்டதிருமணமான ஒருபெண் தனது கணவனைச் சேர்க்காமலும் அல்லது நீதிமன்றின் முன் அனுமதியை முதலிலேயே பெற்றுக் கொள்ளாமலும் வழக்கைத் தாக்கல் செய்துள்ளார் இதன் மூலம் ஒரு Locus Standi in Judico இன்றி தனித்த ஒரு நிலையில் வழக்காளி 30.07.1991ல் வழக்கைத் தாக்கல் செய்துள்ளபடியால், இது செல்லுபடியான முறையில் தாக்கல் செய்யப்படவில்லை என்பது தெளிவாகிறது. எனவே 30.07.1991ல் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு சட்டரீதியற்ற முறையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆகவே ஒரு வழக்கைத் திருத்தம் செய்வதானால் அந்த வழக்கு நீதிமன்றத்தில் செல்லுபடியான முறையில் முன்பு தாக்கல் செய்யப்பட்டிருக்க வேண்டும். Locus Standi in Judico இல்லாத ஒருவர் சட்ட முறையற்ற ஒரு வழக்கைத் தாக்கல் செய்தால் அது ஒரு வழக்காக அமையாது. ஆகவே செல்லுபடியற்ற முறையிலான ஒரு வழக்குக்கு, திருத்தம் இருக்க முடியாது என்ற முடிவுக்கு இட்டுச் செல்கிறது. இந்த ஒரு தனிக்காரணத்தினாலேயே நீதிமன்றின் முன்னிலையில் செல்லுபடியற்ற ஒரு வழக்கு இருக்கையில், அதைத் திருத்துவதற்கான விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

24.01.1992ம் திகதிய விண்ணப்பமானது, செல்லுபடியற்ற முறையில் தாக்கல் செய்யப்பட்டு செல்லுபடியற்ற நிலையில் நீதிமன்றின் முன் உள்ள ஒரு வழக்கை (Plaint) திருத்துவதற்கானதாகும். கணவனையும் வழக்காளியாக சேர்க்காமல் தானே தனிய வழக்குத்தொடர அதற்குரிய அனுமதியை முன்கூட்டியே பெறப்படவில்லை அன்றி பின்னராவது இதற்குரிய அனுமதியைப் பெற்றிருக்கலாம். அப்படி பின்னராவது இந்த அனுமதியைப் பெற்றிருந்தால் செல்லுபடியற்ற குறித்த வழக்கு இவ்வனுமதியுடன் செல்லுபடியுள்ளதாக மாற்றப் பட்டிருக்க முடியும் தேவையானது என்னவெனில் தெளிவாக நீதிமன்றத்தின் முன்னே உள்ள செல்லுபடியற்ற ஒரு வழக்கை திருத்த வேண்டுமென்பதே மறுமொழியைத் தாக்கல் செய்யும் முன்பே வழக்கைத் திருத்துவதற்குரிய கோரிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைக்கப்பட்டது என்ற ஒரு காரணத்தினால் செல்லுபடியற்றவழக்கே பாதிப்பாக இருக்கும்போது இப்படியான சந்தர்ப்பத்தில் எதிராளி மேன்முறையீட்டாளருக்கு பாதிப்பு ஏற்படமாட்டாது என்று நியாயமாகக் கூற முடியாது.

ஒரு அனுமானத்துக்கு ஒரு வழக்கில் தவறான ஒரு எதிராளிய தவறுதலாக குறிப்பிடப்பட்டிருப்பதை கவனத்துக்கு எடுக்கவும் தவறுக அன்றிபழையாகவோதானும் தவறான ஒரு எதிராளிக்கு எதிராக ஒருவ தாக்கல் செய்வதனால் குறித்த வழக்கில் அவ்வெதிராளிக்கு வெளிப் பொதப்பு ஏற்பட்டிருக்காவிட்டாலும் கூட அது ஒரு செல்லுபடியற்ற வட என்பதுடன் அந்தப்பாதிப்பானது இந்த செல்லுபடியற்ற வழக்கில் தான் உருவாகியது. எவ்வாறாயினும் குடியியல் சட்டக்கோவையில் 18ன் தாக்கத்தினை கவனத்தில் எடுத்ததும் அல்லாமல் பிரிவு 18ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆகவே ஒரு வழக்கைத் திருத்தம் செய்ய அந்த வழக்கு நீதிமன்றத்தில் செல்லுபடியான முறையில் முன்பு செய்யப்பட்டிருக்க வேண்டும். Locus Standi in Judico இல்லாத ஒருவர் சட்ட முறையற்ற ஒரு வழக்கைத் தாக்கல் செய்தால் அது ஒரு அமையாது. ஆகவே செல்லுபடியற்ற முறையிலான ஒரு வழக்குக்கு இருக்க முடியாது என்ற முடிவுக்கு இட்டுச் செல்கிறது. இந்த ஒரு தனிக்காரணத்தினாலேயே நீதிமன்றின் முன்னிலையில் செல்லுபடியற்ற ஒரு இருக்கையில், அதைத் திருத்துவதற்கான விண்ணப்பம் தள்ளுபடி பட்டிருக்க வேண்டும்.

24.01.1992ம் திகதிய விண்ணப்பமானது, செல்லுபடியற்ற தாக்கல் செய்யப்பட்டு செல்லுபடியற்ற நிலையில் நீதிமன்றின் முன் உள்ள வழக்கை (Plaint) திருத்துவதற்கானதாகும். கணவனையும் வழக்க நிசேர்க்காமல் தானே தனிய வழக்குத்தொடர அதற்குரிய அனுமதியை முன்கூட்டியே பெறப்படவில்லை அன்றி பின்னராவது இதற்குரிய அனுமதியை பெற்றிருக்கலாம். அப்படி பின்னராவது இந்த அனுமதியைப் பெற்றி செல்லுபடியற்ற குறித்த வழக்கு இவ்வனுமதியுடன் செல்லுபடியும் மாற்றப்பட்டிருக்க முடியும் தேவையானது என்னவெனில் தெளிவாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதிமன்றத்தின் முன்னே உள்ள செல்லுபயற்ற ஒரு வழக்கை திருத்த வேண்டுமென்பதே மறுமொழியைத் தாக்கல் செய்யும் முன்பே வழக்கை திருத்துவதற்குரிய கோரிக்கை வைக்கப்பட்டது என்ற ஒரு காரணத்தினால் செல்லும் வழக்கே பாதிப்பாக இருக்கும்போது இப்படியான சந்தர்ப்பத்தில் - மேன்முறையீட்டாளருக்கு பாதிப்பு ஏற்படமாட்டாது என்று நியாயமாக முடியாது.

ஒரு அனுமானத்துக்கு ஒரு வழக்கில் தவறான ஒரு எதிராளியின் பெயர் தவறுதலாகவோ அன்றி பழையாகவோ தானும் தவறான ஒரு எதிராளிக்கு எதிராக ஒரு வழக்கைத் தாக்கல் செய்வதனால் குறித்த வழக்கில் அவ்வெதிராளிக்கு வெளிப்படையாக பொதப்பு ஏற்பட்டிருக்காவிட்டாலும் கூட அது ஒரு செல்லுபடியற்ற வழக்காகும் என்பதுடன் அந்தப்பாதிப்பானது இந்த செல்லுபடியற்ற வழக்கில் இருந்தே தான் உருவாகியது. எவ்வாறாயினும் குடியியல் சட்டக்கோவையின் பிரிவு 18ன் தொக்கத்தினை கவனத்தில் எடுத்ததும் அல்லாமல் பிரிவு 18ன் கீழ் குறித்த திருத்தத்தை நியாயப்படுத்த முடியாது என்ற முடிவையும் எடுத்து திருத்தப்பட்டவாறு குடியியல் சட்டக் கோவை பிரிவு 93ல் வழங்கப்பட்ட வரையறைகளையும் கவனத்தில் கொள்ளாமல் குடியல் சட்டக்கோவை பிரிவு 839ன் கீழ் விண்ணப்பத்தினை அனுமதிப்பதற்கு அறிவு சார்ந்த நீதிபதி அவர்கள் தன்னை முற்றாகவும் தவறாகவும் வழிநடப்பித்து விட்டார்.

எமது நோக்கில் மாவட்ட நீதிமன்றம் என்பது ஒரு சட்ட நீதிமன்றம் மட்டுமேயன்றி அது ஒரு சமூக நீதிமன்றம் அல்ல. அத்துடன் அது தனக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை குழுக்கள் மத்தியிலே தவறான அபிப்பிராயங்களை ஏற்படுத்தவோ அல்லது கவனத்தில் எடுக்கவோ அன்றி அவசியம் எற்படும் போது நீதியை இறுதிவரை நிலை நாட்டவும் அல்லது நீதிமன்றம் தனக்கரிய அதிகாரங்களை தவறாக பிரயோகிப்பதை தடுப்பதற்குமேயாகும். இந்த குறிப்பிட்ட வழக்கில் தமக்களிக்கப்பட்ட அதிகாரம் நீதியை இறுதிவரை நிலை நாட்டுவதற்கான பிரயோகத்திற்கோ அன்றி Locus Stand in Persons in



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Judico இல்லாத நபர் வழக்கொன்றை தாக்கல் செய்யக்கூடியவாறு நீதிமன்றில் செயற்பாடுகளை துஷ்பிரயோகம் செய்யவோ என்பதை என்னால் அறிய முடியவில்லை . செல்லுபடியற்ற ஒரு வழக்கை திருத்தவே முடியாமல் செல்லுபடியற்ற ஒரு வழக்காகவே தொடாந்து இருக்கும்.

மேற்படி காரணங்களால் அறிவு சார்ந்த கல்கிசை மாவட்ட நீதிபதி அவர்களின் 25.08.1992ம் திகதிய கட்டளையை புறம் தள்ளி, வழக்கைத் திருத்துவதற்காக 24.01.1992ம் திகதிய விண்ணப்பம் மறுக்கப்படுகின்றது.

30.07.1991ம் திகதிய வழக்கை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கின்றேன்.

(ஒப்பம்) L.H.G.வீரசேரது
மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி.

K.பாலகிட்ணர் J நானும் இணங்குகிறேன்

(ஒப்பம்) S. பாலகிட்ணர்
மேன்முறையீட்டு நீதிமன்ற தலைவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் காணிக்கைகள்...



தோற்றம்
03
07
1944

மறைவு
12
07
2022

பச்சிலைப்பள்ளி பிரதேச மூத்த வர்த்தகரும்
குகன் ஸ்ரோர் முன்னைநாள் உரிமையாளருமான

அமரர்

## மயில்வாகனம் வினாசித்தம்பி

*பொன் மலர்ந்த முகமும் புன்சிரிப்பும் கொண்டவரே*
*மீளாத்துயில் கொண்டு எம்மை*
*ஆறாத்துயரில் ஆழ்த்திச் சென்றீரோ*
*கலையாத நினைவுகளுடன் உதிரும் கண்ணீர் கொண்டு*
*அர்ச்சித்து உங்கள் ஆத்மா சாந்தியடைய*
*எம் கண்ணீர்த் துளிகளை காணிக்கையாக்குகின்றோம்*

**துயரில் - திலகேஸ்வரன் ( தயா)** மாசார்.பளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் காணிக்கைகள்...



தோற்றம்
03
07
1944

மறைவு
12
07
2022

**பச்சிலைப்பள்ளி பிரதேச மூத்த வர்த்தகரும்**
**குகன் ஸ்ரோர் முன்னைநாள் உரிமையாளருமான**

அமரர்

# மயில்வாகனம் வினாசித்தம்பி


*பொன் மலர்ந்த முகமும் புன்சிரிப்பும் கொண்டவரே*
*மீளாத்துயில் கொண்டு எம்மை*
*ஆறாத்துயரில் ஆழ்த்திச் சென்றீரோ*
*கலையாத நினைவுகளுடன் உதிரும் கண்ணீர் கொண்டு*
*அர்ச்சித்து உங்கள் ஆத்மா சாந்தியடைய*
*எம் கண்ணீர்த் துளிகளை காணிக்கையாக்குகின்றோம்*

**துயரில் - திலகேஸ்வரன் ( தயா)** மாசார்.பளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்சம்




* அமரரைக் குறிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

'என்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு"

அல்லிப்பளையில் பிறந்து புலோப்பளையில் திருமணமாகி பளைநகரில் பிரபல பலசரக்கு வாணிபமான குகன் ஸ்ரோர்ஸ் வர்த்தக நிலையத்தின் உரிமையாளரான திரு வினாசித்தம்பி அவர்களின் இறுதி நாட்களில் அவர் நோய்வாய்ப்பட்டிருந்த காலப் பகுதியில் உடனிருந்து உதவிய தயா(மாசார்) தருமகுலம், திருமதி சண்முகம் விக்கினேஸ், குஞ்சக்கா சுரேஸ், நிமலரங்கன் ஆகியோரின் பணி மறக்க முடியாதது. அக்காலத்தில் உதவிய வைத்தியர்கள், தாதியர்கள், D3 அந்திமகாலசேவை நிறுவனத்தினர் அவரது இறப்புச் செய்தி கேட்டு ஓடோடி வந்து உதவியவர்கள், உணவளித்தவர்கள், இறுதிக் கிரிகை அஞ்சலிக்காக எம் இல்லம் வந்து அஞ்சலித்தோர், தொலைபேசி வாயிலாக துயர் பகிர்ந்தோர், கண்ணீர் அஞ்சலிகள், நினைவு பனர்கள் வெளியிட்டோர், மலர்வளையம் தந்தோர், இறுதிச் சடங்கு மேற்கொண்ட குருமார், ஓதுவாமூர்த்திகள், பறை முழங்கியோர் பின்னர் தொடராக காடாற்றல் கிரிகைகளிலும் அந்தியேட்டி, வீட்டுக் கிருத்தியம் ஆகியவற்றிலும் கலந்துகொண்ட அனைவரிற்கும் எமது உளமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

"காலத்தினால் செய்த நன்றி சிறிது எனினும்
ஞானத்தின் மாணப் பெரிது"




**இங்ஙனம்**
**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கீதாசாரம்

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது,
எது நடக்க இருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய், எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய் அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய், அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ, அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ, அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்.

"இதுவே உலக நியதியும்.
எனது படைப்பின் சாராம்சமாகும்"

- பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் -

Print@Mickey-Chava
021-2-27-17-07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org